உ

சிவமயம்

திருமூலநாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

# கருக்கிடைவைத்தியம்-௩௱

இஃது

மதுரை புதுவை சென்னை இச்சங்கங்களில்

தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய

களத்தூர்

வேதகிரிமுதலியார் - குமாரர்கள்

## ஆறுமுகமுதலியாராலும்

ஆயுள்வேதபாஷ்கரன்

## கந்தசாமிமுதலியாராலும்

பல யேட்டுப் பிரதிகளைக்கொண் டாராய்ந்து

[illegible] பிழையறப்பரிசோதித்து

## வ-வீராசாமிநாயகரால்

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார்-குமாரர்

## பரசுராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது

௧௮௬௮ - ஜனவரிமீ

REGISTERED
COPYRIGHT.
1868

உ

சிவமயம்

திருமூலநாயனார்
திருவாய்மலர்ந்தருளிய

# கருக்கிடைவைத்தியம்-௬௱

இஃது
மதுரை புதுவை சென்னை இச்சங்கங்களில்
தமிழ்த் தலைமைப் புலமை நடாத்திய
களத்தூர்
வேதகிரிமுதலியார் - குமாரர்கள்
**ஆறுமுகமுதலியாராலும்**
ஆயுள்வேதபாஷ்கரன்
**கந்தசாமிமுதலியாராலும்**
பல யேட்டுப் பிரதிகளைக்கொண் டாராய்ந்து
பிழையறப்பரிசோதித்து

**அ-வீராசாமிநாயகரால்**
திருவொற்றியூர்
இருசப்பமுதலியார்-குமாரர்
**பரசுராமமுதலியாரது**
பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது

௧௮௬௮௵ - ஜனவரி௴

REGISTERED
COPYRIGHT.
1868

## விளம்பரம்.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில்-கஅகூஎ(௵ வது) ஆக்டின் (உய-வது) பிரிவினில் (கூ-வது) விதியின் பிரம் காப்பிறயிட்பெற்றிருக்கிறபடியால், இதை ஒருவரும் அ[illegible]வுங்கூடாது, மற்றொரு பாஷையில் மொழி பெயர்க்ககடாது, அப்படிக்குப் போடுவாராகில் மேற்கண்ட ஆக்டில்செப்பியிருக்கிறபடி கோர்ட்டின் மூலமாய்த் தண்டனை விதிக்கப்படும்.

இவைகளெல்லாம் சென்னபட்டணத்தில் மீங்கான் சலடக்கடுத்த பாபன்ஸ்ட்ரீட்டில் (௱அச)-வது நெம்பருடைய புத்தகஷாப்பில் சிலவைத்தியங்களும் பெரியோர்களுக்குபயோகமான புத்தகங்களும் விற்கப்படும் வேண்டுபவர்கள் இதனடியிற்கையொப்பமிட்டிருப்பவரிடத்திற் பெற்றுக்கொள்ளலாம்

### இப்போதுபதித்திருக்கும் புத்தகங்களாவன

| | |
|---|---|
| போகமுனிவர் | எ௱ |
| கம்பராமாயணவசனகாண்டம் | எ |
| ஸ்ரீராமர்அசுவமேதபருவம் | |
| மயிலிராவணன்சரித்திரம் | |
| இரணியவாசகப்பா | |
| திருமூலர்வயித்தியகாண்டம் | [illegible] |
| போகர்ஞானசூத்திரம் | [illegible]௱ |
| அகஸ்தியர்வயித்தியகாண்டம் | கூ௱ |

### இப்போதுபதிப்பித்துவரும் புத்தகங்களாவன

| | |
|---|---|
| அகஸ்தியர்நிகண்டு | ௱யகூ |
| போகமுனிவர்நிகண்டு | ௬உ௱ |
| போகமுனிவர்வைத்தியகாவியம் | ௬ |
| தேரையர்பெருநூல்வயித்தியகாவியம் | ௬ருஎ |
| தேரையர்கரசலை | கூ௱ |
| தேரையர் | ரு௱ |
| தன்வந்திரிலேகியம் | ரு௱ |
| தன்வந்திரிபற்பம் | ரு௱ |
| தன்வந்திரிசெந்தூரம் | ரு௱ |
| தன்வந்திரிகிருதம் | ரு௱ |
| தன்வந்திரிதயிலம் | ரு௱ |
| திருமூலநாயனார்வையித்தியகாவியம் | ௬ |

சென்னபட்டணம்
௬அகூஅ(௵)
ஜனவரி௴

இங்ஙனம்
☞ அ. வீராசா[illegible]

சிவமயம்.

# அட்டவணை.

5·402


| பெயர் | பக்கம் |
|---|---|
| அங்கஞனம்... ... | உ |
| அமிர்தம்உண்டும்சாகுதல்... | அ |
| அமுரியில்மிளகு... ... | உஉ |
| அண்டவுற்பத்தி... ... | உகூ |
| அது-அ ரு ஜால-ரு-ா ரு... ... ... * | ருஅ |
| அநாகதவிசுத்தி- - | சஅ |
| அண்டவுற்பத்தி - | சூசு |
| அநாகதம்- - - | சூஎ |
| அங்குலம்- - | சூஅ |
| ஆண்பெண்அலி இரட்டைப் | ரு |
| ஆக்கினைக்குருபத்தி- | சகூ |
| ஆறுவிதகர்ப்பநோயால் ஸ்ரீமலடு ... ... * | ௰சூ |
| இலங்கனமிடுதல் ... ... | ௰ |
| இரத்தமூலம் ... | ௰௩ |
| இரத்தமேகம் ... ... | ௰ச |
| இணங்கன்செந்தூரம் | எஅ |
| இரும்புருக்கு- - | எஉ |
| உபரசங்கள்சத்து - | அஉ |
| உமிநீர்க்குமியாற்சாவு... ... | கூ |
| உபதேசம் ... ... | உகூ |
| ஊத்தினருணம்காமதீர்பட | சச |
| ஐயகுணம்காய்தல் ... | சூ |
| ஐயகுன்மம் ... ... | ௰ச |
| ஐயசூலைநோய்... ... | ௰ரு |
| ஐயபித்தசூலைநோய் ... | ௰சூ |
| ஐயவாதசூலைநோய்... ... | ௰சூ |
| ஒராண்டிலு மீராண்டிலுஞ்சாகுங்குறி ... ... * | எ |
| கர்ப்பபச்சன்னிகுணம்... | ௰எ |
| கண்ணில்நோய்வருதல் ... | ௰எ |
| கண்ணோய்தீருமருந்து .. | ௰அ |
| கல்லுப்புக்கட்டு - | ருரு |
| கல்லுப்பு- - | ருஎ |
| கன்னிப்பலன் ... ... | ருரு |
| கற்பந்தின்னவயது- - | சஉ |
| கல்லுப்புக்கட்டு - | அக |
| க மாதத்திற்சாகுங்குறி ... | அ |
| காயசித்தியாக ... ... | ௰ங |
| காடிகாரச்செந்தூரம் | எஅ |
| கிராணிக்கழிச்சலிலாறுவிதம் | ௰உ |
| குன்மம்குஷ்டம்கிராணி மூலந்தீர ... ... * | ௰சு |
| குமரிக்கற்பம் ... ... | உக |
| குளிகை-ருாருய - | ருஅ |
| குளிகை - - | ருரு |
| குருபதம்- - | சூஅ |
| குளிகையின்விபரம்... - | ருசு |
| குட்டநோய் பதினெட்டானகாரணம்... ...* | ௰அ |
| கெந்திசத்து- - | சூஉ |
| கெந்தகச்சத்துகள்- - | சூஉ |
| சத்துக்கள்சோதிக்கவகை | கருசு |
| சமாதி- - - | ருகூ |
| சத்துசோதிக்கமித்திரம் - | சூஉ |
| சக்கரம்- - - | சூஎ |
| சகலநோய்களுந்தீரகுருச்சிந்தூரம்... ... * | ௰கூ |
| சரக்குகட்டு- - - | அ௰ |

| பெயர் | பக்கம் |
|---|---|
| சமாதிலேகியம் - | அரு |
| சாரக்கட்டு - | ருஅ |
| சாரகுரு - | ருக |
| சாரச்செயநீர் - | எசா |
| சாரக்கட்டு - | அய |
| சாகாக்குறிசாகுங்குறி... | ...சா |
| சாகாக்குறிசாகுங்குறி... | ...கூ |
| சாகாக்குறியும்சாகுங்குறியும் | அ |
| சிக்காநீர்மேகம்கல்லெரிப்புமேகம்... ... * | யரு |
| சித்தியில்லான்- - | சரு |
| சித்திகாண்பலன் - | சசா |
| சினக்கட்டு - | ருஅ |
| சினக்கட்டுவெண்காரக்கட்டு | அக |
| சிமேகம்வாயுசூலைமேகம்பலநோய்... ... ...* | ய |
| சுவாதிட்டானம்- - | சஅ |
| சுகஜன்னிவருங்காரணம் ... | யக |
| சுவாதிட்டானம்- | -சாசா |
| சுரம்-தோஷம்சன்னிவாயுகர்ப்பசூலைதிர ... * | யஅ |
| சூதசுத்தி- - | -எக |
| சூதகட்டு - | எக |
| சூதம்-நாகம்அயந்தங்கச்செந்தூரம்-- -- * | எசா |
| செயநீரில்கட்டுசரக்கு - | அய |
| சொர்க்கம் ... | ருரு |
| தற்சிறட்டுப்பாயிரம்... | ...க |
| தசநாடிகள்இருப்பிடம்... | கூ |
| தமரோரிமேகம்நீர்த்துளிமேகம் ... ... ...* | யரு |
| தங்கக்குருமுறை- - | ருச |
| தங்ககுரு - - | சாய |
| தங்கக்குருவினால்காயசித்தி | சாக |

| பெயர் | பக்கம் |
|---|---|
| தங்கச்செம்பு - | சுரு |
| தசநாடியில் தசவாயுவும் திரிநாடியும்- சு-சக்கரம் ரு-மண்டலம்... ... * | ங |
| தலைமுழுக... ... ... | உக |
| தங்ககுரு- - | -எகூ |
| தாம்பரபற்பம் - | ருஎ |
| தாபசுரமும்சீதசுரமும்... | எ |
| திருமூலர்செவனம்போன | சஉ |
| திருமூலர் - - | ருய |
| திருடன்குளிகைவாங்கின் து | ருக |
| சு-திங்களிலும்உடனேயும்சாகுங்குறி ... ...* | அ |
| துரிசிகுரு - | ருக |
| துருசிசுன்னம் | அய |
| துரிசிசாரம்சலுப்புசெந்தூரம் - - * | எஅ |
| தன்மார்க்கம் ... ... | ருரு |
| தேவாதிகள்பூசம்சரக்குவிபரம்... ... ... * | ருஉ |
| தேகபஞ்சபூதம்... | ரு |
| தேவிதுதி ... ... | க |
| தோஷதிறக்குறி ... ... | எ |
| நன்மார்க்கம் ... ... | ருரு |
| நாள்மூன்றிலும்பதினைந்திலும்சாகுங்குறி ... * | அ |
| சு - நாளிற்சாகும்மரணதோஷக்குறி... ... * | அ |
| நாசம்வரலாறு ... ... | ருரு |
| நாகசொர்க்கம்... ... | ...ருரு |
| நாகசுத்தி- - | -எரு |
| நாககட்டு - | எரு |
| நாகளங்குசெந்தூரம் - | எசா |
| நாகச்செயநீர்- - | எஎ |

| பெயர் | பக்கம் |
|---|---|
| நர்கருரு - - | -௭௮ |
| நூல்விபரம்ஐந்திலட்சம் | ௩௭ |
| நூல்விவரம்- - | -௪௩ |
| நூல்வழி - | ௫௰ |
| நூல்கோர்வை - | ௫௰ |
| பஞ் சதபிண்டோற்பத்தி .. | ௩ |
| பஞ்சமூலிகைகற்பம் ... | ௨௨ |
| பத்தியம்... ... ... .. | ௨௩ |
| பற்பம் ... ... ... | ௨௯ |
| பஞ்சபூதவேராஞ்சம்... | ௨௭ |
| பஞ்சபொறிவித்தை - | -௪௩ |
| பரிச்செம்பினல்காயசித்தி | ௯௩ |
| பசிகெடும்பித்துநாசம்இ<br>ளைச்சலர்ம்கழிச்சலாம் * | ௰௨ |
| பிறக்கும்போதேநோய்<br>பிறந்தது ... ... * | ௩ |
| பிண்டவுற்பத்தி - .. | ௬௪ |
| பிண்டவுற்பனம் .. ... | ௨௪ |
| பித்தகுன்மம் ... ... | ௰௪ |
| பித்தமேகநிறக்குறி ... | ௰௨ |
| பித்தகுணம்கைத்தல் ... | ௬ |
| பிணியரிடம்போகாக்குறி<br>இட்டாக்குறி தீ-குறி... * | ௮ |
| பித்தருலைநோய்... ... | ௰௫ |
| பூசையினங்காணல். | -௪௫ |
| பூசைவிபரம் ... ... | ௩௫ |
| பசிக் கொண் டிருக்கை<br>யில்சாகுதல்... ... * | ௰௧ |
| மந்தன் ஊமைகுருடன் ... | ௨ |
| மந்தம்வருதல் ... ... | ௯ |
| மலசலக்கட்டுமேல்மூச்சு<br>இரண்டும்உருத்திரவாயு. | ௰௧ |
| மணிபூரகம் - - | ௪௮ |
| மணிபூரகம் - - | ௬௬ |
| மலட்டுபுழுவால்மலடு... | ௰௯ |
| மகாதோஷக்குறி... ... | ௯ |
| மதுமேககுணம்... ... | ௰௪ |
| மிளகுகற்பம் .. ... ... | ௨௨ |
| மூளைமூலம்... ... | ௰௨ |
| மூக்கோணம்- - | ௬௭ |
| மூலிகைக்கற்பம் ... | ௨௪ |
| மூலர்- - | -௫௧ |
| மூலாதாரம்- - - | ௬௫ |
| மூலநாடிஎழுபத்திராயிர<br>த்தில்தசநாடி ... * | ௩ |
| மூவகைநாடியில்மூவகை<br>த்தாது... ... ... * | ௪ |
| மூவகைவாயுநாடி... ... | ௪ |
| மூவகைநாடியதிஷம்விபரம் | ௪ |
| மூவகைநாடியதியுபாத்தினா | ௫ |
| மூவகைநாடிநடட்பு ... | ௫ |
| மூலம்வருங்காரணம் .. | ௰௨ |
| மூவாண்டிலும்ஆறுதிங்க<br>ள்லும்சாகுங்குறி ...* | ௭ |
| மூலிகைக்கற்பயாகவகை | ௨௪ |
| மூலம்- - - | ௪௭ |
| மூலிகைக்குளிகை- - | ௫௨ |
| மேகம்பிறக்கும்விதம் ... | ௰ |
| மேகமிகும்மேநிகருகும்<br>தாதுநட்டமாம் ... * | ௰௩ |
| மேககுன்மநோய் ... | ௰௫ |
| மேகநோயிருபத்தொன்றுந் | ௰௯ |
| வயதுண்டாங்காரணம் ... | ௨ |
| வன்னம் - - | -௯௮ |
| வாதபித்தசிலேட்டுமயிரு<br>ப்பிடம் ... ... * | ௫ |
| வாதபித்தகபவர்ணம்... .. | ௫ |
| வாதகுணம்நோதல்... ... | ௯ |

| பெயர் | பக்கம் | பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| வாயுநோய்சுரம்திரிதோஷம் | ௯ | வியர்வைகண்சிவப்புமா தோஷம்காயமழிதல் * | ௰௧ |
| வாதமேகஜபமேகநிறக்குறி | ௰௨ | விசுத்தி - | ௬௭ |
| வாதகுன்மம் ... ... | ௰௪ | வீரக்கட்டில்வேதை | ௫௧ |
| வாதசூலைநோய்... ... | ௰௫ | வீரக்கட்டு - | ௮௧ |
| வாதபித்தசூலைநோய்... | ௰௬ | வெடியுப்புசெயநீர்குரு - | ௭௧ |
| வாதசத்துச்செந்தூரம் ... | ௨௫ | வெளிகாணுதேலும்பாயி ருமேகம்... ... * | [illegible] |
| வாசிப்பிரயோகம் - | ௫௫ | | |
| விநாயகர்துதி .. ... ... | ௧ | | |


அட்டவணை-முற்றியது.

௨

## புத்தகவிளம்பரம்.

இப்போதுபதிப்பித்தபுத்தகமாவன.

| | |
|---|---|
| சிமிட்டுரத்தினச்சுருக்கம் | ௫௬௰ |
| பதித்துவரும்புத்தகங்களாவன | |
| தன்வந்திரிவைத்தியசிந்தாமணி | ௩௨ா |
| பூகிமுனிவைத்தியம் | ௩ |
| தேரையர்நிகண்டு | ௫ா |
| நந்தீஸ்வரர்கலைக்கியானம் | ௩௫ா |
| அகஸ்தியர்வல்லாதி | ௬ா |

இன்னம்பலவித புத்தகங்களும் பதித்துவருகின்றன வேண்டுபவர்கள் சென்னபட்டணத்தைச்சார்ந்த - சூளை - வீரணன் தோட்டம் தொட்டிக்கலை குமாரப்பமுதலியார் தெருவில் (௫௯-வது) கதவிலக்கமுள்ளவீட்டில் இங்கிலீசுபுத்தகவியாபாரஞ்செய்யும்-தி-இருசப்பமுதலியார் - குமாரர் பரசுராமமுதலியாரிடத்தில் விலைக்குப்பெற்றுக் கொள்ளலாம்.

சிவமயம்.

9.402

# திருமூலநாயனார்

திருவாய்மலர்ந்தருளிய

# கருக்கிடைவயித்தியம்-௬௱.

## காப்பு.

கர்ப்பவுற்பத்தி

விநாயகர் துதி.

அந்திநிறத்தனை யானைமுகத்தனை
இந்துஇளம்பிறை போலுமெயிற்றனை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை
புந்தியில்வைத்தடி போற்றுகின்றேனே.

(தேவிதுதி.)

தாதாவைப்போலத் தயவுகொடுப்பவள்
வேதாகமத்தின் மெய்ஞ்ஞான மெய்ப்பொருள்
ஆதாரசத்தி அரியமனோன்மணி
மாதாவின்பாதம் வைத்தேனென்சென்னியில் (௧)

(தற்சிறப்புப்பாயிரம்.)

சென்னியில்வைத்தே திருநந்தித்தாளிணை
மன்னியகாயம் வந்தவகைதனை
கன்னிவகுத்த கருப்பத்திருமந்திரம்
உன்னியுணாத்தேனறுநூற்றிருபதே (௨)

உடலுற்றுறவாறும் உயிருற்றுவாறும்
மடையுற்றவொன்பது வாசலின்தன்வாறும்
இடமுற்றதத்துவ சீவ புலன்களும்
கடலுற்றநீர்போற் கண்டகருவிதே (௩)

கருவையொழிந்தவர் கண்டநன் மூவேழும்
புருஷனுடலிற்பொழிந்தது மற்றொன்றும்
தெரிவைக்கருக்குழிதேயுவுபுகுந்து
உருவமிரண்டா மோடிவிழுந்ததே (௪)

விழுந்ததுலிங்கம் விரிந்ததுயோனி
ஒழிந்ததுமுதலைந் துயிரோடேறி
தெழிந்தது அப்பு தேற்றங் குணமும்
பொழிந்துபுகுந்தது புணர்கின்றபோதே (௫)

போகின்றதெட்டும் புகுகின்றபத்தேட்டும்
ஆகின்றமுற்றினும் ஒன்பது வாசலும்
நாகனுமெட்டும் நான்-இரவி-மதியும்
பாகன்விடாவிடிற் படர்ந்தனலாமே (௬)

ஏறஎதிர்க்கில் இனலயன்-தானாகும்
நேரொக்கவாகில் நிகர்போதந் தானாகும்
மாற எதிர்க்கில் மறையவன்-தானாகும்
பேறுத்தமைந்தனும் பேரரசானாமே (௭)

ஆண்மிகி லாணாம் பெண்மிகிற் பெண்ணாம்
பூணாம் இரண்டொன்றிப் பொருந்திலலியாகுந்
தாண்மிகவாயில்-தரணிமுழுதாளும்
பாண்மைமிகுந்திடிற் பாய்ந்தது மில்லையே (௮)

(வயதுண்டாங்காரணம்)

பாய்ந்தமுன்னைந் தோடிற்பாராயுளு நூறும்
பாய்ந்துபின்னைந் தோடிற் பார்வயதைம்பதாம்
பாய்ந்திடும்வாயு பகுத்தறிந்திவ்வகை
பாய்ந்திடும்யோகிக்குப்பாய்ச்சலுமாமே (௯)

(அங்கஈனம்)

பாய்கின்றவாயுகுறுகிற்குறளனாம்
பாய்கின்றவாயுவளையின் முடமாகும்
பாய்கின்றவாயு நடுப்படிற் கூனாகும்
பாய்கின்றவாயுமா தாக்கில-பார்க்கிலே (௰)

(மந்தண் ஊமை குருடன்)

மாதாவுதரம் மலமிகில்-மந்தனாம்
மாதாவுதரஞ் சலமிகி லூமையாம்

மாதாவுதரத்திரண்டொக்கிற் கண்ணில்லை
மாதாவுதரத்தில் வந்தகுழவிக்கே (௰௧)

(ஆண் பெண் அலி இரட்டைப்பேறு)

குழவியும் ஆணும் வலத்தாதுவாகில்
குழவியும் பெண்ணும் இடத்தாதுவாகில்
குழவியும்-இரண்டாம் அபானனெதுக்கில்
குழவியும்-அலியாங் கொண்டகாலொக்கிலே (௰௨)

கொண்டநல்வாயு இருவர்க்குமொண்டிடில்
கொண்டகுழவியும் கோமளமாய்விடும்
கொண்ட இவ்வாயு குறிப்பறிந்திவ்வகை
கொண்டதுமில்லை கோலம் உன்னுதே (௰௩)

(பஞ்ச பூத பிண்டோற் பத்தி)

உன்னியகர்ப்பக் குழியாம்வெளியிலே
பன்னிய நாதம் பகர்ந்தபிருதிவி
வன்னியும்வாயுவு மாயுறுஞ்சுக்கிலம்
மன்னியசமனும் வளர்க்கும் உதகமே (௰௪)

உதகம் உதிரம் உறுங்கனல்வாயுவால்
சிதகுறு மங்கங்கள் செய்துமுடித்திடும்
பதகுறுமுரோமம் பகர்தசை அஸ்தியின்
நிதகுறுமொன்பது வாசலும் நீக்குமே (௰௫)

நீங்கிட நீங்கிட நிமிர்ந்துவளர்ந்தோங்கும்
ஓங்கிட ஓங்கிட உறுதியாம்வாயுவும்
வாங்கிடவாங்கிட வன்னிதலைக்கொளும்
பாங்கிடப்பாங்கிடப் பத்தாகுந்திங்களே (௰௬)

(பிறக்கும்போதே நோயும் பிறந்தது)

திங்கள்பத்தாகிற் தேய்வொடுவாயுசேர்ந்
தங்கிமலர்த்தியமளியாக் கீழ்நோக்கி
பொங்கிப்பிறந்தநாள் புகழ்வார்வெறுவீணர்
தங்கிச்செனிக்கையிற் றுநோயுமுற்றதே (௰௭)

(மூலநாடி-எஉத-த்தில்-தசநாடி.)

உற்றவிபாம் உறுதியாமெந்நந்தி
பற்றியமூலம் பகர்த்திடும்நாடிதான்

எற்றியே எண்ணிடில்-எழுபத்திராயிரம்
மற்றதிற்பத்து வளமானநாடியே (௧௮)

{தசநாடியில்-தசவாயுவும்-திரிநாடியும்
௯-சங்கரம்-௩-மண்டலம்.}

வளமானபத்தில் வழங்குந்தசவாயு
உளமாம் இடைபின் சுழியெனமூன்றுண்டு
களமானசக்கரங் காட்டியதாறுண்டு
தளமான்மண்டலந் தான்மூன்றும்பாருமே (௧௯)

பாரும்இடைகலை பின்கலை மாறியே
தாரும்பெருவிரற் காலொடுதானேறி
காருங்கழுத்திற் கபாலவரைநின்று
வாரும் இடமாய் வலக்கரஞ்சாருமே (௨௰)

வலக்கரந்தன்னில் வளமானபின்கலை
நிலைக்க இடக்கரம் நின்றதிடைகலை
துலக்கநடுமையஞ் சுழிமுனையோடிடும்
பிலக்க இவைமூன்றூற் பிறந்ததுதாதுவே (௨௧)

(மூவகைநாடியில்மூவகைதாது)

தாதுமுறையே தனி இடைவாதமாம்
போதுறுபின்கலை புகன்றதுபித்தமாம்
மாதுசுழிமுனை வழங்கிடும் ஐயமாம்
ஓதுமுறைபார்த் துணர்ந்தவர்சித்தரே (௨௨)

(மூவகைவாயுநாடி)

உணர்ந்த அபானன்-உறும் அந்தவாதத்தில்
புணர்ந்தபிராணன் புகும் அந்தப்பித்தத்தில்
அணைந்தசமானன்-அடங்குங்கபத்தொடு
இணைந்திவைமூன்றுக் கெடுத்தகுறியொன்றே (௨௩)

(மூவகைநாடியறியும்விபரம்)

குறியாம்வலக்கரங்குவிந்தபெருவிரல்
மறிவாயதன்கீழ் வைத்திடுமூவிரல்
பிறிவாய்மேலேறிப் பிலத்ததுவாதமாம்
அறிவாய்நடுவிரல் அமர்ந்ததுபித்தமே (௨௪)

பித்தத்தின்கீழே பிரண்டது ஐயமாம்
உற்றுற்றுப்பார்க்க ஓர்நம்பேயோடும்

பத்தித்தமூவரும் பாய்கின்றவேகத்தால்
மத்தித்தநாளமபோல் வழங்கும்நரம்பதே (௨௫)

(மூவகைநாடியறியுமாத்திரை)

வழங்கியவாதம் மாத்திரை யொன்றாகில்
வழங்கியபித்தந் தன்னிலரைவாசி
அழுங்குங்கபந்தான் அடங்கியேகாலோடில்
பிழங்கியசீவற்குப்பிசகொன்றுமில்லையே (௨௬)

(மூவகைநாடிநடப்பு)

இல்லையேவாதம் எழில்நடைகோழியாம்
எல்லையேபித்தம் எழும்புந்தவளைபோல்
ஒல்லையேஐயம் ஊர்ந்திடும்பாம்புபோல்
அல்லையேகண்டு அறிந்தவர்சித்தரே (௨௭)

(வாத பித்த சிலேட்டும மிருப்பிடம்)

அறிந்திடும்வாதம் அடங்கும்மலத்தினில்
பிறிந்திடும்பித்தம் பேராஞ்சலத்தினில்
மறித்திடும்ஐயம் வாசிக்கும்விந்துவில்
உறைந்திடும்மூன்றுக் குறவாந்தலமிதே (௨௮)

(வாத பித்த கப வர்னம்)

உறவாங்கறுப்புஞ் சிவப்புறும் நல்வாதம்
குறைவானபச்சை பசுமைகொடும்பித்தம்
நிறைவானவெண்மையாய் நின்றதுநல்லையம்
அறைவானவர்னமதாகுந்தலமதே (௨௯)

(தேகபஞ்ச பூதம்)

தலங்காட்டியிந்தச் சடமானஐம்பூதம்
நிலங்காட்டி நீர்காட்டி நின்றிடுந்தீகாட்டி
வலங்காட்டிவாயுவால் வளர்ந்தே இருந்தது
குலங்காட்டிவானிற் குடியாயிருந்ததே (௩௰)

இருந்த-இவ்வைந்தா லெடுத்தசடமிது
பிறந்திடுமாமிசம் பிருதுவின்மயமாகும்
சொரிந்திடுமிரதநீர் சொற்குறியப்புவாம்
வருந்தியவன்னி வளமாய்வெதுப்பமே (௩௧)

வெதுப்பத்துடனே விடுபட்டுநாசியில்
எதுப்புற்றுநிற்கு மிதுகாணும்வாயுவாம்

கதப்பொத்துஎல்லாங் கபளித்திடமிட்டு
மதுப்பொத்துநிற்கும் வானின் வளப்பமே (௩௨)

வளப்பங்சேள்பூமி வாசிக்கும்நாசியில்
தளப்பமாம்வன்னி தானுறுங்கண்ணினில்
அளப்பமாம் அப்பு அடங்கிடும் நாவினில்
பளப்பலவாயு பரிசிக்கும்-எந்தமே (௩௩)

எங்கியகாதில் இருந்தூறும் ஆகாசம்
பொங்கியதைந்தாக்குட் பொல்லாதிம்மூன்றுதான்
தங்கியவாயுசமத்தன் மகாவாதம்
பங்கியவன்னியாற் பகுந்ததுபித்தமே (௩௪)

பகுந்தசலத்திற் பரிசிக்கும் நல்லையம்
வகுந்தஇம்மூன்றால் வளர்ந்ததுநோயெலாம்
அகுந்தது தானதிற் தளவிட்டயோகிகள்
மகிழ்ந்தேயிதில்நின்ற மயக்கம்அறிவரோ (௩௫)

(வாதக்குணம் நோதல்)

அறியஇம்மூன்றின தாண்மைசொன்னார்நந்தி
எறியநல்வாத மெறிக்குங்குணங்கேளு
குறியெனக்-கைகால் குளைச்சு-விலாச்சந்து
பறியெனநொந்துடற் பச்சைப்புண்ணாகுமே (௩௬)

புண்ணாய்வலிக்கும் பொருமுங்குடலோடி
தன்னுமலத்தைத் தம்பிக்கும்போக்காது
ஒண்ணான ஆசனம் உறவேசுருக்கிடும்
பண்ணார்குளிர்சீதம் பகுத்திடும்வாதமே (௩௭)

(பித்தக்குணம் கைத்தல்)

பகுத்திடிற்பித்தம் பலபலசிந்தையாம்
வகுத்திடும்வாந்தியும் வாய்நீர்மிகவூறம்
மகுத்திடுமேனியில் மாட்டிபெரிப்பேறம்
மிகுத்துதவனிக்கும் மிகவிடாய்க்குமே (௩௮)

(ஐயக்குணம் காய்தல்)

விடங்கிய ஐயம் மேபிணாப்பேற்றிடுந்
தடங்கியிருமிடுந் தனிவிலா இரண்டும்-நோம்
அடங்கிச்சுரங்காயும் அளவற்றகோழைநீர்
இடங்கியுடல்வற்றி யிரத்தமூங்கக்குமே (௩௯)

கக்கியமூவர் களிற்பெலன்சேரு
ஒக்கியவாயுவுடல் கூடிடிற்பெலன்
தக்கியவாயு சகலத்துக்காதாரம்
சிக்கியநோயைச் சிறக்கவிளக்குமே (௪௰)

(தாபச்சுரமும் சீதச்சுரமும்)

விளக்கியவன்னியும் வாயுவுமேற்கொண்டால்
தளக்கியதாபச் சுரங்காணுந்தோஷமாம்
வளக்கிய அப்புவும் வன்னியும்மேற்கொண்டால்
இளக்கியசீதச் சுரங்காணிதன்பேரே (௪௧)

(தோஷ நிறக்குறி)

போனதோஷம் பிறக்குமுறைகேளு
வாரானவாதமும் வன்னிகருந்தோஷமாம்
தாரானபித்தமுந் தழலூடில்வெண்மையாம்
சேரானஐயமும் சிவப்பேறும்வாய்விலே (௪௨)

வாயுவடங்கினல் வளமானதோஷம்போம்
வாயுவெழும்பினல் மண்ணும்நீரொன்றாகும்
வாயுவுதீரால் வழங்கியவன்னிசாம்
வாயுவுமாகாசம்மண்டலமோசையே (௪௩)

ஓசையிலேழும் ஒலியினிலோனாந்தும்
நாசியில்மூன்றம் நாவினிலிரண்டும்
தேசியுந்தேசனுஞ் சேர்ந்துபிரிந்திடம்
மாசிலாநந்தி மகிழ்ந்துவுரைத்தாரே (௪௪)

(ஓராண்டிலுமீராண்டிலும்சாகுங்குறி)

உரைத்ததுநாசி யுறுதிக்குறிகேள்
விரைத்திடட்பின்கலை விடாதோடில் மூன்றுநாள்
இரைத்தசடம் ஆண்டில்-எய்திடுமாகாசம்
பரத்திலிரண்டுநாட்பாயிலிராண்டெண்ணே (௪௫)

(மூவாண்டிலும் ஆறு திங்களிலும் சாகுங்குறி.)

எண்ணியொருநா ளியங்கிடிற்பின்கலை
தண்ணியமூவாண்டிற் றப்பாது மாரணம்
ஒண்ணியுபயத்திில் ஓடிடிற்பத்துநாள்
மண்ணில்மதியாதில் மரிப்பான் குறியிதே (௪௬)

(நாள்மூன்றிலும் பதினைந்திலும் சாகுங்குறி-வேறு)

குறிகேளுமூக்கன்றி குலவிபவாய்வழியோடில்
மறிகேளுமூன்றுநாள் மரித்திடுவன் தப்பாது
தெறிகேளுபும்மலமூந் திரண்டுமிகக்குறைந்துவரில்
பரிவாகும்பட்சமதிற் பாருயிர்தான் தப்பாதே (௪௭)

(௬-திங்களிலும் உடனேயும் சாகுங்குறி.)

தப்பாதுவாய்நீர்தான் தாக்கிற்றன் மேல்விழிலே
ஒப்பாகத்தனுமறைய வொழிந்திடுவன் மதியாதில்
செப்பாகத்தானிருக்க-சேர்ந்ததிபூலலைந்திடினும்
அப்பாகேள் சாவுநிசமறிந்துகற்பங்கொண்டிடே (௪௮)

(௬-நாளிற்சாகும் மரணதோஷக்குறி)

கொண்ணிடுந்தோஷக்குறி சொன்னோற்நந்தி
தண்டும் உதடுந்தனிப்பல்லும் நாக்கொன்றும்
மண்டிடுந் தாதுவள மாய்க்கறுப்பேறில்
ஒண்டிடும் ஆறுநாளுறுதியாய்ச்சாவனே (௪௯)

(௧-மாதத்திற் சாகுங்குறி)

உறுதியாம்பித்தம் உடம்புஇளைப்பதாம்
பொறுதியாய்த்தாவிக்கிற் போவான்மதியொன்றில்
அறுதியாம் ஐயம்-அஸ்தியுலர்ந்துமே
உறுதியோர்மதியி லொடுங்கிடுஞ்சிவனே (௫௰)

(சாகாக்குறியும் சாகுங்குறியும்)

சிவகலையாய்ச் சேர்ந்திடும்நாடியில்
அவக்கரம்வைத் தழுத்திடின்மேலேறும்
சாவொத்து மேல்நோக்கிற்சாகானொருநாளும்
பாவொத்துக்கீழ்நோக்கிற் பலதயாமற்சாவனே (௫௧)

(அமிர்தம்உண்டும் சாகுதல்)

பதைக்கின்றமூவரிற் பக்குவந்தப்பியே
நிலைக்கின்றவாதமும் பித்தமும்நீங்கிடில்
சுதைக்கொண்டிருந்தாலுந் தோற்றியவுயிர்விடும்
பிதைக்கொண்டவாத பித்தமும்பெலனுமே (௫௨)

(பிணியரிடம்போகாக்குறிகிட்டாக்குறிமருந்-தீ-குறி)

பித்தம் அடங்கினற்பேசாதேபோய்விடு
எத்தியஐயம் எழும்பிடிற்கிட்டாதே

எத்தியவாதம் எழும்பில்மருந்துசெய்
எத்தியிம்மூன்றின இயல்பையறிந்திடே (௫௩)

(சாகாக்குறிசாகுங்குறி)

அறிந்திடும்மூன்றும் அடங்கியேமுட்டிலும்
எறிந்துமிகவோடிலும் எய்தாதுசாவுதான்
பறிந்துநற்றுது பற்றற்றக்கீழ்நோக்கில்
மறிந்தேயுயிர்சென்று மறவிகைப்புக்குமே (௫௪)

(மகாதோஷக்குறி)

புக்கியுந்தியிற்கை பொருந்தொருவிரல்
எக்கி-உயரம் எழும்பில்-மகாதோஷம்
அக்கிய உந்திதா ளுதாரம்வாய்விற்கு
வைக்குந்தலமென வகுத்தனர்தாதிதே (௫௫)

(தசநாடிகள் இருப்பிடம்.)

தாதுமுறைகேள் தனித்தகுதிச்சந்து
ஓதுறுகாம்யம்-உந்தி-நடுமார்பு
காது நெடுமூக்கு கண்டம் கரம் புருவம்
போதுறும் உச்சி புகழ்பத்தும் பார்த்திடே (௫௬)

(சாகாக்குறி சாகுக்குறி)

பார்க்கிற்றசநாடி பதைப்புண்டாய்நின்றிடில்
ஏர்க்கிற்சிலநாளிருப்பான் இறந்திடான்
காக்கிடுங்காம்யம் கழன்றுசுழித்தோடில்
ஆர்க்கிலெமனுல கடைவதுவுண்மையே (௫௭)

(உமிநீர்க்குறியாற்சாவு)

உண்மைகேளின்னும் உமிந்திடநோயுள்ளோன்
தண்மையாய்த்தூரம்போய்த்தாக்கிடிற்சாவில்லை
கண்மையாம்வாயு-கழன்றிடிற்கிட்டிடும்
வண்மையாய்ப்பார்க்க வகுத்தனர்நந்தியே (௫௮)

(வாயுநோய்சுரம் திரிதோஷம்)

வகுத்தமுறைப்பாடு மந்தத்தால்வாயுவாம்
மிகுத்தநல்வாயுவால் விளைந்திடும் நோயெலாம்

பகுத்திவையிரண்டாற் பாரச்சரமுறும்
முகுத்திவைமூன்றால் மூத்தோஷிங்காணுமே (௫௯)

(மந்தம்வருகுதல்)

காணுமேமந்தங் கவளிக்கும்-அன்னத்தால்
காணுமேமந்தங் கடுமாமிசம் மீறில்
காணும்மேமந்தங் கலந்தமாப் பண்டத்தால்
காணுமேமந்தங் கடுமேதிப்பாலுக்கே (௬௰)

மேவிய அன்னத்தால் விளங்கியதிச்சடம்
பாவியேகொன்று பழியுறும் அன்னந்தான்
ஆவில்மிதந்தப்பில் ஐயுற்றுநோயாகும்
சாவிலிவையெலாங் கண்டுகொள்-என்னமே (௬௧)

அன்னம்பிறந்தது அனைத்துவிதையிலும்
மன்னியவெட்டை மகாசீதமிரண்டினால்
பன்னியதிந்திதைப் பார்ப்பார்பெரியோர்கள்
கன்னிமயக்கத்தாற் கண்டிடும் மேகமே (௬௨)

மேகம்பிறந்த விதஞ்சொன்னோந்நந்தி
ஆகமிளந்தைப் பருவத்தில்மோகித்துப்
போகந்தினஞ்செய்யில் புகழ்மந்தத்தேகூடில்
வாகப்பசியால் வழங்குஞ்சையோகமே (௬௩)

(மேகம்பிறக்கும்விதம்)

சையோகஞ்செய்யத் தனித்தசுழியோடும்
ஐயா அமிர்தம் அடங்கிக் கனலேறும்
மெய்யாகவிந்து விழவிழப்புண்ணாகும்
மையான மேகம் வளருங் கிரந்தியே (௬௪)

சிமேகம்வாயுகுலைபலமேகம்பலநோய்

கிரந்தியிரணங் கிளர்ந்திடுஞ் சிமேகம்
உரைந்திவையிரண்டா லுறுவாய்வுகுலையாம்
பரந்ததிவைமூன்றாற் பலபலமேகங்கள்
துரந்திவைதொட்டு சூழ்நோய்களுற்றதே (௬௫)

(இலங்கனமிடுதல்)

உற்றசுரத்துக்கும் உறுதியாம்வாய்வுக்கும்
அற்றேவரும்மட்டும் அன்னத்தைக்காட்டாதே

முற்றக்கனல் ராசா மூன்வழியேவரில்
ஒற்றேநிறைந்தோடி லொன்றுக்குமஞ்சாதே (௬௬)

(காயசித்தியாக.)

அஞ்சியுகத்திலழியாமற்காயந்தான்
மிஞ்சியகற்பம் விரும்பினேம் நூற்றெட்டு
தஞ்சமுறவே தான்றின்னவல்லோர்க்கு
பஞ்சுநரைபோய்ப் பதிந்தோங்கிவாழ்வாரே (௬௭)

வளமானபித்தத்தில் மருவிக்கபங்கூடில்
தளமானவாயுவாற் றானேவெதுப்பேறி
களமானகன்னத்திற் சட்டியேமூலமாம்
உளமாஞ்சுரத்தி லுறுகின்றவாயுவே (௬௮)

(மலசலக்கட்டு மேல்மூச்சு இரணம் உருத்திரவாயு)

வாயுவினாலே மலசலங்கட்டிடும்
வாயுவினாலே வாங்கிடும்-மேல்மூச்சு
வாயுவினாலே மலரு-மிரணங்கள்
வாயுவினாலே வரும் ருத்திரரோகமே (௬௯)

(பேசிக்கொண்டிருக்கையிற்சாகுதல்)

ரோகங்கபத்தில் நுழைந்தேறிவாயுதான்
வாகுற்றநெஞ்சில் வலித்தேமடக்கிடும்
போகுற்றபித்தத்தை போகாமற் றம்பித்து
பாகுற்றப்பேசையிற் பதையாமற்கொல்லுமே (௭௰)

(சுகஜன்னிவருங்காரணம்)

பதமாஞ்சுகஜன்னி பாயும்விதங்கேளு
நிதமாகமூழ்கி நிறையவேசாப்பிட்டு
குதமாகமந்தத்திற் கூடிடில்வாயுவால்
அதமாமனுபோகம் அணைந்திடிற்சன்னியே (௭௧)

(வியர்வை கண்சிவப்புமா தோஷம் காயமழிதல்)

சன்னிசுகத்தினாற் றானேறும்வியர்வைதான்
கன்னிசுகத்தினாற் கண்கள்சிவப்பேறும்
வன்னிசுகத்தினால் வழங்கும்மகாதோஷம்
அன்னசுகத்தினா லழிந்திடும்காயமே (௭௨)

(மூலம்வருங்காரணம்)

காயத்திற்மூலங் கண்டவிதங்கேளு
பாயொத்ததீபனம் பரிந்தேயடக்கினும்
மாயமயக்க மலத்தையடக்கினும்
ஓயுற்றக்குண்டலிக் குட்புகும்வாயுவே (௭௩)

(முளைமூலம்)

வாயுபுகுந்து மலத்தோட பானத்தைத்
தேயுவைக்கூட்டிதிரட்டிக்கருக்கிடும்
தோயும் மலம்வறிற் சுருக்கிடுன்னேநின்று
ஆயுமுளைபோ லயானணிறுக்குமே (௭௪)

(இரத்தமூலம்)

இறுக்குஞ்சிலமூலம் எழுமண்டலம்போல
மறுக்கரிணங்கொண்டு வருகுஞ்சிலமூலம்
உறுக்கியவாயுவாலுதிரமூந்தான்கூடி
தறுக்கிவிழுக்காட்டுந் தான்ரத்தமூலமே (௭௫)

(பசிகெடும் விந்துநாசம் இளைச்சலாம் கழிச்சலாம்)

மூலமெழுந்திடில் முன்னேபசிபோகும்
மூலமெழுந்திடில் முனைவிந்துநாசமாம்
மூலமெழுந்திடில் முழங்கும்இளைச்சல்தான்
மூலமெழுந்திடில் முகியாக்கழிச்சலே (௭௬)

(கிராணிக்கழிச்சலின் வாறுவிதம்)

கழிச்சல்கிராணிக் கழியும்விதங்கேளு
அழிச்சியபித்தம் அனல்வாதம் ஐயமாம்
செழுச்சியவாயு சேர்ந்திவைமூன்றால்
பழிச்செனப்பேதிக்கும் பார்பெலம்போகுமே (௭௭)

பெலமானமேகத்திற் பிறந்ததொருபேதி
குலமானமூலத்திற் கொடியதொருபேதி
சலமானவாயுவாற் சங்கித்தொரும்பதி
வலமானஆதம்வகுத்தமுறையாமே (௭௮)

(பித்தமேக நிறக்குறி)

முறையானமேகம் முழங்குமிருபுறந்
துறையானதெல்லாஞ் சொல்லிறொந்நந்தி

கறையாகுஞ்சிலையிற் கண்டில்மஞ்சள்போல்
பறையானபித்தத்தாற் படுகின்றமேகமே (௭௯)

(வாதமேக ஐயமேக நிறக்குறி)

படுகின்றசிலைதான் பாங்காம்வெளுப்பாகில்
அடுகின்றஐயத்தா லாகுங்காணம்மேசம்
மடுக்குக்கபீனத்தில் மயில்நிறம்போற்பட்டால்
விடுகின்றஐயத்தால் விழுகின்றமேகமே (௮௰)

(தமரோரிமேகம் நீர்த்துளிமேகம்)

மேகமிவைமூன்றில் வெவ்வேறுகுணங்களு
வாகியபித்தமும் வாயுவுங்கூடிடில்
தாகியநாளத் தமரிலெரிந்திடும்
போகும்நீர்கட்டிப் பொசிந்துளித்தேவிழும் (௮௧)

(சிக்கா நீர்மேகம் கல்லெரிப்புமேகம்)

விழுகுஞ்சிலநேரம் விடுபட்டுநீரோடும்
ஒழுகியவாயுவும் ஒதுங்கினல் நோகாது
வழுகியமந்தத்தால் வாயுவத்தேபுகில்
கழுகிமுதிர்ந்திடுங் கல்லெரிப்பாகுமே (௮௨)

(மேகமிகும்மேநி கருகும் தாதுநட்டமாம்)

ஆகியவாதமும் வாயுவுங்கூடிடில்
தாகியவெள்ளை தடையற்றமெத்தவாப்
போகியமேனி பொருமிக்கறுப்பேறும்
வாகியதாது வழங்காது நஷ்டமே (௮௩)

(வெளிகாணுதெலும்பாயிருடமேகம்)

வழங்கியஐயமும் வாயுவுங்கூடிடில்
பிழங்கிப்பொசியாது பிறவெள்ளைகாணுது
தழுங்கியிளைத்துத் தானஸ்திபோலாவான்
இழங்கும்புகைந்தே யிருமிடும்மேகமே (௮௪)

இருமியபித்தமும்வாதமுங்கூடிடில்
மருவச்சலமேகம் வாரிதிபோலோடும்
உருவம்வேருக்கும் உண்டஉடற்காய்ந்திடும்
உருகவேஊனே டுதிஞ்சியினிக்குமே (௮௫)

(மதுமேககுணம்)

இனிக்கின்றவாதத் திடைசேரிலையந்தான்
பனிக்கின்றகள்ளுப் பதனிபோல்நீரோடும்
கனிக்கின்றமேனிகனாந்து வெளுப்பேறும்
தனிக்குமதுமேகந் தப்பாதுஐயமே (அசு)

(இரத்தமேகம்.)

ஐயமும்பித்தமும் அணைந்திடுங்காலத்தில்
கொய்யுறுமிரத்தங் கொப்புளிக்குந்தண்டில்
மையுறுங்கண்ணாட்கு மகத்தாம்பெரும்பாடும்
வையுறிம்மேகம் வரிசைமுறைகேளே (அஎ)

முறைகேட்கிலொன்பது முயற்சியால்வந்தது
துறைகேட்கில்கர்ப்பத்தில் துவக்கியமேகங்கேள்
நறைபூத்தகொங்கையாள் நாயகன்மோகத்தால்
மறைபோற்றுங்கர்ப்பத்தில் வளர்ந்ததுமேகமே (அஅ)

வளர்ந்ததுகர்ப்பத்தில் வகுத்தமுறைபஞ்சு
உளர்ந்தியவுந்தியி லுர்ப்பத்தியாம் மேகம்
அளந்திப்படும்வெள்ளை யாகாச்சுரமேகம்
தளர்ந்தியு அஸ்தியைத் தணலாயுருக்குமே (அகூ)

தணற்காயும்மேகம் தண்ணீர்ப்பகைமேகம்
உணக்கால்முழுக்கற்று அருகுஞ்சிலமேகம்
பிணக்காற்பசிகெட்டாற் பெற்றப்பெருமேகம்
வணக்காற்கையோகத்தால் வருங்கடுமேகமே (கூ௰)

கடும்பசிதோன்றிடிற் காணுஞ்சிலமேகம்
அடுவுற்றபாஷாணத் தாலாஞ்சிலமேகம்
அடுவுற்றிவையேழு மஞ்சும்மூன்றென்பதும்
எடுவுற்றிருபத்தொன் றேற்றினர்மேகமே (கூக)

(பித்தகுன்மம்)

எற்றியகுன்மம் எழுந்தவிதங்கேளு
தோற்றியபித்தமும் வாயுவுந்தொந்திக்கில்
சேற்றியஅன்னஞ் செரிக்கில்வலிப்பேறும்
மாற்றியநீரூறி வாந்தியாம்பாருமே (கூஉ)

(வாதகுன்மம்)

பாருமேவாதமும் வாயுவுங்கூடிடில்
ஒருமேகும்பியி லுமூன்றுமிகநோகும்

கோருமேகுத்துங் குடலைமுறுக்கிடும்
வாருமேவாதத்தில் வழங்கியகுன்மமே (௩௩)

(ஐய குன்மம்.)

வழங்கியஐயமும் வாயுவுங்கூடிடில்
தழங்கியஅன்னத்தைச் சந்திக்கவொட்டாது
புழங்கியஅன்னம் புளிப்புக்கொடுத்தேறி
உழங்கிமுறுக்கி யுடலைவலிக்குமே (௩௪)

(மேககுன்மநோய்)

வலிக்கியமேகமும் வாயுவுங்கூடிடில்
பலிக்கியமலசலம் பதையாமற்கட்டிடும்
இலிக்கியவிடப்புறம் இயல்பாம்வலப்புறம்
வலிக்கும்முறுக்கும் வருஞ்சூலைக்குன்மமே (௩௫)

குன்மமிவைநாலில் கூறிஞரெண்விதம்
வன்மையாய்நோய்க்கு மகாநோய்காண்பொல்லாது
கன்மமேசெய்த கடத்துக்கிதுவெய்தும்
நன்மையாந்தர்ம்மஞ்செய்நாட்டோர்க்கும்வாராதே (௩௬)

(பித்தசூலைநோய்)

நாட்டியபித்தமாஞ் சூலைமுறைகேளு
மாட்டியஅன்னம் ருசிகெட்டுவாந்தியாம்
ஆட்டியகைகாலதன்சந்துபின்தண்டு
நீட்டிவலித்து நிலையாயெரியுமே (௩௭)

(வாதசூலைநோய்)

நிலையானவாதத்தில் நின்றிடுஞ்சூலைதான்
குலையானகைகாற் குளைச்செல்லாம்புண்போல்
கலையாய்வலித்து கனத்திடுங்கீழ்வயிறு
தலையானமேனி தானிளைத்திடுமே (௩௮)

(ஐய சூலைநோய்)

இளைத்திடும்மேனி யிருமிவறண்டிடும்
குளைத்திடுங்கையிற் குத்திமிகநோகும்
தளைத்திடும்மார்பிற் சளிமிகத்தாக்கிடும்
அளைத்திடும் ஐயத்தா லாகாதசூலையே (௩௯)

(வாதபித்த சூலைநோய்)

ஆகாதவாதமும் பித்தமுஞ்சூலையாய்
வாகான கை கால் வளமாய்க்கரடேறும்
தாகானமேனி தனில்வெடிப்புண்ணாகும்
போகாமல்நின்ற புணர்ச்சியாய்க்கொல்லுமே (௱)

(ஐயபித்தசூலைநோய்)

சொல்லியஐயமும் பித்தமுங்கூடிடில்
மல்லியெலும்பில் வளமாய்த்தலைத்துநோம்
அல்லிச்சுரங்காயும் அதிகத்தாபமுமாகும்
எல்லியிருமிடும் இதுகாணுஞ்சூலையே (௱க)

(ஐயவாத சூலைநோய்)

காணுமேஐயத்திற் கணவாதசூலைகேள்
பூணுங்கபாலம் புடைத்துவெடித்திடும்
ஆணிமுளையாம் அடங்காக்குளிர்சுரம்
பேணியெலும்பெலாம் பெலன்கெட்டுநோய்மாறே (௱உ)

ஆறுவகைசூலையி லறுமூன்றுபேர்சொல்வார்
வேறும்இதையல்லால் வெவ்வேறும்ஒன்றில்லை
கூறுமிதனமங் கோடிகுணஞ்சொல்வார்
பேறுமறுசூலைப் பேர்சொன்னார்நந்தியே (௱௩)

(ஆறுவிதகர்ப்பநோயால்ஸ்ரீமலடு)

நந்தியுரைத்தது நலமானகர்ப்பத்தில்
அந்தியநோய்தான் அறுவகைகேளுநீ
புந்தியில்வாயுவுந் தேயுவுங்கூடிடில்
மந்திமலடாவாள் மரணவரைக்சென்றே (௱௪)

(மலட்டுபுழுவால்மலடு)

வளையானகர்ப்பத்தில் மலட்டுப்புழுப்புகில்
விளையாஞ்சுக்லத்தை விளைந்ததுவுண்டிடும்
களையாமலடிடாங் காணதைப்போக்கிடில்
துளையானம்பிள்ளை சுகமாய்ச்செனிக்குமே (௱௫)

செனிக்கின்றபிள்ளைத் திறமாய்பிறக்கையில்
கனிக்கின்ற-சீ-நீர்கலந்துள்ளேசிக்கிடில்

பனிக்கின்றகைகால் பாவியேகுத்திடும்
தனிக்கும்பசிபோகுந் தான்வயிறும்பாரிப்பே (௩௬)

பாரியவாய்வு பரிந்துகுழிப்புகில்
தாரிக்கழிந்து சதநித்தங்கூப்பிடும்
வாரியுடம்பெலாம் வலிக்கும்இடைநோகும்
ஆரியன்சொன்னறிந்தவர்சித்தரே (௩௭)

சித்தானகர்ப்பத்திற் சேர்ந்திடுமிரத்தந்தான்
மத்தாயுருண்டு வரியுபோலோடிடும்
உற்றபசிபோகும் உழன்றேயினைந்திடும்
வற்றுக்கழிச்சலாம் வன்சூதகவாயுவே (௩௮)

சூதானமாமிசஞ் சுழித்திடிற்கர்ப்பத்தில்
வாதானமேகத்தால் வழங்கிச்செனிப்பிக்கும்
போதாவுடம்பெலாம் புண்போல்மிகநோகும்
நீதாமயக்கமாய் நிர்ச்சிவனவளே (௩௯)

ஆகின்றநோய்க ளருவிதங்காண்கர்ப்பத்தில்
பாகொன்றி நின்றுற் பலியாதுகர்ப்பந்தான்
வாகின்றதைப் போக்கில் மலடிபெறும்பிள்ளை
ஆகின்றநோய்க்கெலா மறைந்தமுறைபாரே (௪௰)

(கர்ப்பச்சன்னிகுணம்)

அறைந்திடச்சன்னிக ளாகாதுகர்ப்பத்தில்
இறைந்திடுஞ்சீயி னுட்புகும்வாயுவால்
விறைந்துமிகவியர்க்கும் மெய்யில்மயக்கமாந்
துறைந்திடுபற்கிட்டுஞ் சோம்பிக்கும்பாருமே (௪௰௧)

பாருமேபெண்தான் பச்சுடம்பாங்காலம்
தாருமனுபோகந் தனிக்காடியுண்ணுதல்
ஆருக்குமாப்பண்ட மாகாதுமாங்கனி
சோருமேகொண்டிடிற் கொண்டிடுஞ்சன்னியே (௪௰௨)

கொண்டமலடிக்குக் கூடிடுஞ்சன்னிதான்
மண்டியிருக்கையில் மாத்தின்பாள் மோருண்பாள்
தண்டியணிவாள் தனிச்சூதக்காய்தின்பாள்
ஒண்டியபெண்களுக்கோரொட்டுச்சன்னியே (௪௰௩)

ஒரொட்டுச்சன்னி யுழண்டதுபெண்ணுக்கும்
வரரொட்டு ஆணுக்கும் மகத்தாஞ்சுகசன்னி

தேரிட்டுப்பார்க்கில் நிகழ்ந்தது வெவ்வேறு
பாரொட்டுமெய்ச்ச பகுத்தமுறைபாரே (௱௰௪)

(கண்ணில்நோய்வருதல்)

பாரேபொடிச்சுடல் பருவெயில்மேற்படல்
வாரோறுசொங்கையாள் மாதைமிகச்செய்யல்
காரோமூழுக்குறல் கண்ணாலனல்பார்க்கல்
சீரோறுபாஷாணந்தின்றதாற்கண்ணோயே (௱௰௫)

கண்ணோய்வருகின்ற காரணம்இன்னுங்கேள்
பண்ணனமேகத்தாற் பருவெட்டைவாயுவால்
தண்ணும்-மலக்கட்டால்-தன்சலக்கட்டினால்
புண்ணுமிரணத்திற் போடுங்காரத்தாலே (௱௰௬)

காரச்சுறுக்கால்-கடுமிரசத்தூமத்தால்
நேரொத்தசாரம் நிறைமூக்கின்வாசத்தால்
பாரொத்தபேதியால் பலபலதண்ணீரால்
சீரொத்தக்கண்ணிற் சிறக்கும்வியாதியே (௱௰௭)

(குட்டநோய்பதினெட்டானகாரணம்)

வியாதியுண்மூவாறு விளங்கியகுட்டங்கேள்
சுயாதிக்கிரந்தி சுழல்மேகத்தாலாறும்
பயாதியமண்ணுணிப் பல்வண்டினாலெட்டும்
நியாதிப்புழுநாலுமாய்நின்றிந்தக்குஷ்டமே (௱௰௮)

(கண்ணோய்தீருமருந்து)

இந்துப்புத்திப்பிலி யியல்பீதரோகணி
நந்தப்பூச்சாற்றில் நயந்து அரைத்திட
அந்தகன் கண்ணுக் கருந்ததிதோன்றிடும்
நந்திக்குநாதன் நயந்துவுரைத்ததே (௱௰௯)

(சுரம்-தோஷம்-சன்னிவாயுகர்ப்பசூலைதீர்)

உரைத்தசுரம்போம் முறவானதோஷம்போம்
விரைத்திடுசன்னிபோம் மேலானவாயுபோம்
பரத்தியகர்ப்பத்திற் பாய்கின்றசூலைபோம்
குரைத்தநற்சூதக் குருக்கூட்டிப்பார்த்திடே (௱௨௰)

(மேகநோயிருபத்தொன்றுந்தீர)

பார்த்திடும்மேகம் பகிருபத்தொன்றும்
போற்றிடுமப்பிரகம் பொலிவானசிந்தூரம்
சேர்த்திடுஞ்சீந்திற் செவ்வாஞ்சருக்கரை
மாற்றிடுவெண்ணெயில் மாமேகம்போகுமே (௫௨௧)

(குன்மம்குஷ்டம்கிராணிமூலந்தீர)

போகுமேகுன்மம் புகட்டத்திராவகம்
போகுமேகுஷ்டம் புகட்டச்செயகெந்தி
போகுமேகிராணி புகட்டநற்பூநாகம்
போகுமேமூலம் புகழ்தங்கைச்செம்புக்கே (௫௨௨)

சங்கைகேள்நோய்தான் தனித்தநாலாயிரம்
சங்கைகேள் நானூற்றி நாற்பத்தெட்டென்பார்காண்
சங்கைகேளிவளவுந் தானுடலி லுண்டாகில்
சங்கைகேளெல்லாந் தவிடுபொடியாமே (௫௨௩)

(சகலநோய்களுந்தீரகுருச்சிந்தூரம்)

பொடியாநோய்போகப் புகன்றிட்டாரெந்நந்தி
மடிவானச்சூதம் மகத்தானதங்கமாம்
பிடிவானகெந்தியின் பேரானச்சத்து
குடியாய்சிந்தூரித்துக்கூட்டியேதின்றிடே (௫௨௪)

தின்றிடநோயெலாந் திசைகெட்டேயோடிடும்
பன்றிடவாயுவுன் பக்கத்திற்சேராது
தன்றிடலோகர்க்குத் தானுசாதிம்முறை
மன்றிடசித்தர்க்காய் மாவியாதிபோகவே (௫௨௫)

வியாதிகள்போக வெகுராட்சடமுற
பயாதத்தினாநனா பாங்காய்த்தவிர்ந்திட
கயாதிக்கவனக் கலந்தெங்குஞ்சுற்றிட
அயாதியஞான மஞ்சாகுஞ்சித்தியே (௫௨௬)

அஞ்சியு த்திலழியாமல்காயத்தை
மிஞ்சியேகற்பம்விளம்பினேனூற்றெட்டு
தஞ்சமுறவேதான் தின்னவல்லோர்க்கு
பஞ்சைநரைபோய்ப்பதின்கோடிவாழ்வரோ (௫௨௭)

வாழ்வதென்றல்லமகாசத்தியெட்டுமாம்
சேழ்வதென்றெண்ணிக்கெடுக்காதேமாண்பரோ

(மேகநோயிருபத்தொன்றுந்தீர)

பார்த்திடும்மேகம் பகரிருபத்தொன்றும்
போற்றிடுமப்பிரகம் பொலிவானசிந்தூரம்
சேர்த்திடுஞ்சீந்திற் செவ்வாஞ்சருக்கரை
மாற்றிடுவெண்ணெயில் மாமேகம்போகுமே (௱௨௧)

(குன்மம்குஷ்டம்கிராணிமூலந்தீர)

போகுமேகுன்மம் புகட்டத்திராவகம்
போகுமேகுஷ்டம் புகட்டச்செயகெந்தி
போகுமேகிராணி புகட்டநற்பூநாகம்
போகுமேமூலம் புசழ்சங்கைச்சேம்புக்கே (௱௨௨)

சங்கைகேள்நோய்தான் தனித்தநாலாயிரம்
சங்கைகேள்நானூற்றி நாற்பத்தெட்டென்பார்காண்
சங்கைகேளிவளவுந் தானுடலிலுண்டாகில்
சங்கைகேளெல்லாந் தவிடுபொடியாமே (௱௨௩)

(சகலநோய்களுந்தீரகுருச்சிந்தூரம்)

பொடிடாநோய்போகப் புகன்றிட்டாரெந்நந்தி
மடிவானச்சூதம் மகத்தானத்தங்கமாம்
பிடிவானகெந்தியின் பேரானச்சத்து
குடியாய்சிந்தூரித்துக்கூட்டியேதின்றிடே (௱௨௪)

தின்றிடநோயெலாந் திசைகெட்டேயோடிடும்
பன்றிடவாயுவுன் பக்கத்திற்சேராது
தன்றிடலோகர்க்குத் தானுசாதிம்முறை
மன்றிடசித்தர்க்காய் மாவியாதிபோகவே (௱௨௫)

வியாதிகள்போக வெகுநாட்சடமுற
பயாதித்திரைநரை பாங்காய்த்தவிர்ந்திட
கயாதிக்கவனங் கலந்தெங்குஞ்சுற்றிட
அயாதியஞான மஞ்சாகுஞ்சித்தியே (௱௨௬)

அஞ்சியுளத்திலழியாமல்காயத்தை
மிஞ்சியேகற்பம்விளம்பினேனூற்றெட்டு
தஞ்சமுறவேதான் தின்னவல்லோர்க்கு
பஞ்சைநரைபோய்ப்பதின்கோடிவாழ்வரே (௱௨௭)

வாழ்வதென்றல்லமகாசத்தியெட்டுமாம்
சேழ்வதென்றெண்ணிக்கெடுக்காதேமாண்பரே

தாழ்வதொன்றில்லைச்சதகோடிவேதையா
மாழ்வதேவேதையதுகாணுங்கற்பமே (௱௨௮)

கற்பமேதென்றுகசடறோவென்றதே
யற்பமுமல்லவகண்டமகாசித்தி
சொற்பமுமல்லத்தொடுமுனவலோக
மற்படுத்தங்கமாற்றுபதினாறே (௱௨௯)

பதினாறுமாற்றுபோல்பாலையாமுன்தேகம்
விதிநாளுங்கையோன்மெய்யெழுத்தைப்பொய்யா
மதிநாறமீசன்வாகுற்றமுறைபாடு
கெதிநாறவுண்டுகிட்டாய்சமாதியே (௱௩௰)

சமாதிக்குமுன்செய்யுஞ்சங்கைவகைகே
ளமாதிதவம்பிலைகையாலேவழலைபோம்
புமாதித்தகுஞ்சரன்போகுமலமெல்லாம்
தமாதித்தகும்பகந்தம்பிராணாயாமே (௱௩௧)

ஆமேயிதுமுன்னடவாகத்தீர்ந்தபின்
போமேயுறமயம்புசட்டியதிபமாய்
ஓமேபரத்திலுறவாய்மனஞ்சேருந்
தாமேசிவமாந்தனிச்சீவமில்லையே (௱௩௨)

இல்லையிதத்தேயிறுக்கியேபாராதே
மல்லலயத்தில் மதிட்டுமேமாயாதே
தில்லையேமுத்தினைச் சேர்ந்திடுமாயோகம்
வல்லயார்சாவழி மார்க்கமுமக்கென்றே (௱௩௩)

மூக்குநுனியில் மூட்டுமனத்தைநீ
மூக்கினிடையோடு முழங்குமசபைதான்
மூக்கினிடைவிட்டு முன்னோடிப்போகாது
மூக்கினொளியோடி மூட்டும்பிர்மாண்டமே (௱௩௪)

பிர்மாண்டமும்மூட்டிப் பேசுமேமுன்னின்று
கர்மாண்டசாண்டங் கடுகுபொடியாச்சு
தர்மாண்டமோட்சந் தனியாம்பரத்துள்ளே
நிர்மாண்டசித்தாய் நிலைத்திடுமூலியே (௱௩௫)

நோய்வரலாறு முற்றுப்பெற்றது.

(மூலிகைக்கற்பங் கூறுகின்றது)

மூலிகைக்கற்ப முயன்றதறுபத்தும்
பாலியுபரசம் பாங்காயறுபது
வாலியசூதமுந்தங்கமிகரண்டு
யோலியொருநூற்றுப்பத்திரண்டொன்றே (௱௩௬)

ஒன்றானகற்பத்தை யுண்ணுதேமாண்பாகேள்
கண்ணானவேதைக்குக்கலங்கியமூவார்கள்
பண்ணானகற்பம் பதித்திடுமேனியில்
தண்ணாய்நவலோகஞ் சாயப்பசும்பொன்னே (௱௩௭)

பொன்தான்பிறந்தது புகழானகற்பத்தில்
பொன்தான் பிறந்தது போராந்துரிசியில்
பொன்தான்பிறந்தது புகழானகற்பத்தில்
பொன்தான்யுபசரம் போக்கில்பிறந்ததே (௱௩௮)

பிறந்திடுங்கெற்பந்தான் பேருகத்தின்கையில்
கறந்திடும்வாமமுங் கடுமலமேபோக்கு
முறந்துவழலையு மூன்பித்தமும்நீக்கித்
திறந்துபுளியுப்பைத் தின்றிடக்கியானியே (௱௩௯)

ஆனியடிக்குளத் திலங்குந்திரு
மூனிவேவருக்கன்னி யுமுப்பதாங்
காணியவைப்பசி கார்த்திகைசர்க்கரை
மேனியாங்கடுக்கனு பானஞ்சொல்வதே (௱௪௰)

சொல்லுமேமார்கழி தையுமேதோன்றிடும்
மல்லுமேமாசியும் பங்குனிதப்பினி
மெல்லுமேசித்திரை மேலாமவைகாசியும்
நல்லதேன்கடுக்கனுபானமாகுமே (௱௪௧)

அனுபானத்தோடே யந்தமாசத்தைபில்
கனுவாகக்கொண்டிடுங் காணமாமண்டலம்
பனுவாய்மலமறும் பாங்காய்வழலைபோம்
வினிபாதிதைவிட்டு வேண்டுங்குமரியே (௱௪௨)

(குமரிக்கற்பம்)

குமரியுடன்கள்ளிக்காய் கூருக்கூட்டிடு
அமுரியுடன்கொள்ள அண்டமலமறும்

உமிரியாமாம்பிஞ்சு வுள்ளேவிசிறிடும்
அமுரியாங்காய மழியாததானுமே (௩௪௩)

(மிளகுகற்பம்)

தானுமிக்கற்பந் தனியொருமண்டல
மானல்மலமு மளவற்றவாமமும்
ஆனுய்வழிந்து வுறுதிப்படுந்தேக்கு
தானுமிதைத்தாண்டித் தன்னூறுங்கொண்டிடே (௩௪௪)

(அமுரியில்மிளகு)

நூறுமிளகுநுகரும் வமரியில்
வேறுமருந்தென்ன மிக்காயசித்திக்குத்
தேறியிதனைச் செலுத்தவல்லார்க்கு
மாறிமயிரு மறுமயிராகுமே (௩௪௫)

ஆமிகுகற்பமடவாக மண்டலம்
வாகுடன்தின்று வளமாகத்தீர்ந்தபின்
பாகும்பொறுக்கும் பலகற்பந்தானுக்குங்
காதுங்கறுத்த கரிச்சாலைதின்றிடே (௩௪௬)

தின்றகரிச்சாலை தேகந்திரைபோகுந்
தின்றகரிச்சாலை சிறந்தநரைபோகுந்.
தின்றகரிச்சாலை தேசஞ்சிறுபிள்ளை
தின்றகரிச்சாலை சிதையாதுவாக்கையே (௩௪௭)

ஆக்கையிரண்டுக்கு அகமாம்பொற்றலை
வாக்குக்குறிய வல்லாரையோடைந்தும்
ஊக்கனவாகிலும் பாலிற்குழைத்துண்ண
வாக்கையழியாது வாயிரத்தாண்டாமே (௩௪௮)

ஆண்டாயிரத மளந்துமேகொண்டலந்
தீண்டாதேபெண்ணைத் தேகங்கொடுபோகும்
பூண்டவிதஞ்சும் பொலியக்கறுப்பாக்கி
யூண்டியேயேந்தி யுறுதியாஞ்சங்கையே (௩௪௯)

(பஞ்சமூலிகைகற்பம்)

சங்கோல்பத்திரி தக்கோலஞ்சாதிக்காய்
செங்கோல்வித்துடன் சீர்வன்னிப்போர்கொண்டை
முன்கோலவேருடன் மூளக்கோல்நெய்கலந்
தைங்கோலங்கொண்டாற்றுன் கோலங்கொண்டாரோ (௩௫௰)

கொண்டபினேழாந் தாங்கற்பமேகேளுந்
தண்டயதங்கந் தனிக்ருதமப்பிரேகம்
ஒண்டியுருக்கி யுணர்வாய்ச்செந்தூரித்து
தண்டும்பணவெடை தான்தினந்தின்னுமே (௱௫௧)

தின்னவேமேனி சிறுகதிர்போலாகு
மன்னியகாயந்தான் வாங்குங்கெவனமாம்
முன்னிடில்மேலே யொளித்தமனோன்மணி
பன்னியலாவயிற் பார்க்கலாம்பாருமே (௱௫௨)

(வாதசத்துச்செந்தூரம்)

பாருமேபடாந்தரம் பாங்கானகற்பத்தை
தாருமேகெந்தகச் சத்தொடுதங்கத்தைச்
சேருமேசூதஞ் சிறக்கவுருக்கிட
ஏருமேகூட்டி யியல்பாச்செந்தூரியே (௱௫௩)

செந்தூரந்தின்றத் தின்மோராப்பணவெடை
சந்தூருமேனி களங்கத்துப்பொன்போலாம்
எந்தாரும்போக லாமெங்குமிருக்கலாங்
கெந்தூரக்கெவன மாங்கிஷிம்நீலமே (௱௫௪)

நீலஞ்சேரதி னேரிடைகெந்தகம்
ஏலங்காலுடனே மிரதமுமவ்விடை
கோலநீலியின்சாற்றில் குழைத்துண்ணப்
பாலனுமாவார் பார்தந்தியாணையே (௱௫௫)

ஆணுமலசல மடவானபாண்டத்தில்
பூணவேவிட்டுப் பொலிவாகமண்டலங்
காணக்காத்துக் கலந்தூற்றசூதத்தை
பூணவேசாத்தா லுறவா யுருக்கிடே (௱௫௬)

உருக்கியெடுத்து வுறவிநேசாரணை
செருக்கியபாலுடன் செய்வாய்க்கனபுடம்
பெருக்குங்கவனந்தான் பேரண்டஞ்சுத்திடும்
வருக்கியசித்தரில் வாசிப்பார்பாருமே (௱௫௭)

(பத்தியம்)

பாருமேகற்பம் பலபலவேதின்னி
லாருமேகொள்ள வகையாதுகற்பேகம்

வாருமேனென்பார் மகத்தானசித்தர்கள்
காருமேபத்தியங் காட்டினார்பாலன்னே (௱௫௮)

பாலுடன்வெல்லம் பயறுமரிசிநெய்
போல்வகைத்தின்பனே பொற்கனிதேனுடன்
மேல்ப்பணிபார மிளகுபொன்னாங்காணி
சீர்பெறும்யோகிகள் சித்தர்கள்பூசையே (௱௫௯)

(தலைமுழுக)

புளிக்கறிகைப்பு புலாவாட்டிறைச்சியும்
களிம்புசுண்ணம்பு கடுகுள்ளிக்காரெண்ணெ
யளிம்புலவண மாகாதிவையொன்று
மூளம்பெறுசித்திக்கும் யோகிக்குமொண்ணாதே (௱௬௰)

யோகிடுமுகமிழை புறவாடல்நீராடல்
பாகியநெய்யாம் பலபலசித்தர்க்குத்
தாகித்ததாகந் தனிப்பாலும்வெந்நீரு
மாகிமுழுக வயந்தவழகெண்ணே (௱௬௧)

அழகுநுதலி யதிசயமேகேளாய்
களவுகாயங் கலந்தவந்நீரிலே
மிளகுமஞ்சள் கடுநெல்லிவேம்பிடில்
இளகுங்காய மிறுகுங்கபாலமே (௱௬௨)

(மூலிகைக்கற்பம்)

கபாலமிறுகுங் கண்ணுந்துலக்கமாம்
அபாலமிந்தனி அதிவண்டுபோலாகும்
விபாலத்திசைவாய்வு வேதனைசெய்யாது
இபாலத்தினுள்ளே யெளிதாகமத்தியே (௱௬௩)

மத்தித்தசித்தர்கள் மாள்வாரோமாளாரோ
உத்தகருமுறைத்திட்டா பென்னந்தி
பத்தித்தபூரணம் பார்த்தவர்மாளார்கேள்
குத்தித்தகற்ப முன்னுண்டார்சேட்டிடே (௱௬௪)

(மூலிகைகற்பயாகவகை)

கேட்டிடுவஞ்சுக்கொடியானமூலிகை
நாட்டிடுகரிசாலைநலமாய்க்கறப்பேற
வாட்டுகுழிவெட்டியதிலேநல்மண்ணிட்டு
பூட்டுசெங்கொட்டைபுகழாகவெட்டியே (௱௬௫)

வெட்டிப்பரப்பிமேலேநல்மண்போட்டு
ஒட்டிவிளையுட்டுறவுருநல்லநீர்
வட்டிமூதலத்தான்வளமாமனைவாசிக்
கட்டிவிளையக்கலர்மண்ணீக்கொட்டையே (௱௬௬)

கொட்டைதனைப்போட்டுக்கொட்டிப்பரப்பிட்டு
சட்டையாமுன்விளைதானேதேனியிட்டு
அட்டியநீர்விட்டடவாயருக்குநீ
இட்டமாய்மூணுந்தாமிப்படிப்பண்ணே (௱௬௭)

மூணுந்திரத்தில்மூழுகறுப்பாமேலா
மாணுனசித்தர்களங்கங்குசெய்வது
வேணகெடிகள்வெளுப்புகறுப்பாகும்
ஊணவேசெய்துண்டவுத்தமர்தான்கேளே (௱௬௮)

கேளுசதாசிவன்கெடியேழுலட்சந்தான்
நாளுமயேசுரன்நான்மூன்றுலட்சந்தான்
ஊழிபவிசனுமயன்திருலட்சந்தான்
வாழியான்கொண்டது வைம்பத்தாயிரமென்றே (௱௬௯)

என்னபிரமன்றனெழுப்பத்தாயிரம்
பன்னமுனிவர்பகிர்ந்ததிலாயிரம்
மன்னியசித்தர்கள்மற்றுள்ளோர்கொண்டார்கள்
தன்னநல்மூலர்சாவுபொய்யானதே (௱௭௰)

பொய்யாச்சுசாவென்றார்போனார்பிரமன்மால்
மெய்யாயடைந்தார்கள்விளங்கியமூவரும்
ஐயாவிதுவென்னஆச்சரியஞ்சொல்லாய்
மையானகன்னிகள்மாயத்தால்மாண்டதே (௱௭௧)

மாண்டதிதிருலோமாதிண்டோவென்னந்தி
பூண்டதிவர்கள்புகழ்வாழ்ந்ததெவ்விடம்
வாண்டதுமேருவடியிற்கணேசன்கேள்
தாண்டவதின்மேலேதான்பிரமாதியே (௱௭௨)

பிரமாதிமேலேபிறந்தமால்பட்டணம்
அறமாதிமேலேயரனுடபட்டணம்
நிறமாயதின்மேலேநின்றமயேசுரன்
தறமாயதின்மேல்சதாசிவன்வாழ்ந்ததே (௱௭௩)

(பிண்டவுற்பனம்)

வாழ்ந்தவிதஞ்சின்மேல்வாசலிற்சிற்பரி
ஆழ்ந்தவதின்மேலணுகும்பராபரம்
வீழ்ந்தவசனைவிடுநாலோமிடங்குமாய்
சூழ்ந்தவைகண்டந்துலேடாப்பிரமமே (௫௭௪)

பிரமமுதலாய்ப்பிறந்ததேயிவ்வண்ட
மரமாண்டபிண்டத்திலப்படியேகண்டேன்
தாமாண்டலோகத்தோர்தாக்கியுநோக்கியும்
உரமாணக்காணுதுழல்வதென்னந்தியே (௫௭௫)

நந்தியைநோக்கார்நடுவணைநோக்குவார்
பந்திலையநோக்கிடார்பார்ப்பார்சபையை
அந்தியையேயறையிலாகாக்குரங்குதான்
வந்திடவேகனம்வாசனைபூணுமே (௫௭௬)

பூணிடில்வாசம்பொதியில்மனமோடி
யூணிடியலட்சயமுமூன்றுசுழன்றிடும்
கோணிக்குரங்காற்குறிநூறக்கெய்யாது
பேணிப்பிடித்துப்பிதற்றுவார்பேயரோ (௫௭௭)

பிதத்தாமல்நோக்கப்பிரமவழிகாண
மதத்தமதுவுண்டுமனதெண்ணப்பூரண
மதைத்தானேயான்காணுவதுவென்னையுட்கொள்ள
எதிர்த்தாலேயாகுமென்னீசனந்தியே (௫௭௮)

ஈசனைக்காணவெளிதாய்ப்பாங்கான
வாசானைத்தாண்டியகண்டமயங்காண
வாசானவாசல்மனோமணிபேசிட
யோசனைசூதமுமுயர்ஞானமொக்குமே (௫௭௯)

ஒக்குமேசூதமுமொப்பற்றஞானமுஞ்
சிக்குமேபூரணந்தெவிட்டாதேகாணுமோ
மக்குமோவாசனைமனக்குரங்கேகுமோ
தக்குமேதேகஞ்சாத்திடாயென்னந்தி (௫௮௰)

சாற்றுங்குளிகையைத்தான்வாயிலேவைத்து
ஏற்றியேநீபாரோமுசனைகாணும்
போற்றுமனோன்மணிபுகழுங்கடந்தபின்
தீற்றியபூரணம்நிர்மலங்காணுமே (௫௮௧)

நிர்மலமாகும்நீண்டவடசோணர்
நிர்மலமாகுமேதின்றடல்பூரணம்
நின்மலமாகுமேதின்சாய்கையேபொய்டாம்
நிர்மலமாகவேநின்றிடற்காணுமே (௩௮௨)

காணும்வழியேதுசாரணனென்னந்தி
பூணும்விராக்கிலொருதீபங்கீழ்நோக்கி
லாணியவிங்கவந்தபுலகையோடு
பூணியேதீபம்பொரிந்தங்குபத்துமே (௩௮௩)

பத்தியதீபம்போல் பராபரங்கீழ்நோக்கில்
எத்தியெடுக்குமிதுகாண்மகாசித்தி
யத்திகுளிகையுமட்படியேகாணு
முத்திக்குமாமேதான்முன்னின்றுகாணுமே (௩௮௪)

(பற்பம்)

காணுமேதேகந்தானகத்திநடுவோடும்
பூணுமேதேகம்பிடித்தவிடம்பொய்யாம்
கோணுமேமேனிகொழுந்தாகுஞ்சோதிபோல்
ஆணுமேகாணுமையாமறையுமே (௩௮௫)

மறையும்பூரணம்வளர்ந்தமுடியேது
மறையும்பூரணம்வாழாதடியேது
மறையும்பூரணம்வளர்ந்தபனிரண்டில்
மறையும்பூரணம்வளமாகநாலெட்டே (௩௮௬)

நாலேதுயெட்டேதுநாட்டிடாயென்னந்தி
காலோடுமூலங்கலந்தோடிடையத்தில்
டாலோடுமூட்டிப்பறிந்தபனிரண்டும்
பூலோடுயெட்டுந்தான் புக்கித்துப்பாருமே (௩௮௭)

பாரிதுவெட்டுப்பறிபட்டதுநாளும்
ஆருமறியார்களண்டிடும்பூரணம்
வேருமுதலும்விளங்கினேன்கேள்மூலர்
சேருமிதனில்சேர்ந்தவர்சித்தரே (௩௮௮)

சித்தர்க்குநாலோதெவிட்டாதபூரணம்
மத்தித்தவெட்டின்வகைசொல்லாயென்னந்தி
ஒத்தித்தொருவிரலுயர்ந்தபரமாகு
மத்திரண்டாந்தான்மகத்தாஞ்சிவமென்னே (௩௮௯)

மகத்தானமூவிரல்மாயமகாசத்தி
பகத்தானநாலும்பரிவானநாதங்கேள்
அகத்தானஐவிரலாதிமகாவிந்து
சகத்தானவாறுஞ்சதாசிவம்பாருமே (௱௰)

(பஞ்சபூதவேராஞ்சம்)

மூருரல்பார்க்கில்மயேசுரம்மேவரும்
மேருதட்டாமலுயர்ந்திடுருத்திரன்
சேருமிதெட்டால்சிவனங்கேள்சஞ்சார
ஊருமறியாரறிந்துகொளுண்மையே (௱௰௧)

உண்மைதானிமையோடுங்கும்வகைசொல்லாய்
வண்மைப்பிரமன்றன்மாலொடுசேருவான்
தண்மையாய்மால்தான்தனிருத்திரன்சேரு
மண்மையருத்திரனுக்குமயேசனே (௱௰௨)

மயேசுரன்சென்றிலேவாறுஞ்சதாசிவம்
மயேசுபாவிந்துவிற்பாய்ந்துவொடுங்கிடும்
வயேசுரவிந்தவடங்குமேநாதத்தில்
தயேசுரநாகத்தைத்தான்கொள்ளுஞ்சத்தியே (௱௰௩)

சத்தியொடுக்குந்தனித்தசிவத்துள்ளே
ஒத்திச்சிவந்தானுயர்ந்தவராட்டிய
நத்தியைவாட்டியைநடத்துவாள்சிற்பரி
கொத்துடன்சிற்பரிகூடியேநிற்குமே (௱௰௪)

நிற்குமப்பூரணம்நீண்டமுகசாலை
தக்குந்தாள்வாசல்தனிக்குமனோன்மணி
ஒக்குநெருப்பாறுவோடமயிர்ப்பாலம்
சிக்குபோசிக்காதோதிறந்துநீபார்த்திடே (௱௰௫)

பார்த்திடப்பார்த்திடப்பாழாகும்பேய்மனம்
ஏர்த்திடயேர்த்திடவெழுந்திடும்வாசனை
சோர்த்திடக்கோர்த்திடசுருங்குகலைத்தோடும்
சேர்த்திடமார்க்கந்தெளிவிப்பாய்நந்தியே (௱௰௬)

தெளிந்தாயேமைந்தாநீசேரவேயோவ்வொன்றாய்
யழிந்தேசடந்தேயகண்டத்தில்புக்கிடேல்
அழிந்தாயிரத்தெட்டுங்கடுகுபொடியாக
ஒழிந்தவாராட்டியனேக்கலுமாண்டதே (௱௰௭)

மாண்டவருன்னுள்ளேவந்தவழிசொல்லாய்
ஏண்டியசித்தர்களெல்லாரும்போனாரோ
ஆண்டனேமூலமறிவிப்பாயென்னந்தி
ஊண்டேனேயுற்பனமுணாத்திட்டாய்போதமே (௱௬௮)

(உபதேசம்)

போதமேயென்றுபுலம்பினமாணாக்கள்
மாதர்மனோன்மணிவந்தாளவ்வாசலில்
ஓதநினைத்தாலுண்டாணாளீசனை
காதையவீசனுக்கச்சத்தியானதே (௱௬௯)

சத்தியில்நாதம்தனிநாதம்விந்துவாமீ
வெத்திச்சதாசிவம்ஊட்டிமயேசுரன்
கொத்தியருத்திரன்குலாவியமால்சஞ்சன்
பத்திமுறைகேள்பலபலசீவனே (௨௱)

இருக்கின்றசீவன்கேளெல்லாத்திற்பூரணம்
மருக்கியிருக்குமலதக்காணலில்லோர்கள்
தெருக்கியேதிண்டாடுந்தேர்வித்துநாதந்தான்
சொருக்கியேவைத்திடஞ்சுருதிமுடிந்ததே (௨௱௧)

முடிந்தமுடிவேதமுற்றம்படியேது
கடிந்தகதலிப்பூகண்டத்தில்நின்றாடும்
படிந்தவிதழ்தான்பதினாறாய்நின்றது
அடிந்தநடுவேயறுகோணம்பார்த்திடே (௨௱௨)

பார்த்தாயோமூலர்பாதத்தினடியிது
ஏத்தாயோடன்னமெடுத்தவதிச்சடம்
கூத்தானகூப்பிடுங்கொட்டாவிசெம்பண்ணல்
காத்தங்கடிநிற்குங்கண்டாங்கதைபாரே (௨௱௩)

அங்கென்றவோட்டிலடிவிட்டசையாது
சிங்கென்றுசென்றுதனிலெட்டுமுள்ளோடி
பங்கொன்றுநாலும்பாத்தின்முடியாகும்
நங்கென்றுநாட்டியநாட்டமதுபாழே (௨௱௪)

(அண்டவுர்பத்தி)

பாழென்றுசொன்னீர்பகர்ந்திடுமுப்பாழை
மூழென்றொருவிரல்படலங்காவெளியாழாந்

தாமென்றிருவிரல்தனியொளிப்பான்பாழாம்
வேமென்றமூவிரல்வெளியாமொளிப்பாழே (௨௱௫)

பாழ்மூன்றுதாண்டிற்பராபரபூரணம்
நாள்மூன்றுகோடிநாடிலுமெட்டாது
தாள்மூன்றுகண்டாற்சகலமும்பூரணம்
கேள்மூன்றினுமேலகெடியண்டமானதே (௨௱௬)

அண்டந்தானிம்மட்டேவப்பாலுமுண்டோதான்
பண்டுமுதற்பாழ்படர்ந்தீயாச்சென்று
தண்டும்பணருந்தலிக்கொம்புகாய்பழம்
ஏண்டுவிளாயொன்றிலோரண்டநின்றதே (௨௱௭)

நின்றுயிரத்தெட்டுநேரொருகாயாச்சு
பண்டானகொம்பும்பணருமதிற்காயும்
கண்டாருளைப்பார்காண்காணவுங்கிட்டாது
பண்டானவத்திபரத்தனடிகண்ணே (௨௱௮)

(வேறு)

கண்பார்க்கக்கிட்டாததெண்டொக்காணவரிதெண்ணீர்
நண்பாகப்பார்க்கவேமார்க்கருஞ்சொல்நந்தி
வன்பட்டகண்ரண்டும்வைத்துமுனைமூக்கில்
தென்பட்டநாலுஞ்சிதையாமலநோக்கிடே (௨௱௯)

சிதைக்குமேநாலொன்றுசேரவெறும்பாழாய்
பதைக்குமஞ்ஞன்மணிபட்டப்பகலாவாள்
உதிக்கும்ரவிசோடியொப்பல்லவொப்பல்லவே
கதிக்கின்றபூரணங்களையில்லைபார்த்திடே (௨௱௰)

களையற்றுநின்றகலிங்ககற்பூரணம்
உளையற்றநின்றதொளியாமகாபோதம்
நிளையற்றுநின்றசிறுபிள்ளைகாட்டிடில்
வளையற்றுநிர்க்குணம்வாக்கற்றமோனமே (௨௱௰௧)

மோனமறிந்துமூவுன்றுசியோட்டிடில்
கானமிருந்தேன்கடுவூரிடைவாழ்ந்தேன்
தானமேன்தனமென்னசாவேன்பிழைத்திட
ஊனமேனண்டமேன்வாரிதிபொய்யாச்சே (௨௱௰௨)

பொய்யாமோவையாபுகழூறக்கண்டது
மெய்யானசாங்கத்தால்வார்த்தையால்பொய்யென்பார்

கையாறக்கண்டதுங்காணுதேபோய்விட
வையாசமாதியடைந்தார்க்குக்காணுதே (௨௱௰௩)

காணுதேபோய்விடில்சாணுநடனந்தான்
ஊணுதேபூணிடவோங்குந்தொனிபத்துந்
தோணுதேம்தாணுஞ்சுருரிமுடிந்திடந்
தோணுதேதம்முறைக்குறிப்பதுபோதமே (௨௱௰௪)

போதமேநோக்கவும்புக்கவெளிதோதான்
நீதமாய்மெள்ளநிலையுற்றுநீபாராய்
காதமுமல்லகாண்கண்ணுக்கடுக்கக்காண
சாதமுறையோடேதப்பாமற்பார்த்திடே (௨௱௰௫)

தப்பாமற்பார்க்கவுந்தனஞ்செயவோனந்தி
ஒப்பாகவுன்செயனூடியொளியாகும்
முப்பாழுந்தாண்டுமுடியமட்டுந்தோன்று
மப்பாவுனக்குமேல்வாதியொன்றில்லையே (௨௱௰௬)

இல்லையென்றுமெல்லையெங்கும்பராபரம்
இல்லையென்றுமெல்லையருக்கொம்பும்பின்னென்று
இல்லையென்றுமெல்லையேகமென்பார்காணுர்
இல்லையென்றுமெல்லையெனக்கெல்லைசொன்னதே (௨௱௰௭)

சொன்னவழிகேளுஞ்சூட்சவராட்டியன்
றன்னியகண்டத்தின்வைத்தான்மனவடி
பன்னியவெட்டுள்பரந்தமுடிபார்த்தான்
தன்னையேயான்சொன்னேன்சாதிக்கவல்லோர்க்கே ()

வல்லோர்கள்பார்ப்பார்கள்வராட்டியன்தானுக
எல்லோர்க்குமெய்தவெளிதாக்சோமெய்ஞ்ஞானம்
பல்லோர்பரமாய்பார்பிராவராட்டியை
சொல்லோர்மயிர்ப்பாலஞ்சூட்சங்களத்தாண்டே (௨௱௰௯)

தாண்டிடில்வாசனைதவிடுபொடியாச்சு
ஆண்டிடில்மற்கட்டுமுழன்றங்கிறுத்தது
தாண்டிடில்றகிற்பனாசுடர்கோடிபானுபோற்
காண்டிமோனக்கர்கடத்துவெளிபாரோ (௨௨௰)

வெளிக்குமழிவில்லைமென்மேனுமுடிவில்லை
ஒளிக்குமுடிவில்லைபூணவடியில்லை

தெளிக்கும்வினையதில்சேர்ந்ததுவுன்மனம்
வளிக்கும்வராட்டிமனமும்வெறும்பொய்யே (௨௨௧)

மனந்தானேவிந்தமகத்துவமானது
மனந்தானேவிந்தவழிதாண்டிக்கூடிற்று
மனந்தானேமாயத்தில்மருவியலைந்தது
மனந்தானேநீதான்மாறுதபோதமே (௨௨௨)

மாறுக்கருணைக்குள்வாழ்ந்தாரோசித்தர்கள்
மாறுக்கருணையைவாவென்றழைத்தீரோ
மாறுக்கருணைதான்வாய்க்கும்வெளிதானோ
மாறுதவிட்டகுறையாலும்வாய்ச்சுதே (௨௨௩)

வாய்ச்சபெரியோர்மவுனமடைவார்கள்
வாய்க்சபெரியோர்மகாசித்தியாவார்கள்
வாய்ச்சபேரியோர்க்குமற்றந்துயரில்லை
வாய்ச்சபேரியோர்மகத்தானபிர்மமே (௨௨௪)

பிர்மவிசாரத்தைப்பேசிநிம்வேதாந்தம்
பிர்மவிசாரத்தைப்பேசுமறுநூல்கள்
பிர்மவிசாரத்தைப்பேசும்பதினெட்டு
பிர்மவிசாரத்தின்பேரதியார்களே (௨௨௫)

(தேவாறிகள்பீசம் சரக்குவிபரம்)

அதியார்சமயத்துளாறுபேர்களும்
அதியார்கள்மாயத்தழுந்தியபேர்களும்
அறியார்காளாங்காரத்தவ்வேர்பிடுங்காதார்
அறியாரறியாரறிவுள்ளோர்காண்பமோ (௨௨௬)

பரிச்சுக்குஞ்சூதம்பறமத்தோர்சமனிடை
துரிசிக்குமொக்குந்துலையாமனேன்மணி
வரிசித்தசாரம்வராட்டிக்குநேரொக்கும்
தரிசித்தசித்திக்குந்தன்னெக்குந்தாரமே (௨௨௭)

தன்னைசூதமுந்தானுநிமிளையும்
பொன்னைவிந்துபொறியுப்புநேர்சமன்
பன்னச்சதாசிவன்பணம்போக்குங்கர்ப்பூரம்
மன்னுமயேசுரன்வாழ்சவர்க்காரமே (௨௨௮)

வாழ்கின்றருத்திரன்றனக்கும்பொன்னாகம்
வேழ்கின்றமாலின்விரிவொக்கும்வெண்ணாகம்
மாழ்கின்றகஞ்சனய நாகந்தன்னிறந்
தாழ்கின்றவிந்திரன்றன்கருநாகமே (௨௪௯)

(நாகம்வரலாறு)

கருவாஞ்சரக்குக்கலந்தவறுசுவை
மருவானதேவர்கள்மகாவிந்துகாணிது
உருவாகக்கட்டியேயோட்டினால்வேதைதான்
திருவார்பெறுவார் சின்னமுமில்லையே (௨௫௰)

சின்னமெடுத்திட்டார்சித்தர்கள்வாதிகள்
கன்னமேவாநிலையைக்காணமற்றாஷித்தால்
பன்னரவிகோடிபடுவார்நரகத்தில்
தின்னவறுமையால்திகைத்தேங்கிநிற்பரோ (௨௫௧)

(சொர்க்கம்)

நிற்குநரகமும்நிலையானசொர்க்கமும்
ஒக்கவேசொல்லியுலாத்திட்டாரொன்னந்தி
தக்கமலத்திலேதானுங்கிருமிகள்
மக்கள்நரகந்தான்மைந்தனேகண்டிடே (௨௫௨)

மைந்தனேகோபம்வளர்ந்தமுறையாலே
பந்தனச்சென்மம்பலபலவாய்விடும்
செந்தந்தசென்மஞ்செனிப்பதெல்லாம்பாரும்
கந்தனக்கோபங்கடும்பாவங்கண்டிடே (௨௫௩)

(நாகசொர்க்கம்)

கண்டோனேசொர்க்கத்தைக்காணும்வழியேது
நன்றானமானிடர்நரகஞ்செனித்திட்டு
பண்டேகுறையார்பராபரநோக்கினால்
உண்டேதான்சொர்க்கமுனாத்தமுறைபாடே (௨௫௪)

முறைபாடுகேட்டேன்முன்னேமெய்ஞ்ஞானத்தை
முறைபாடுகேட்டேன்முனிந்திட்டவாதத்தை
முறைபாடுகேட்டேன்முவத்துசந்தோஷித்தேன்
முறைபாடிம்மட்டோமுனிவர்க்குவைத்ததே (௨௫௫)

(குளிகையின்விபரம்)

வைத்துக்குளிகையுமகத்தானஞானமும்
ஒத்ததையுணாத்திருக்கும்பயனுஞ்சொன்னீர்
மெத்தக்குளிகைதான்வெவ்வேறுசூட்சமோ
உத்தபடிதானுணாத்திட்டாய்நந்தியே (௨௩௬)

உரைத்தபடிகேளுறுதியாவென்மைந்தா
தரைத்தசொரூபக்குளிகைமுதற்றாம்
விரைத்தவிரண்டாம்விளங்கியசூட்சங்காண்
கரத்திற்மூன்றுந்தரங்கமலினிபார்த்திடே (௨௩௭)

பார்த்திடுநாலாந்தரமட்டமகாசித்தி
சார்த்திடுமஞ்சாந்தரங்காணக்கமலினி
போற்றிடுமாறுந்தரங்காணும்யோகினி
ஏற்றிடுமேழாந்தரங்காண்விண்ணேணியே (௨௩௮)

வேகிப்பரிசமிதிலேடுவெட்டாசீசு
வாகித்துயான்சொன்னவழியெல்லாநீபாரு
போகத்துமேழினாற்பொன்னுங்கெவனமாஞ்
சோகொத்துநின்றசொரூபமுறைகேளே (௨௩௯)

முறையாங்குளிகையைமகிழ்ந்தங்குவாயிட்டு
மறைபாதபூரணமகத்துவம்நீபாரு
நிறைபரன்போல்நின்றிடுமுன்திரேகமாம்
கறைபானகண்டிப்புங்காணுதுகாணுதே (௨௪௰)

காணுதுபூரணங்களிக்தயோகிக்கு
காணுதுவிந்தக்கடிதாங்குளிகைக்குக்
காணுதுசாய்கையுங்கண்டமுங்கற்றபேர்
காணுதுநின்மலங்கற்பூரதீபமே (௨௪௧)

தீபத்தைப்போலேசிறந்துவெளியாகும்
மாவொத்தபூரணம்வாவாவென்றேகவும்
பாவொத்தவாசனையும்பலதுன்பமு
மாவொத்துப்போக்குமழியாதுகாயமே (௨௪௨)

காயமழியாதுகவனம்போமாயிர
மாய்முகில்லமகிழ்ந்ததவ்வண்டத்தில்
ஓயம்வசித்தருறவாடல்மேத்துண்டு
பாயவேமார்க்கம்பரிவாகவைத்தவே (௨௪௩)

வைத்ததுகேட்டுமகத்துவங்கைக்கொண்டேன்
உத்ததுசொன்னீருவட்டாவுபதேசங்
கைத்தலமேந்துங்கருநெல்லிக்கனிபோல
எத்தன்மைநாயெனையாண்டபோதமே (௨௪௪)

ஆண்டபராபரமருளுந்தொழிற்கெல்லாம்
பூண்டகணேசன்புசுழுங்குருபீசன்
நீண்டவென்னந்தியாரியல்பும்வயிரவன்
காண்டிவைவயைந்துங்களங்காறுப்பூசியே (௨௪௫)

(பூசைவிபரம்)

பூசிக்கப்பூசிக்கப்போட்டவுருவாகும்
பூசிக்கப்பூசிக்கப்போகும்வெருவேதை
பூசிக்கப்பூசிக்கப்பொன்மலையாகும்
பூசிக்கப்பூசிக்கப்பூண்பாமெய்ஞ்ஞானமே (௨௪௬)

மெய்யாஞ்சுருபக்குளிகையோடெட்டையும்
வையானநூலிலும்வாடினேம்பாருங்கள்
கையாரக்கண்டுகளக்கற்றுக்காண்பார்கள்
மையானமூடர்க்குவாதம்பலியாதே (௨௪௭)

பலியாதுவாதம்பசுவானசரக்குக்கு
பலியாதுவாதம்பல்லாயேதூஷிக்கில்
பலியாதுவாதந்தான்பாவமாக்கோபிக்கு
பலியாதுவாதம்பரம்பார்க்காமூடர்க்கே (௨௪௮)

(துன்மார்க்கம்)

மூடருக்கெட்டாதமுத்தியும்பத்தியும்
வீடானக்காடுவிட்டகுறையாலே
தாடறவாதந்தனித்தனியேயைந்துங்
கூடிறஞானங்குலாவியசித்தியே (௨௪௯)

(நன்மார்க்கம்)

சித்தியைக்கண்டால்சிவன்றானவன்றானும்
பத்தியஞானமும்பட்டம்பசலாகும்
சத்தியாக்காயந்தவருதொருநாளும்
புத்தியையுன்னியபூரணம்பார்த்திடே (௨௫௰)

பார்த்திடப்பார்த்திடப்பாழிற்படர்ந்ததிக்
கோர்த்திடவண்ணமுங்கொப்புவெளியாச்சு

சேர்த்திடத்தாயைத்திரும்பியேயான்பார்க்க
மாத்தியமாச்சுமாயவெளியாச்சே (௨௫௧)

வெளியாமுப்பாழில்வேறென்றீராரொன்றீர்
ஒழியாதுயென்றவுணாக்கவரிதென்றீர்
நழிவானசித்துநயந்தமாகாசித்து
தெளிவாஞ்சிதாகாசஞ்சேர்ந்தவெளிமூன்றே (௨௫௨)

மூணின்முடியின்முகிழ்ந்தமனோன்மணி
பேணிவயிற்றினிற்பேரண்டமாச்சென்றால்
வாணியாள்வார்த்தைமகாகோடியாச்சென்றும்
ஊணித்துடைத்தாளேயொக்கவெறும்பொய்யே (௨௫௩)

(கன்னிப்பலன்)

பொய்யாச்சுதேயென்றால்போச்சுதுபொய்யாக
மெய்யாச்சுதேயென்றால்விரவிச்சுஅண்டங்கள்
கையாச்சரியாமோகன்னிப்பிலந்தானே
பையாச்சுபூரணம்பாரீர்விலாசமே (௨௫௪)

விலாசத்தினாலேவிரிந்ததுசனங்களும்
விலாசத்தினாலேவேகித்துத்தாபரம்
விலாசத்தினாலேவிரிந்துமனமாச்சு
விலாசத்தையுன்னிவிளைந்தேறமுத்தியே (௨௫௫)

விளைந்தகுளிகைக்கும்வேதைக்குஞ்சித்திக்கும்
அறைந்தகுருவுக்குமமர்ந்தகளங்குக்கும்
பறந்திடுஞ்செப்புபகர்ந்தயநாகமும்
தரந்தயக்கன்மசந்தான்போக்குச்சத்துக்கே (௨௫௬)

(சத்துக்கள்சோதிக்கவகைகள்)

சத்துவகைக்குந்தனித்தனிச்செப்புக்கும்
பத்தியாக்கன்மசம்பாங்காகத்தீர்ந்திட
ஒத்துவுருகையிலூட்டமுறைகேளு
சுத்தியுமஞ்சுவிதம்பாருசொன்னோமே (௨௫௭)

சொன்னவளகினிற்சூட்டிவிடைநாலு
பன்னவேகாரமும்பாச்சதில்மூன்றிடை
வன்னயவீரமதிலோரிடைகூட்ட
வென்னப்பொடித்துவளமாகத்தாவிடே (௨௫௮)

தூவவேயின்னஞ்சூட்டமுறைகேளு
காவியிடைநாலுகட்டுப்புத்தான்மூன்று
ஓவியகாரமுருப்பொடுரெண்டெடை
தாவியலிங்கந்தானேரிடைப்பூவே (௨௮௯)

பூநீறுநாலெடைபொரிகாரமூன்றெடை
வானேரிணங்கன் வளமாகரண்டெடை
பானேறுவீரம்பரிவாகவோரெடை
ஆனீர்ப்பொடித்துயடவாகத்தூவிடே (௨௯௰)

அடவானசெங்கல்லதுகாணுநாலெடை
படவானகாரம்பகர்ந்தவெடைமூன்று
தடவானகாரமுந்தானேயெடைரண்டு
நடவான்லிங்கமும்நாடோரெடைசாம்பே (௨௯௧)

(தாம்பரபற்பம்)

சாம்பலெடைநாலுதனியுப்புமூன்றெடை
வாம்பாய்காராமுகில்மாட்டிவிரண்டெடை
காம்பக்கடல்நுரைகாடோரெடையதில்
தேம்பவராத்துநிரையப்பொடித்தூவே (௨௯௨)

பொடியானதஞ்சும்புகழ்பெற்றசோதனே
முடியாகக்கன்மசம்மோசனமாய்ப்போகும்
மடியாதுவொன்றுமகற்றிடுந்தோடத்தை
ஒடியாதுவொன்றுமுறப்போட்டுசசோதியே (௨௯௩)

சோதிக்கச்சத்தெல்லாஞ்சோதிமயமாகும்
சோதிக்கச்செம்பெல்லாஞ்சோதியருணனும்
சோதிக்கயங்காந்தந்துறைக்கெல்லாமுத்தமஞ்
சோதிக்கறியாட்டால்சூதத்தைக்கொல்லாதே (௨௯௪)

(நூல்விபரம் ஐந்துலட்சம்)

கொல்லாதுசூதத்தைக்கூடாதுவொன்றிலும்
வெல்லாதுவுப்புக்குவேதையுங்காணாது
இவல்லாதுகாயத்தில்மகாசித்தியாகாது
பொல்லாதகல்மசம்போக்கித்துறைபாரோ (௨௯௫)

பாரொன்றுமீசன்பராசத்திக்கேசொன்னார்
ஏரொன்றுவஞ்சுமேலட்சங்கிரந்தத்தில்

வாரொன்றூர்வண்ணத்தயிலத்திற்செம்பெல்லாந்
தாரொன்றுசத்தால்தச்சூதங்கட்டுமே (௨௬௬)

கட்டுவிதங்கேளுகண்டபலஞ்செம்பு
மட்டியசோதனையார்கட்டாரெல்லாம்பொய்
மட்டியமாண்பரிமயங்கிமறவாதே
ஒட்டியசோதிக்கவொருகோடிவேதையே (௨௬௭)

(குளிகைஅன்னூற்றைம்பது.)

சோடியென்றேசொன்னேன்கூறவொருகோடி
வாடுங்குளிகைதானன்னூற்றைம்பது
தேடித்திரிந்துதிகையாதேமாந்தரே
பாடினேனெண்ணாயிரத்தினிற்பார்த்திடே (௭௬௮)

{எண்ணாயிரம்·எட்டு·அன்னூறு-ஜால மூன்னூறு
ஒருநூறு-ஆயிரத்தைம்பது.}

பார்த்திடுமெட்டால்பகிர்ந்ததுவன்னூறு
கோர்த்திடுஞ்சாலங்குலாவியமூன்னூறு
சேர்த்திடுமூன்றால்திரண்டதொருநூறு
வார்த்திடுவாயிரமைந்ததுவைம்பதே (௨௬௯)

அன்பதுமாத்திரையாயிரத்தெட்டொக்கு
மன்பதுமாத்திரையகண்டம்விலாசிக்கு
மன்பதுமாத்திரையதீதப்பொருள்காட்டும்
அன்பதுமாத்திரையறிந்தவர்சித்தரே (௨௭௰)

சித்தர்வயதென்னவிரட்டியவாயிரம்
பத்தர்சிவயோகிபார்த்துப்பிழையுங்கள்
கொத்தாம்சடைபடைக்குறைந்தமுடிகாட்டும்
மத்தாதபூரணமத்தாமதுபாரே (௨௭௧)

பாரொன்றூர்நந்திபரந்தவசடையை
வாரோண்டிமூலத்தில்வானந்திச்சேட்டுக்குள்
தாரொன்றினுலுந்தனிக்கண்டத்தேகூட்டி
தேரொண்டியாடிச்சுநிறைந்திருக்கே (௨௭௨)

கதிரோதுவென்றீர்கலங்காமூனைமூக்கில்
சதிரானயோகிக்குந்தன்னிடத்தேயோடும்
மதிரானஞானிக்கதுகாண்பராபரம்
எதிரிகிலோகத்திறந்தமுறைகேளே (௨௭௩)

முறையாம்புவியில்முழங்கியசிவன்கள்
நிறையானநித்திரைநெடுவீதியோட்டத்தால்
குறையாச்சேயோகத்தால்கொட்டாவியேக்கத்தால்
வறையானமுப்பத்தறுபதுமோடுமே (௨௭௪)

ஓடும்புரியட்டமொவ்வொன்றாய்ச்சினிச்சு
நாடும்பரத்தில்நமனுக்கிரையாவார்
நீடும்பரமும்நிறைந்துள்ளேவாங்கிடில்
ஆடுந்திருநடனம்பலங்காணுமே (௨௭௫)

காணுங்குறிப்புக்கடுமேலோகீழதோ
நாணுஞ்சபையடிப்பூதமேரண்டமோ
ஊணுமேயாறுமூழ்கிச்சுழியோடே
பூணுங்கபாலம்புகுங்குருபாதமே (௨௭௬)

(சமாதி)

குருமண்டலத்திற்கூறுயிரத்தெட்டு
கருமண்டலமூட்டிக்கவிந்தேப்புறமையும்
மருமண்டலக்கதிரண்டமும்பிண்டமுந்
தருமண்டலத்தோடுதானென்றாய்நிற்குமே (௨௭௭)

நிற்குமேயொன்றென்றீர்நேர்பார்க்கில்ரண்டாச்சு
தக்குமோநாதந்தனித்தமகாசத்தி
மக்குமோயீசன்மகத்தானவிந்துதான்
ஒக்குமோநேர்ந்துவொண்ணுமதுவாலே (௨௭௮)

நாலேமுடிவென்றில்நாலிரண்டேடதாச்சு
காலேகாணுட்சங்கலந்தபுரியட்டங்
கோலேகுறியோடிக்கூறும்வார்சித்தர்கள்
மேலேதுமில்லைவிரித்தநூல்பொய்யென்றே (௨௭௯)

பொய்யென்றீர்நூலைப்புகழ்ந்தமுறையேது
கையென்றயோகங்கடந்தகபாலத்தே
மெய்யென்றுவிண்டுவிளைந்துப்புகையோடி
தெய்யென்றுவாதச்சொல்லாச்சுதுபாரோ (௨௮௰)

சொல்லானமார்க்கந்தான்சொன்னதுயோகிக்கு
வல்லாஞ்சபைமறித்தேமுகடேத்திட
கல்லாங்கபாலங்கடந்தணைமேலூண்டு
எல்லாத்தெரிசனம்மேறவுங்காணுமே (௨௮௧)

சாணுமேயென்றீர்கண்மூக்குவேருச்சு
பூணுமேயோடிப்பொய்ப்பூண்டமனத்தோடே
ஊணுமேயங்கேயுறம்பாழிற்பூரணம்
தோணுமேயாச்சுடர்கொடித்தீபமே (௨௮௨)

தீபச்சுடரோதான்றீக்கெல்லாங்காண்பது
தீபச்சுடரோதான்சேர்ந்துசபையினில்
தீபச்சுடரோதான்தெவிட்டாமுனைநாசி
தீபச்சுடரோதான்சிறந்ததுநாலுமே (௨௮௩)

சிறந்தவிதம்ரண்டிற்செய்வதெதுநன்று
உறைந்திடும்போகத்தாலூடியேமுட்டிலுல்
கறந்தகபாலங்சடந்தெப்பொருள்காணும்
நிறைந்தேநெடுமூட்புநின்றதுஞானமே (௨௮௪)

ஞானந்தானல்லோநாலாம்பதவெளி
வானந்தானல்லவோவடிவந்தயோகத்தில்
பானந்தானல்லவோபாரத்தில்நல்லூறல்
கானந்தான்மூப்பாழ்கடந்ததுபார்த்திடே (௨௮௫)

பார்த்திடப்பார்த்திடப்பாழும்வெளியாச்சு
ஏர்த்திடவேர்த்திடயெல்லாம்வெறும்பொய்காண்
தோர்த்திடுமண்டலஞ்சுருதிமனோன்மணி
பூர்த்திடும்பூவதும்பொய்யாச்சுநந்தியே (௨௮௬)

பொய்யாச்சுதையாபுகுந்தபின்பூரணம்
நிய்யாச்சியாகவெருண்டவகைகாணேன்
சிய்யாச்சுமேனிசிறந்தவாராதாரம்
தையாச்சுநித்தந்தனியோசைகூட்டமே (௨௮௭)

ஓசைத்திசைநாதமூண்டென்பாரெல்லாரும்
போசைக்காண்பாசமடங்காதவாசனை
கோசச்சின்னங்சொடுசோம்மூனையும்போய்
மாசற்றபூரணமடியிலடைந்தோர்க்கே (௨௮௮)

அடைந்தபின்மூப்பாழடவாகத்தோன்றிற்று
முடைந்திடுஞானசரிதைமுதற்பாழாய்க்
கிடந்திடுஞானக்கிதுகையோனிப்பாழாய்
விடைந்திடும்யோகம்வெளியொளிபாழாச்சே (௨௮௯)

பாழானமூன்றில்பசிந்திடும்யோகந்தான்
நீழாய்மனத்தாலேநின்றதுவெவ்வேறு
கோழாப்பிடரிக்குழியில்மனமோடி
தாழாணைநோக்கிடிற்றுயங்கேகாண்பளே (உகூ௰)

காண்பளேதாய்தான்கவிந்தவிடமெல்லாம்
பூண்பாய்மனந்தான்புகழ்ந்தமனோன்மணி
எண்பாழ்வெளியெல்லாமெட்டாதபூரணம்
நான்பார்க்கக்கண்டுநலமுற்றேனந்தியே (உகூக)

நந்திகொடுத்தது நல்லபதியொன்று
யந்தித்தவாங்சவகண்டவெளிகாடடும்
வந்தித்துவாங்கிடவாசிவாவென்றோடும்
பந்தித்துக்காட்டாய்பராத்தினடித்திதே (உகூஉ)

அடியிலேகட்டியகண்டத்தைநீபாரு
முடிவில்மனோன்மணிமுன்னின்றபேசுவாள்
படியில்மனந்தானேபோச்சவளாகும்
நெடியவெழுத்தாகநின்றதுபார்த்திடே (உகூ௩)

பார்த்திடுநீதான்பகுந்திவ்வெளியோடி
ஏர்த்திடுமேலேயிருக்கும்வகாரந்தான்
சேர்த்திடுரண்டையுந்தேசிமகாவாசி
கார்த்திடும்பாருகருதுமுனைநீயே (உகூ௪)

முனையில்மனமோட்டிமூட்டிவிழிரண்டும்
நினைவிலேநோக்கிடநின்மலங்கண்டிடுங்
கனவிலேகண்டதுங்கண்ணுறக்கண்டதுஞ்
சுனையிலேமூழ்குந்துறைபோலுமானதே (உகூ௫)

துறையாமனமொன்றித்துலங்குமனோன்மணி
நிறையாமனதுக்குநிலையாட்பிறப்பேது
கறைவாசனையாங்கருவியாந்தோல்மூடி
மறையாப்பிறப்பாச்சுமைந்தனேகண்டிடே (உகூ௬)

கண்டபிறப்பின்கருவையறிந்திட
ஒண்டியுந்தேசமூனாத்திடாயென்னந்தி
தண்டியவாசந்தனித்தபொறியஞ்சும்
வண்டாதடித்துவகண்டத்தைப்பார்த்திடே (உகூ௭

கிர

கண்டத்தைப்பார்த்தாலறுமேபிறவிதான்
கண்டத்தைப்பார்த்தாலழியாதுவன்தேகம்
கண்டத்தைப்பார்த்தாலட்டமாசித்தியாம்
கண்டத்தைப்பாருகவண்டமுநீயாமே (௨௯௮)

நீயாமகண்டாம்நிகரில்லைபின்னென்று
மாயாத்திசைகளடங்கிற்றுவுன்னுள்ளே
ஓயாதபூரணத்தாடலாமாடலாம்
பாயிரத்தண்டம்பாயுமுறைகேளே (௨௯௯)

பாயுஞ்சொரூபக்குளிகைப் பாய்வாயில்
காயுங்கமலினிகட்டிடுவுந்தியில்
வாயுநல்லட்டமாசித்திலையக்கைப்பிடித்
தேயுவைப்போலச்சிறக்கநுழைந்திடே (௩௱)

(திருமூலர்கெவனம்போனது)

நுழைந்திட்டேனானும்போய்நோக்கினேன்பேரண்டம்
கிடந்திட்டவண்டங்கெடியாயிரங்கண்டேன்
நுழைந்திட்டப்புவனமுமிருநூற்றிருபது
மழைந்திட்டேனெல்லாமளாவித்திரிந்தேனே (௩௱௧)

திரிந்தேசந்தோஷித்துதேகத்தைநோக்கினேன்
புரிந்தபதமும்புவனமுமண்டமுந்
தெரிந்தேமயக்கற்றேன்சிந்தைதெளிவுற்றேன்
பரிந்தேன்குளிகையில்பாக்கியமெய்யாச்சே (௩௱௨)

மெய்யாச்சுவாத்தாள்வெளியிலேபூத்தது
பொய்யாச்சுஞானப்புகட்டியேநோக்கிட
நையாச்சுபிண்டத்தைநானென்றல்கண்டிடு
தையாச்சுகண்டாற்சகலமுஞ்சாணுதே (௩௱௩)

(கற்பந்தின்னவயது)

காணுதுசித்தர்க்குச்சாயம்வலுநிற்க
ஏணுகத்தின்னவிலைசந்தமுறைகேளு
ஈணுகவயதுயிருபதில்மண்டலம்
பூணுவறுபதில்போல்லொட்டித்தின்னிடே (௩௱௪)

திண்ணிடுதொண்ணூறில்சேர்மூன்றுமண்டலம்
பண்ணிடுதாண்டில்பலியாதுகற்பந்தான்

மண்ணிடைமாண்பரோவருந்திப்பிறக்காமல்
எண்ணிடுமேனியிளந்தைப்பருவமே (௫௱௫)

பருவமாய்வாழ்ந்தாற்பலனேதோவெண்ணாதே
அருவமாய்ஞானவகண்டமகாயோகஞ்
சுருபமாய்வாய்க்குஞ்சுகசித்தியாடலாம்
நிருபமாம்பாழுநிலையும்வெளியாமே (௫௱௬)

வெளியானகாலத்தில்மேருவைச்சுத்தலா
மெளியானகாலம்விளங்கிடுமண்டங்கள்
வெளியானகாலத்தில்மேலெட்டுஞ்சித்திக்கும்
வெளியானஞானம்வெளியில்வெளியாமே (௫௱௭)

(நூல்விவரம்)

ஆமேயிக்கற்பமறிந்தவர்கொள்ளுவார்
காமேவிகாரத்தாற்கசப்பென்பார்காட்டாதே
தாமேபுளியுப்புதள்ளாட்டாற்பொய்யாகும்
காமேவியுண்டதுநாடோர்க்குஞ்சொன்னேனே (௫௱௮)

சொன்னேன்முன்வாதஞ்சுகமாங்குளிகைகள்
சொன்னேனேவசியந்துறைதோறுங்கற்பங்கள்
சொன்னேனேயோகந்துரியமாமெய்ஞ்ஞானஞ்
சொன்னேனறிந்தசுகயோகசித்தர்க்கே (௫௱௯)

சித்தர்க்கிதைவிட்டால்தேசத்துநூலெல்லாம்
ஒத்துக்கிடவாதுவுமையுந்தெரியாது
கொத்துப்படவொன்றுய்க்கோர்வையுங்கிட்டாது
வத்துநீகண்டுவலையத்திலைபாரே (௫௱௰)

பாரோயிந்நூல்தான்பட்டப்பகலொக்கும்
சேரோபலநூலைச்சேரிலிருட்டனா
யாரோனும்பாருங்கோளந்தாதிதப்பாமல்
சீரோதுவாராட்டால்சேரவுஞ்சித்தியே (௫௱௰௧)

சித்தியுமாகுந்தேகமழியாது
முத்தியுமாகுமேமூவுலகுக்கெல்லா
மத்தியபூரணமாகத்தேதண்டிடுஞ்
சத்தியஞ்சொன்னேனேதப்பாதுநந்தியே (௫௱௰௨)

(பஞ்சபொறி வித்தை)

தப்பாதுலகுசகஜாலக்கூத்தாச்சு
ஒப்பாப்பொறிதானுயர்ந்தமகாமேருங்

கொப்பானமாயக்கொடியதினாயாச்சு
வப்பாமானந்தானறியாமல்கெட்டதே (௫௱௰௩)

கெட்டதினாலோகக்கேள்விமுயன்றது
பட்டதுமீன்தான்பகுந்திரைக்காசித்து
நட்டிதுவண்டுநற்றீபம்பூவேண்டு
மட்டிதுமான்தான்மணியாசைக்குள்ளிதே (௫௱௰௪)

உள்ளானநெக்காகவோட்டியெறும்பூர்ந்து
தள்ளாதேபுக்கித்தலைசுற்றிமாண்டது
கொள்ளப்பரிசங்கொசுக்குண்டுபட்டது
விள்ளாதேறைந்தும்விரைந்தபொறியிதே (௫௱௰௫)

பொறியாலேகெட்டார்கள்பூமியிலுள்ளோர்கள்
மறியார்மனதுக்குவந்துமகாமாய்கை
நெறியாகநில்லாமல்நினைவையறியாமல்
சிறியாருடுத்தினசிற்றாடையானதே (௫௱௰௬)

(ஊத்தினருணம்காமதீர்பட)

சித்தாடைகட்டுஞ்சிறுபெண்ணாள்வாதந்தான்
மூத்தாரப்பெண்ணாலேமூதண்டமாத்திரை
வித்தாரப்பெண்ணாலேவியந்தவயத்தம்பம்
சுத்தேயறிந்துகடந்ததுபார்த்திடே (௫௱௰௭)

பார்த்திடுமுத்துச்சுபக்குவந்தப்பினால்
ஏர்த்திடதீருமில்லாட்டால்சிட்டமாம்
சோர்த்திட்டவாட்டுக்குமறினால்வெண்டாகு
மார்த்திடுஞ்சொன்னேன்உளமாகச்செய்திடே (௫௱௰௮)

கடந்திட்டால்காமதீர்காணாதுபேய்வாத
மிடந்திட்டால்சாரணையெடுக்காதுமாத்திரை
புடந்திட்டந்தப்பினால்பொய்யாகுஞ்சட்டெல்லாந்
தடைந்திட்டரைப்பேதில்சண்டிக்கும்பார்த்திடே (௫௱௰௯)

செய்ததுரிசிசிறந்தகுருவாகும்
பைதவமேவப்பசுமையுமெத்தானால்
கைத்தவமிறன்னக்கலங்காமேதமாண்பமோ
வைதனக்காமதீரதிகமாம்வார்த்திடே (௫௱௨௰)

வார்த்ததுவெயிலில்லை வளமாய்த்தினம்பத்து
கோர்த்ததுக்குளறிக்கொடியரவிபட-

ஏர்த்தியெடுத்திடுயெல்லாக்குருவுக்குஞ்
சாதியநூல்முறைதப்பாதுநந்தியே (௬௨௧)

தப்பாதசெந்தூரஞ்சமைக்கில்பதந்தப்பில்
ஒப்பாகமுன்போலேயூட்டியெடுத்திடு
மெய்ப்பாகஞானமீவிளங்குஞ்சிவசத்தி
நட்பாகபூசைநல்கறச்செய்திடே (௬௨௨)

(பூசையினங்கால்)

செய்திடில்வாதந்திடுமுடிபண்ணுதே
செய்திடில்வாதத்திற்சேர்ந்துட்டதருதே
செய்திடுவாதந்திறமாகப்பண்ணிவா
செய்திடுவாதநூல்சேரவுஞ்சித்தியே (௬௨௩)

சேருமினங்கண்டுசேர்த்துநீசெந்தூரி
சேருமினத்திற்சிறக்கக்குருடண்ணு
சேருமினத்தோடுசேரக்களங்காகும்
சேருமினந்தப்பிற்சேரவெறும்பொய்யே (௬௨௪)

பொய்யாதென்னூல்தான்போக்கோடேபார்த்திடு
கையாரவேசெய்துகண்டுகளித்தேனன்
மையார்ந்தகண்ணிக்குமகாயீசன்சொன்னது
வையாங்கிரந்தத்தில்வழங்கும்பொருளிதே (௬௨௫)

பொருளேமூன்றுலட்சம்போக்கெல்லாநான்பார்த்து
அருளாலேநந்தியடங்கிற்றெண்ணாயிரம்
மருளாதேநின்றுவழியோடிதைப்பாரு
இருளேதுவெளியேதுயேகமுமொன்றுமே (௬௨௬)

(சித்தியில்லான்.)

ஒண்ணாகக்கண்டிடுவுத்தமஞானத்தைப்
பண்ணும்பொறிகள்பதையாமல்வென்றிடு
கண்ணுனகற்பத்தால்காயஞ்செயம்பண்ணு
அண்ணார்ந்தலையாதேயடங்கலுஞ்சித்தியே (௬௨௭)

சித்தியேகாணசெய்வோர்முறைகேளு
பத்தியேகோபிட்டார்பராதூஷிகளமூடன்
மத்திமபுத்திமருளன்மகாமோகி
எத்தியபொய்யோனிடும்பர்க்குமாகாதே (௬௨௮)

ஆகாக்கொலையனமும்பன் வெகுகோளன்
பாகாய்ப்பலபெண்ணைப்பார்த்தேங்கிப்பின் செல்வோன்
வாகானதர்ம்மவனாதப்புமகாபாவி
சோகாவிகாரத்தான்சோம்பர்க்குக்காணாதே (௫௨௯)

காணாதமூத்தோர்க்கனுகியதந்தைதாய்
கோணாதேவைவோன்கொடுஞ்சிலதூஷிகன்
வீணாற்பரானவெறுமைவெகுதுஷ்டன்
பூணாக்குருதுஷ்டன்புல்லோர்க்கும்பொய்யாமே (௫௩௰)

ஆமேகலப்பழியடங்காதகாமத்தான்
தாமைத்துடக்கன்சுகியில்லாச்சண்டாளன்
சேமேசுவ்வேடந்தெரிசிக்கில்தூஷிப்போன்
வாமேவுசொல்லர்க்குவாதநூல்பொய்யாமே (௫௩௧)

நூலானநன்னூல்நுகர்ந்தவர்பார்த்தாலுஞ்
சாலாணியாற்றுக்கனகம்பிறவாது
சேலானசெந்தூரஞ்சேர்ந்துபழுக்காது
சூலாசைபோலேசுழலுவார்துரோகியே (௫௩௨)

துரோகிக்குவாதநூல்சொல்லநரகெய்தும்
துரோகிக்குஞானநூல்சொல்விடிற்றோஷமாம்
துரோகிக்குக்கற்பத்தைச்சூட்டவெகுபாவந்
துரோகிக்குத்தன்காணாதூரத்தேபோய்விடே (௫௩௩)

(சித்திகாண்பலன்)

தூரத்தேபோவென்றூர்சொல்லுவதாருக்கு
போரத்தவேதாந்திபிர்மவிசாரத்தார்
வாரொத்தபூச்சக்ரமகத்தாஞ்சிவயோகி
நேரொத்ததர்ம்மநிலைத்தோரைப்பார்த்திடே (௫௩௪)

பார்த்திடுஞ்சாந்தம்பாதாரமிச்சியான்
கார்த்திடும்வாசியைக்கண்டுகளித்தோர்கள்
ஏர்த்திடும்யோகத்திருந்தோர்பெரியோர்க்குச்
சேர்த்துக்கயிலாசங்கிட்டுமென்செப்பிடே (௫௩௫)

செப்பிடில்பத்திசிறக்கவேசோதிக்கில்
ஒப்பிக்குருமுன்னேவுபசாரம்போலாகுந்
தப்பிலாமார்க்கம்பார்தானிதுவாதம்பார்
அப்பினிலுப்புப்போலமர்ந்தவிதம்பாரே (௫௩௬)

அமர்ந்தால்பிழைப்பானல்லாட்டால்பேயாவான்
தமர்ந்தமயக்கமாந்தங்கத்தைதக்கண்டேடன்
எமன்தானுமேதென்பானென்மூலனேயாரென்பான்
சமைந்தான்பதம்பார்த்துத்தணலைக்கைக்கொட்டே (௫௫௭)

கொடுத்தவழிசொல்லுங்கூடிஞானத்திரள்
தடுத்தேமனந்தன்னைச்சார்ந்திடுவாசியை
அடுத்தேயிதைப்பார்த்துஅப்பால்நூல்பாரொன்று
விடுத்தேதொழிலைவிடுவித்துக்காட்டிடே (௫௫௮)

காட்டிடுநூல்முறைகண்டேதொழில்பாரு
பூட்டியவார்த்தைபுகழுற்றுப்பாராதே
போட்டிடுவார்த்தைபொய்யர்பின்செல்லாதே
ஆட்டிடுநூல்கண்டுஅர்த்தமறிந்திடே (௫௫௯)

அறியாதகாலத்திலறிந்தவர்பின்சென்று
கிரியானைப்போலேசிறக்கத்தொழில்பண்ணு
மறியாமனத்திலேவைத்திடுநேசத்தை
நெறியாகவாய்க்கும்நிலையுந்தவறாதே (௫௬௰)

வாய்க்குமேநூலென்றுவார்த்தையால்பார்த்திடில்
ஏய்க்குமேவாதந்தானெம்மட்டும்பார்த்தாலும்
காய்க்குமோகாய்த்தால்காயாதகாலத்தில்
நாய்க்குமேன்தேங்காய்நலமதுபார்த்திடே (௫௬௧)

(மூலம்)

பார்த்திடுங்காயப்பரத்தின்முடிவைப்பார்
ஏர்த்திடுவாசியினிந்தமுறைகேளு
சேர்த்திடுமூலங்குமட்டிவகாரத்தை
போர்த்திடுசிகாரத்தைப்போகாமல்ரோசியே (௫௬௨)

ரோசித்துப்பூசித்துநின்றிடில்குண்டலி
மாசித்துநந்திவசனிப்பார்நீபாரு
நீசித்தோடெட்டெடும்நிலையாதஞானமும்
வாசித்துமந்திரமார்க்கத்தைக்கண்டிடே (௫௬௩)

கண்டேகடந்துநீகஞ்சன்பதிகூடி
ஒண்டேவக்காரமூறுதியாய்நோக்கிட்டுத்
தண்டேசிகாரத்தார்தன்னுள்ளேரோசிக்க
பண்டேபிறப்பதும்பாழிப்பான்கஞ்சனே (௫௬௪)

(சுவாதிட்டானம்)

கஞ்சனைத்தாண்டிகடுமால்பதியூடி
மிஞ்சவகாரம்வினாயவேபூசித்து
ஒஞ்சியேகாரத்தையுன்னுக்குள்ளோசிக்கப்
பஞ்சநாயும்போம்பாழிப்பான்மாலென்னே (௫௪௫)

மாலைகடந்துமகத்தானருத்திரன்
காலையுறத்தாக்கிக்கலங்காதேநோக்கிட்டு
சாலச்சிகாரத்தைதன்னுக்குள்ளோசிக்க
மேலைச்சிவப்போடிவிரிவெட்டுஞ்சித்தியே (௫௪௬)

(மணிபூரகம்)

சித்தியாம்ருத்திரன்சேர்ந்பதிதாண்டி
ஒத்திமகேசனுறகும்பதிக்குள்ளே
அத்திவ்காரமசையாமற்பூரித்து
ஒத்திசிகாரத்தையுள்ளுக்குள்ளோசியே (௫௪௭)

உள்ளுமகேசனுறக்கும்பரத்தடி
தெள்ளியேநோக்கச்சிறுபிள்ளைதானவான்
அள்ளுங்கனிபோலேயாகுஞ்சிவயோகந்
துள்ளியவாசிதுடியாதுசித்தியே (௫௪௮)

(அநாகதவி சுத்தி)

துடியாமயேசுரன்சூழ்ந்தயதிதாண்டி
அடியாருஞ்சதாசிவமங்கேநீகாணுணி
மடிவாய்சிகாரத்தைவைத்துநீபார்த்திடு
கெடியாககெவன்மாங்கேளீர்மகாசித்தே (௫௪௯)

மகத்தர்மனேன்மணிமாதாவின்பாதத்தில்
அகத்தாமல்வாசியையப்படியேபார்க்க
செகத்தானமெய்ஞ்ஞானஞ்சேரநீராகார
மகத்தானவாசனைதானுநீயானதே (௫௫௰)

நீதான்குருபதநின்றபராபரன்
சூதானவாசியைச்சூட்டச்சிவயோகந்
தாதானபூரணந்தானேதெரிசனம்
வாதாம்வகாரம்சிகாரத்தின்மார்க்கமே (௫௫௧)

மார்க்கமுறையோடேவைத்துவைத்தங்சங்கே
ஏர்க்கவேபாருமெடுத்ததெல்லாஞ்சித்தி
தீர்க்கவிடமற்றுநின்றிடும்பூரணம்
பார்க்கமகாவித்தைபாருஞ்சேரானண்டமே (௫௫௨)

(ஆக்கினைக்குருபத்தி)

அண்டமிருந்தவடவுசொன்னார் நந்தி
தண்டியதஞ்சுந்தனித்தவடுக்காக
ஒண்டியிருந்துவோடிநுழையென்றார்
கண்டிக்கமலினிகாணீர்சொரூபமே (௫௱௩)

சொரூபத்தைவாய்வைத்துச்சூட்டிக்கமலினி
அரூபத்தைச்சோதிபோலண்டநுழைந்திட்டேன்
திருபத்தகற்பம்நிறையனையோகியுந்
தருவொத்தஞானச்சதாகோடிசித்தரோ (௫௱௪)

சித்தனைக்கண்டேன்தெவிட்டாதேபாழித்தேன்
ஒத்தியசித்துஉனக்கென்னவாச்சென்றார்
அத்தியகோடியறபதுவாச்சென்றேன்
எத்தியினஞ்சித்துயின்னம்பாரென்றாரோ (௫௱௫)

என்றேநுழைந்தேனியவொருவண்டத்தில்
கண்டேன்சித்தனைக்கடிபதுமைப்போல
தண்டேகைகூப்பினேன்தடாவினேன்தட்டாது
அண்டநீதகாரத்தடைந்தபெரியோனை (௫௱௬)

பெரியோர்தனைக்கண்டேன் போரய்வலம்வந்தேன்
நரியோமவுனமென்றப்பால் நுழைந்திட்டேன்
பரிவாயடுக்கொண்டு பாய்ந்துமுடியேறி
விரிவாமடுக்கில்விளாந்து நுழைந்தேனே (௫௱௭)

நுழைந்திடிலண்டத்தில்நூல்பார்த்தசித்தர்கள்
அழைந்திடுநூல்சொன்னதார்தானெனக்கேட்டேன்
தனஞ்செயவீசன்தாய்க்கண்டுசொன்னது
களந்தேழுலட்சங்களைகண்டுபார்த்தோமே (௫௱௮)

பார்த்தோமென்றீரோபராபரசித்தர்கள்
கார்த்தேயிந்நூல்தன்னைக்கண்டுசுருக்காதேன்
சேர்த்ததேசுருக்கச்சிவனுலுங்கூடாது
மார்த்ததேயுண்டாகில்மகத்துவஞ்சொல்வீரோ (௫௱௯)

சொல்லிடுமென்றீர்சுகஞானசித்தர்கள்
மல்லியநந்திதான்வைத்தார்கேளாயிரம்
பல்லுயிர்பார்க்கப்பகர்ந்தேழுலட்சமுங்
கல்லுயிர்வெட்டுபோல்காட்டினார்பார்த்திடே (௫௱௰)

பார்த்திடென்றீரோ நீர்பார்க்கு நூலெங்குண்டு
தேர்த்துமடக்குந் தெட்சணபாகத்தில்
ஆர்த்திடுவொரு நூற்றறுபதாமண்டத்தில்
சோர்த்திடுசித்தர்குலாவிப்படிப்பதே (௬௱௧)

படிக்கின்றநூலிற்பயனெல்லாஞ்சொல்லுமோ
படிக்கின்றநூலிலேபாச்சுமோசாரணை,
படிக்கின்றநூலிற்பரிதான் குருவாமோ,
படிக்கும்பதினைம்பாங்காமோசித்தரோ (௬௱௨)

பாங்காமோயெட்டெட்டும்பலசித்தொடு
வாங்காமலாடலாமற்றோர்க்குங்கிட்டாது
தேங்காமற்றேங்குஞ்சிவயோகப்பூரணம்
தூங்காமற்றூங்குஞ்சொரூபத்தைக்காட்டுமே (௬௱௩)

(நூல்வழி)

காட்டுமென்றீர் நூலைக்கைக்குள்ளாற்பேர்சொல்லும்
நாட்டியவாகிக்குருநாதநந்திதான்
கூட்டினார்சித்தர்க்குக்கொடுத்தார்தானிந்நூலை
ஆட்டியமூலர்தானமைந்தநூலென்பாரோ (௬௱௪)

(திருமூலர்)

அமைந்து நீர்சொல்லவோவென்றதிருமூலர்
மறைந்தேமயங்கியேவார்த்தையால்நீர்சொன்னீர்
குறைந்திடுமோநூலைகொடுத்தாக்கால்பூரணம்
உறைந்தேழுலட்சமுமொண்ணுக்கரிதென்னே (௬௱௫)

அரிதல்லகாணுமகப்பட்டால்வாசிதான்
புரிதல்லமூலத்திற்புகட்டினால்வாசியை
எருதல்லநந்தியெழுநூறமொன்றாகப்
பெரிதல்லோநூலைப்பேசவழிநீரோ (௬௱௬)

பேசாதநூலிலேபிறந்தமுறைசொல்லாய்
வாசாமற்சாரணைமருவியகட்டினம்
நேசாக்குடோரியும்நிலைக்குந்திராவக
மாசாப்பரிக்குருவகண்டசெந்தூரமே (௬௱௭)

(நூல்கோர்வை)

அகண்டகளங்கமடவாஞ்சலனங்கள்
நிகண்டானாத்துக்கள்நேர்பலசெம்புகள்

பகண்டகுளிகைகள்பார்க்கிற்செயநீருந்
தகண்டதிராவகந்தானினிக்கூட்டமே (௫௬௮)

கூட்டமாமூலிக்குறையாயுதங்களை
நீட்டியவஸ்துநிலைப்பதினேழு
மாட்டியேசொன்னேனேயாயிரத்துள்ளேநான்
பாட்டியேழ்லட்சமும்பாங்காய்ப்பிழிந்தொண்ணே (௫௬௯)

(மூலர்)

ஒண்ணாய்ப்பிழிந்தநூல்உத்தமாயோமூலர்
கண்ணோரக்கண்டால்கவலையகன்றிடும்
வண்ணூணாத்ததுமாக்கியேழுலட்சம்
எண்ணாயிரமீதிலஞ்சாகச்சொன்னேனே (௫௭௰)

சொன்னேனேமூவாயிரஞ்சுருக்காயிரம்
முன்னேயென்னந்திதான்மூர்நூறுமுப்பதாய்
பன்னென்னமூன்றுபகர்ந்தெழுமுறையாகத்
தன்னைமூலட்சமுஞ்சாதித்தேன்சித்தரே (௫௭௧)

சாற்றியநூலேழிற்றப்பாதோவங்கங்கள்
போற்றியவீசனால்போகறதேபொட்டிடன
நாற்றியேவாஞ்சுவல்லாஞ்சரியாரு
வாற்றியநான்போறேன்வாருங்காண்சித்தரே (௫௭௨)

வாருங்காணென்றுவளமாய்மருவண்டங்
கூருங்காணோடிக்கொடுந்தீபால்வெகுற்று
தாருங்காண்தப்பிதனியண்டம்விட்டுநான்
பாருங்காண்பாரொன்றுபாரீரடுக்கொன்றே (௫௭௩)

அடுக்கைக்கடந்துஅதுமேலேதான்தோற்ற
ஒடுக்கியேபாயிலுலாவுறுசித்தர்கள்
தடுக்கியமேனிதான்தங்கமுமொவ்வாது
மடிக்கியேபார்த்தென்னைவாவென்றார்சித்தரே (௫௭௪)

சித்தரோயெவ்விடஞ்சேர்ந்துவிருப்பது
பத்தித்தசித்தாலேபாய்ந்தீரோவண்டங்கள்
முத்திக்கும்புத்திக்குமுன்காயசித்திக்கும்
எத்திக்குநூலுமக்கேயிதுவென்றாரோ (௫௭௫)

என்றநற்சித்தர்களெய்தியநூல்கேளு
பண்டசிவன்சொற்பாபரியென்றாய்க்கு

கண்டேனடந்தேன் கவனித்தேனிவ்வண்ட
முண்டபதினேழாயெல்லாம்பார்த்தேனே (௫௭௬)

பார்க்கமுறைதான்பதினேழல்லோ நூலில்
ஏர்க்கவொன்றேதுயென்னையாசொல்லென்றார்
சேர்க்கவேபாருங்கள்சேரேழுலட்சமு
மார்க்கவேபார்த்தோமதிலொன்றைக்காணோமே (௫௭௭)

காணப்பொருளொன்றுகடந்தசொரூபம்
வீணாவர்கூவிவெளியாய்விடாது
தோணப்பொருளொன்றுந்தான்றஞ்சொரூபந்தான்
பூணகநந்திபுகழ்ந்தமுறையொன்றே (௫௭௮)

ஒன்றேகுளிகையையுத்தமாய் நான்பார்த்து
கண்டேகளிக்கக்கரத்திலேதாரமையா
பண்டேகுளிகையைப்பார்த்துநீசோபித்தால்
இண்டேயென்னகண்டமேறவுங்கூடாதே (௫௭௯)

கூடாதேபோகக்குளிகையெடுப்பாரோ
ஆடோமாடோநானதிவற்றசென்மமோ
நாடாங்குளிகையைநானிட்டுத்தாரோன்காண்
தேடாங்குளிகையைச்சித்திலையப்பார்த்தென்றான் (௫௮௰)

(மூலிகைக்குளிகை)

என்றவன்வாயிலேயிட்டேன்குளிகையை
யின்றியபூரணப்மார்க்கத்திற்போய்விட்டார்
நன்றேயருந்துவளாவினேன்காணுதே
தண்டிகபலினிதன்றைல்தொடர்ந்தேனே (௫௮௧)

தொடர்ந்தண்டந்தோறுந்தாத்தியேயான்செல்லிற்
கடந்தானேபோண்டங்களோயாயிரத்தெட்டும்
நடந்தானேபுவனமும்நாலும்பின்சென்றிட
வடந்தான்பதந்தாண்டியப்பார்பிடித்தேனே (௫௮௨)

பிடிச்சில்பிரிந்தான்பெரியவெளியூடே
அடக்கியமுட்பாழுமப்புறந்தாண்டினான்
நடக்குமனோன்மணிநாயகிவாசலி
விடிக்கிபிடிக்கையிலேகினான்சித்தனே (௫௮௩)

(திருடன்குளிகைவாங்கினது)

ஏகினானிஷ்களயேகவெளியிலே
ஆகினான்மட்டுமவன்பின்னேசுத்தினேன்
மாகியிலைத்தானவள்மாட்லைகசிக்கினான்
பாகியாவென்கை பறித்தேன்குளிகையே (௫௮௪)

பறிப்பாயோநீயென்றுபாங்காகத்தர்க்கித்தான்
தெறிப்பாயேநானேறித்திரிந்துவருமுன்னே
கறிப்பானகள்ளனோக்கனேபோக்கனே
குறிப்பாய்த்தொடர்ந்துகுறிசொல்லிநின்றானே (௫௮௫)

குறியேதுனக்குக்குறிகெட்டசித்தர்நீர்
பறியாச்சோவண்டத்திற்பார்த்தோர்சிரியாரோ
அறிவாட்சியில்லாதறிவிகாண்யான்றந்தேன்
நெறியாச்சுதென்றுநிமிஷத்தில்வந்தேனே (௫௮௬)

வந்தேயடுக்குவளமாகச்சோதித்து
பந்திக்கீழண்டம்பாய்ந்தேனடுக்கொன்றில்
அந்நித்தமேனியதிகவெண்சங்குபோல்
சிந்தித்தசித்தர்கள்சேரச்சமாதியே (௫௮௭)

சமாதிலையக்கண்டுசரணம்பணிந்தேகி
வமாதித்தவனம்வதுவிட்டுவோடையில்
ஓமாதித்தசித்தர்களொலிபார்க்கில்ரத்நம்போல்
குமாதித்துலாவையில்கூடிமுன்னின்றேனே (௫௮௮)

நின்றவனைப்பார்த்துநீராரென்றார்சித்தர்
தொண்டனடியேன்காண்சொற்பெறுமூலன்காண்
அண்டேயிருமென்றாரப்பனேவாவென்றார்
கண்டேனேசாரணைகாட்டுறார்சித்தரே (௫௮௯)

காட்டுநீர்சித்தரோகடுமணிப்பேரோது
தாட்டியவட்டமாசித்திமணியிது
தீட்டிக்கமலினிநேருண்டோவில்லையோ
தாட்டிகம்போறாதுதன்மாத்திரையுண்டே (௫௯௰)

உண்டென்றீர்மாத்திரையுறமேன்பிறக்காது
மண்டியதங்கம்வளமாய்க்குருசாண
முண்டியேதொந்தனையோட்டிட்டுஞ்சூதத்தை
தண்டியேகட்டிடச்சார்பையறியோமே (௫௯௧)

(தங்கக்குருமுறை)

அறியாதத்ஞலோவப்பனேமாத்திரை
மறியாச்சுருக்குமகத்துவமுமில்லை
குறியாகச்சொல்லாயோகூட்டுரேருஞ்சாரணை
பதிவானவண்டத்திற்பிறந்தபதிங்களே (௫௯௨)

கேளேபதிதான்கெடியாயிரமாற்று
நாளேறுரத்னங்கள்நாலாற்றின்மேற்றுண்டு
வாளேயுபரசமாற்றுன்வெகுவாண்டு
தாளேறத்தாரோந்தங்கக்குருசொல்லே (௫௯௩)

சொல்லுறேன்சித்தரோரூட்சாதிகூட்சமாய்
கல்லும்பழுக்ககவனமுங்கொடுபோக
மல்லியதீபநீர்மாருதமுண்டிட
நல்லுங்கமலினிநல்மாறகங்கேளே (௫௯௪)

கேளீர்நற்கார்முகில்கெடியானமாருத
மாளீர்ப்புளியுப்புமத்திக்கொளுத்திடு
வாளீர்விசைதான்வனமாகவன்பது
நாளீர்தலமித்திரம்நாட்டியுருக்கிடே (௫௯௫)

உருக்கியசூதத்திலூட்டியசாரணை
பருக்கும்பிரிக்கும்பகையெல்லாந்தீதானே
தெரிக்கில்விடுவிக்கநிர்மலமாய்நிற்கு
தரிக்கியதங்கத்திற்றுங்குஞ்சரியிதே (௫௯௬)

சரியாவிச்சூதம்போற்றுக்குநிமிளையை
வரிவாயுருக்கிமணிபோலதைவாங்கி
தரியானவீரஞ்சமைத்திடுவெண்கண்டர்
பிரிவாயிரத்தொடுபேணுங்குருவண்டே (௫௯௭)

குருவண்டினேடுகூட்டிடுவண்டத்தோல்
மருவிபசூதமகத்தானபூரமாம்
தருவியவேழுந்தனிக்காகம்நீராற்
பருவியவரைத்துநீபாச்சாய்மணிக்கேதான் (௫௯௮)

மணியைரவிபடவைப்பாய்தினம்பத்து
அணியவேகாமநீரப்பிவாதித்தலும்
பிணியாத்திறிவங்கம்பெருமடர்த்துதங்
கணியவணாத்துகவசித்தூலர்த்திடே (௫௯௯)

உலர்ந்தபிறகுவுறவாய்மிறிவிலே
கலந்தேநால்திக்குங்காட்டிடாய்நால்பீடம்
தலந்தேவெளியிலேதாக்குபுடமொன்று
வலந்தேகுருவாகுமற்புதஞ்சித்தரோ (௩௱)

அற்புதஞ்சொன்னேனடங்காப்பதிக்குரு
கற்பகமீதோகலங்காக்குருமுன்னே
நிற்புதசங்கம்நிறைந்தேறுந்தொந்தனே
நற்புதஞ்சூத்தனைதநாட்டிக்குருபாரோ (௩௱௧)

பாரொன்றீர்மூலர்பராபராவென்னையா
வாரின்றிபண்ணவுமற்றோர்க்குங்கூடாது
கூறொன்றவித்தைகுருதெட்சணைகேளும்
தாறொன்றதங்கமுந்தாக்குங்காண்மாத்ரமே (௩௱௨)

குளிகை

ரத்தினத்தோடேநலமானதங்கமும்
ஒத்தித்தசாரணையோர்முன்குளிகைக்கு
மத்தித்தெடுத்ததுவாய்பேச்சிருக்கையில்
கொத்தித்தசாந்தியுங்கொடியரவியாச்சே (௩௱௩)

ஆச்சேகுளிகையாலப்பால்கடந்திட்டே
பாச்சேசலமாய்ப்பரவிச்சுவோரண்டம்
நீச்சேகடந்தேநிறையநுழைந்திடில்
வச்சேசமாதியாய்வல்லோரிருந்தாரோ (௩௱௪)

இருந்தோனாச்சுற்றியெழிலாய்மறவண்டம்
பரிந்தேனுழைந்தேனென்பட்டம்பகல்போலே
தெரிந்தேநல்வரவுதிரண்டுதுயவ்வண்டம்
அறிந்தேகடந்தேனடுக்கெல்லாம்போனேனே (௩௱௫)

நுழைந்தேனதுக்கெல்லாம்நுகர்ந்தாயிரத்தெட்டு
மழைந்தேதிரிந்தபின்னுலையும்வர்ச்சித்தேன்
நுழைந்தேன்சகலமுமோடிமேனாடினேன்
தழைந்தேசமாதியிற்றுனேனந்தியே (௩௱௬)

(வாசிப்பிரயோகம்)

தானேயவனாகத்தானவனாக
ஊனநற்கோட்டமுறறிமுத்தப்பண்ணு

வானேநல்வாசியைவைத்துவைத்தங்கங்கே
பானேபழக்கமாய்ப்பார்த்துத்தெளிந்திடே. (சா௭)

தெளியாதகாலத்திற்றேகத்தைத்தாக்காது
தெளியாதகாலத்திற்சித்தெட்டுமெய்யாது
தெளியாதகாலத்திற்சேராதுபூரணந்
தெளியாதமாண்பர்க்குத்திரட்டெல்லாம்பொய்யாமே (சா௮)

பொய்யாதுவாசிப்புகழாஞ்சிவயோகங்
கையாறமேயந்துஞ்சனியாமிதில்ஞான
மைடார்ந்தகண்ணியுமையீசன்பாதிப்பால்
எய்யாதுவெட்டியுமெடுக்குஞ்சவனமே (சா௯)

கவனமெடுக்குங்களிம்பற்முன்தேகம்
புவனத்துச்சித்தர்கள்பூசித்துப்பாழிப்பார்
தவனமுமில்லைசாகாரொருநாளுஞ்
சிவனிவன்றானுஞ்சேர்வார்சிவயோகம் (சா௰)

வாசிவாவென்றவாசியிலூடாடி
வாசியைப்பங்கங்கேவைத்துநீசாதித்தால்
வாசியுமீசனுமருவியேயொன்றாகும்
வாசியைப்போல்சித்திமற்றொன்றுமில்லையே (சா௰௧)

இல்லையேசித்தியிதைப்போலெளிதாக
பல்லுயிர்நாளெல்லாம்பார்த்தாலுங்கிட்டாது
சொல்லுயர்வாசிசுருதிமுடிந்திட
வல்லுயிர்வாதிகாள்வாசியைப்பார்த்திடே (சா௰௨)

பார்த்திடச்சோம்பினால்பலியாதுபேய்வாதம்
பார்த்திடச்சோம்பினால்பரமுங்கிடையாது
பார்த்திடச்சோம்பினால்படுவார்பிறப்புள்ளே
பார்த்திடவல்லோர்க்குப்பகலிரவொண்ணுமே (சா௰௩)

ஒன்னும்வகாரமுருகுமனோன்மணி
பண்ணுஞ்சிகாரம்பகுந்தசதாசிவம்
தன்னைகரண்டொன்றூட்த்தாங்கிடப்பூரணம்
கண்ணுறக்கண்டுகளித்தேநான்பார்த்திடே (சா௰௪)

பார்த்திடென்றேசொல்லிப்பார்க்காதமாண்பர்க்கு
ஏத்தியவாதத்தமெல்லாம்வெறும்பொய்யாம்
வார்த்தியமாத்திரைவயத்தம்பவித்தையுங்
காத்திரமிடப்பூனைகைப்பலனெக்குமே (சா௰௫)

(கல்லுப்புக்கட்டு)

ஒக்குமேவாதமூரம்பார்த்துசித்திக்கும்
தக்குமோதேகஞ்சதாகோடிகாலமு
முக்குமோமேனியுறுவாம்பிறப்பது
தொக்குமாவாதஞ்சொல்லாதிக்கல்லுப்பே (சாயகூ)

கல்லுப்போவென்றுகசடரோயெண்ணுதே
நல்லுற்றவாரிதிநாயகிநாதங்காண்
வெல்லுற்றநீரி லுருப்பட்டுபோனாபோல்
வல்லுற்றவுப்பால்வளர்ந்ததுவாதமே (சாயஎ)

வளர்ந்திடுமுப்பைவளமாகக்கட்டிட
உளந்துதிரிந்தாலுமொருவாகக்கட்டாது
வழிந்திலதக்கட்டவறிந்தோர்க்குயெல்லாஞ்சாந்
துலைத்திடாமாத்திரைசொர்னக்குருவாமே (சாயஅ)

கல்லுப்பு

குருவாகவேயுப்பின்கூறுநான்சொல்லுறேன்
விரிவாகக்கேளுங்கள்வேதாந்தமூர்த்திகாள்
பரிவாம்படிக்குப்பகிர்ந்திடுங்கண்டருந்
தருவாஞ்சமபாகந்தாக்கலாச்சூடனே (சாயகூ)

சூடனாய்முன்சொல்முதல்ரண்டையும்
நீடவேவெண்கருநேராயரைத்திட்டு
ஓட்டவேமேலசாயுறவாகவில்லைசெய்
கூடரவியிற்குமட்டுதினம்பத்தே (சஉய)

பத்தாந்தினத்திற்பரிந்துகுருவாகு
மத்தானகல்லுப்பயிடித்திடுபாக்குபோல்
குத்தாக்குருபூசுகுமட்டியேவாட்டிடு
எத்தானயிந்துப்பிதின்மேலேலேபியே (சஉக)

லேபித்துவாட்டநிறையெல்லாம்வெண்கரு
தாபிச்சவடுதனியாகநாற்சேனா
எபித்தகல்லுப்பிற்போடுமுற்சேனா
யாபித்தசுண்ணம்பதாண்டுசேனாயே (சஉஉ)

சேனாயிடுநீதிரண்டபிரண்டையை
பூனாயரசபொலிவராமாறகம்

நேரொத்தசாம்பல்நிணாயொன்றுக்கோர்சேணா
தாணையேயாருந்தனிவாரமுரியே (௪௨௩)

அமுரியினாலேயணாத்திடுநன்றாகத்
திமிரியபாதியைச்சேர்த்தபூவோட்டிலே
கமரியவுப்பைக்கலக்கப்பதித்திடு
வமரியபாதிவளமாகமேர்பூசே (௪௨௪)

பூசமருவோடுபோட்டுநீசீலைசெய்
மாசிலாயீசனைவாழ்த்திப்புடம்போடு
ஆசிலாவுப்பையடவாயுருக்கிப்பார்
தேசித்தெறித்தால்திரும்பப்புடம்போடே (௪௨௫)

போட்டேயெடுக்கப்புகழாங்குருவுப்பு
ஆட்டேசரக்கெல்லாமப்பனேகொண்டிடும்
நீட்டேநற்சினத்தில்நிணாயாகலேபித்து
வெட்டேரவியிலுருவாகக்கட்டுமே (௪௨௬)

(சீனக்கட்டு)

கட்டியசீனமுங்கல்லுப்புச்சேர்சமன்
ஒட்டியமுரியுறவாகும்வெண்கரு
கட்டியிணங்கநலமாகலேபித்து
மட்டியவாட்டால்வளமாகவாட்டிடே (௪௨௭)

வாட்டுமுதிர்ந்தால்மருவித்தெறித்திடும்
கோட்டுதற்கூடன்குருப்பூசுவுள்கரு
காட்டியகட்டுக்கனாக்கெலாமுள்நஞ்சு
ஆட்டியப்பூசியமளியாக்கட்டிடே (௪௨௮)

(சாரக்கட்டு)

அமளியிணங்கவடவானகல்லுப்பு
தமளியசீனஞ்சமனாகவெண்கரு
கமளியணாத்துக்கலந்தவிடைச்சாரம்
உமளித்துப்பூசியுறவாகவாட்டிடே (௪௨௯)

வாட்டியவுள்கருவளமாகநீபூசி
ஆட்டியகட்டெல்லாமப்பாமறவாதே
நீட்டியகாரம்நிமிரவேவாட்டிடு
கூட்டியசுண்ணாம்புகொட்டிப்பெரித்திடே (௪௩௰)

எரித்திடச்சாரமிறுகுமெழும்புபோல்
மரித்துப்புகைந்தால்மறுபடிநீயெரித்
தரித்திரம்போகுஞ்சகலமுங்கட்டுண்ணும்
வரித்தியவாதமகப்பட்டிதுபாரே (௬௯௧)

பாரேயிச்சாரம்பரிவானவெண்கரு
நேரேயனாத்தலைதலேபித்துவீரன்மேல்
காரோதனல்மேலேகைம்முறையாய்வாட்டுத்
தாரோயிணங்கன்தசைசூதங்கல்லுப்பே (௬௯௨)

## வீரக்கட்டில்வேதை

உப்பொடுமூன்றுமுறவாகமேற்பூசு
செப்பிட்டுசோடுஞ்சீலையொன்றிட்டுமே
தப்பொடுதீயில்தவறுதேவாட்டிட
ஒப்பொடுவீரமுருகியசையுமே (௬௯௩)

## சாரகுரு

அசைகின்றவீரமணுகில்நவலோக
மிசைகின்றமாற்றுமெட்டனாதப்பாது
பசைகின்றசாரத்தின்மேலேபரவிடத்
தசைகின்றசாரந்தவளகுருவாமே (௬௯௪)

குருவானசாரக்குறிப்பாயிடைரண்டு
மருவானவீரமாட்டிதிலோரிடை
தருவானசூதமுந்தானுமிடைரண்டு
பெருவமுர்தத்தொடுபோரங்குருவண்டே (௬௯௫)

## துரிசுகுரு

போரகக்கட்டினசாரமுமோரிடை
வாரானருக்குடம்வளமானவெண்மலந்
தாரானவேழுந்தனியனாவெண்கரு (௬௯௬)
ஓராந்துரிசியுமோரேழ்வராகனே

ஓரேழ்வராகனொருகட்டியாய்வாங்கி
ஆரேழிந்தப்பூசியடர்ந்தாவியில்லவை
தாரேசலாசத்துதனிச்சுன்னமேற்பூசு
வாரோநற்சீலைவளமாகச்செய்திடே (௬௯௭)

செய்திட்டுலர்த்தித்திறமாசமூன்றுநாள்
வைபதிட்டவங்கம்பருகியுருகையில்

கைதிட்டமாகநீகலங்காமல்தோய்த்துவா
மைதிட்டமாகவடர்வாய்ப்பதினென்றே (௪௩௮)

பதினேர்தரந்தானும்பாங்காகத்தேய்ச்சிடில்
மதியோவிதுவென்னவளபாய்க்குருவாகு
மதியாஞ்சரக்குவருபதுங்கட்டுண்ணும்
நிதியாப்பிறந்திடும்நிமிஷத்தில்கற்பமே (௪௩௯)

தங்கக்குரு

கற்பகஞ்சொன்னேன்கனத்தகுருவாக
அற்பங்காண்சொன்னேனறையுறேனிந்நூலில்
நிற்பகத்தங்கம்நிலையுற்றருகையில்
தற்பநிமிளைச்சமபாகந்தாக்கிடே (௪௪௰)

தாக்கிலடரண்டுஞ்சமனாகவீரத்தைத்
தூக்கித்துலைகையைச்சுழண்டுமணியாக
யாக்குந்துரிசிகுருயதில்பாதிகல்வத்தில்
நோக்குநற்சூதம்நிறைமணிப்பாதியே (௪௪௧)

பாதியாஞ்சூதத்திற்பாதியிடுவீரம்
நேதியாம்வெண்கருநீட்டியனாக்கையில்
சோதிக்குருவண்டுகொட்டதிலம்பது
ஏதியாம்பூரமுமெட்டொன்றுகூட்டிடே (௪௪௨)

கூட்டியனாத்துக்குமூறமணிமேலே
ஆட்டியுலர்த்துபடவாகமூன்றுநாள்
நீட்டுங்கிளிஞ்சில்நிலவாஞ்சலாசத்து
ஆட்டியேவண்டோடெயடவாசப்பூசியே (௪௪௩)

பூசித்திடுயீசன்புகழாம்பராசத்தி
ஆசிக்கணேசனடவாந்திசைதேவர்
மாசித்தநிருவாணிமகத்தாங்குருவாரு
தேசித்துப்பூசிக்கநீயாங்குருவாமே (௪௪௪)

குருவானதங்கத்தின்கூறுசேள்தொந்தனை
பருவாநீதங்கத்தகட்டிலேபத்தொன்று
விரிவாந்துரிசிக்குருவவ்விடைபூசி
திருவானவண்டப்பொடிக்கீழ்மேல்தாக்கிடே (௪௪௫)

தாக்குகளங்கத்தயக்கிப்புடத்தைநீ
போக்குசதமெட்டும்போயேறந்தொந்தனை

ஆக்குமேரூகத்திலேரண்டுகொண்டிட (௪௪௬
போக்குந்துரிசிக்குருபத்துக்கொன்றிடே

இட்டேவாய்நீராலிழையவரைத்திடு
கட்டேயுருகுருங்கபணித்தமத்தங்காய்
மட்டேபுடந்தான்வளமாய்ப்பதினென்று
நட்டேகுளிகைநலமாயிருக்குமே (௪௪௭)

இறுகுங்குளிகைக்குரொட்டிப்புக்ரூதம்வார்
மறிகியரைத்திடுவாய்நீராலுண்டைசெய்
குருகுந்துரிசிகுருபூசிசற்றேநீ
அறுகுமத்தங்காயிலதுக்குள் புடம்போடே (௪௪௮)

போட்டுவாயிப்படிபுடந்தோறுமட்டாக
ஆட்டுந்தொழிலிலாருக்குநான்சொன்னேன்
நீட்டுநல்வாசிகள்நின்றிடும்வதாந்தக்
கூட்டுஞ்சித்தர்க்குள்குலாவியொளித்தேனே (௪௪௯)

ஒளித்தேகுருமுன்னேயொருகுருயிட்டல்ல
வளித்தேனேயாயிரமதுக்குஞ்சுறுக்கிது
தெளித்தேனேஞானத்தைத்தெளிவுள்ளோர்க்கேசித்தி
பழித்தகசடர்கள்பார்த்தால்பலியாதே (௪௫௰)

### தங்ககுருவினால்காயசித்தி

பலியாதுபாவிபாதூஷிஷடர்க்கு
பலியாதுஞானத்தைப்பார்க்காச்சண்டாளர்க்குப்
பலிடாதுவாசிப்பருவமறியாட்டால்
பலியாதுயீசன்பதம்போற்றுமாண்பர்க்கே (௪௫௧)

போற்றியசொர்னக்குருதான்தினங்குன்றி
ஆற்றியேயுண்ணுவமர்ந்தொருமண்டல
மாற்றியேமேனிவளமாகச்சட்டைபோந்
தோற்றியபானுகூடாகுஞ்சித்தியே (௪௫௨)

சித்தியாஞ்சொர்னக்குருவால்சாக்கெல்லா
மத்திப்பிரட்டவகையாமல்கட்டுண்ணும்
வுத்தித்தலோகவகைகண்டுநூறுடன்
சித்தித்தவாயிரத்தொன்றிடிலேமமே (௪௫௩)

ஏமத்தைக்கண்டியிறமாந்துபோகாதே
வாமத்திலதத்தொட்டுவளமாகப்பூசைசெய்

காமத்தைவிட்டுக்கண்டுகொள்வாசியைச்
சாமத்தசாரணைச்சாற்றாய்குளிகைக்கே (௪௫௪)

குளிகையைவாயிட்டுக்காடுமலைதோறும்
அழிவில்லாச்சித்தர்களங்கங்குபோய்ச்சென்று
தெளிவுறத்திரட்டெல்லாந்தெளிந்தபின்னீகேட்டு
கழிவுறுகால்தன்னைக்கட்டாய்சமாதியே (௪௫௫)

சமாதியுறாத்தாக்கால்தர்க்கரிஷியென்பார்
சமாதிகுளிகையிலாடிறற்சித்தனென்பார்
சமாதித்தவாசியைக்கண்டோர்சிவயோகி
புமாதித்தமூன்றும்பொருளொத்தஞானமே (௪௫௬)

கெந்திசத்து

ஞானமயமானநல்லோர்கள்கேளுங்கள்
மானமாங்கெந்தியைவாங்கிநீலைகப்புறை
கானமாங்கட்டியகல்லுப்புவோர்பலம்
ஓனமாங்காரக்குருவோர்பலம்போடே (௪௫௭)

கெந்தகச்சத்துகள்

போடுவொருபலம்புசழ்ட்டுச்சாரத்தை
ஓடுநற்கெந்தியுமொன்பதுவெப்போடு
தேடுந்துகையதிர்க்கப்பணிரண்டு
நீடுங்கலுவத்தில்நீபழச்சாறிடே (௪௫௮)

பழச்சாற்றில்பூவெல்லாம்பாங்காய்ப்பிசைந்திடு
இழைத்தேபிழிந்துயிழுத்தலாகெந்தியை
தழைத்தேதினமொன்றுசப்பாதனைத்துவா
பிழைத்தேபூவாசமன்றன்பூச்சாறுவார்த்திடே (௪௫௯)

வார்த்திட்டனாமூன்றுநாளும்வளமாகக்
கோர்த்திட்டுநிற்குங்குமரிப்பூமூன்றுநாள்
சேர்த்திட்டுவொன்பதுதினமுங்கடந்தபின்
வார்த்திட்டவில்லைபோல்வாகாயுலர்த்திடே (௪௬௰)

சத்துசோதிக்கமித்திரம்

உலர்த்தியேஞானத்திலூதுசிவயோகி
மலர்த்தியசத்துவருங்காணுமோர்பலங்
குலர்த்திவிதைவாங்குதகொட்டுமெறுபுகை
அலர்த்தியுருக்கிடவடவாகசோதியே (௪௬௧)

சோதிக்கமித்திரஞ்சூட்டினல்காரத்தை
ஆதிவளைபலதில்போடுமூன்றிடை
காதியவீரமுங்காத்திடவேவோரெடை
பேதித்தனாத்துப்பிலக்கப்பொடிசெய்யே (௪௬௨)

பொடியையுருக்கையிற்போட்டுவாசோதனை
படிவாகவித்தைவாங்கிரவிகாணு
மடியுமளவுமடவாகச்சோதித்தால்
கெடியரவிகாணுங்கேளீர்நற்சித்தரே (௪௬௩)

(தங்கச்செம்பு)

கேளீரிடுச்செம்புகெடினாறிடுதங்கம்
வாணீருருக்கமகத்தாம்பறிச்செம்பு
வாணீரிரதமடவாய்க்கோடிக்கவா
ஆணிவேர்ப்பண்ணிவைப்பாய்குளிகையே (௪௬௪)

குளிகையெடுத்துக்குமட்டிவலக்கரந்
தெளிவாகவேகட்டிச்சிந்தித்துவாசியை
நெளிவாகப்போக்காமல்நிறுத்தியேயுள்ளுக்குள்
ஒளிவாகவாயிட்டுவோடுங்கவணமே (௪௬௫)

ஓடலாமெங்குமூலர்வலாமண்டத்தில்
தேடலாம்பூரணந்தெளிவாநாமதுவாச்ச
தேடலாஞ்சித்தர்திரட்டெல்லாம்பாவித்து
கூடலாம்ஞானக்குறிப்பங்கில்நாமாச்சே (௪௬௬)

(பறிச்செம்பினல்காயசித்தி)

ஆச்சேயிச்செம்புவாத்தாளுட நாதம்
போச்சேவெகுதூரம்பூட்டதில்தொந்தனை
மாச்சேமநிமேமேலவைப்பாயிரத்தொன்றும்
காச்சேகனகங்கணமானமாற்றிதே (௪௬௭)

மாற்றும்பரிச்செம்பைமாட்டிச்குருபண்ணு
ஆத்தாளுந்தந்தையுமறைந்தரகசியம்
ஏத்தாங்குருவீசமேழுநாள்தின்றிடே
ஊத்தாநல்தேகமொளிபார்க்கிற்கூசுமே (௪௬௮)

கூசுமேகண்களுங்கொடியரவியொப்பாய்
மாசுமேதேகமுமதகற்சிலையாகும்
பேசுமேபூரணமும்மைப்பிரியாது
வாசிமேல்வாசிவாசியவனுமே (௪௬௯)

அவனாகவேவாசியவ்வாசிதானாக
சிவனாகவேநின்றசித்தர்மகாரிஷி
மவுனசமாதியில்வாழ்வார்வெகுங்காடி
புவனத்தில்வேதாந்திபுண்ணியர்க்கெய்துமே (௬௭௰)

எட்டிடுங்கல்இப்பாலெட்டெட்டுமாடலாங்
கைகிடுமேருகவனமூமாடலாம்
வைதிடுஞானத்தகண்டத்திலாடலாம்
பைதிடுவாசிபலிக்கின்றகாலமே (௬௭௧)

காலமேதென்றுகலங்காதவல்லோனா
கோலமேயாறுகுறிப்பாணசக்கரந்
தாலமேயங்கங்கேசொன்னேனிதுதெய்வம்
பாலையேயட்சரம்பாங்காயதிந்திடே (௬௭௨)

அண்டவுற்பத்தி

அறிந்துநீயங்கங்கேயடவாய்ப்பழகிவா
வறிந்துநீபுத்தியிலவைத்திடுவாசியை
எறிந்துநீயெறியெடுத்தசெல்லாஞ்சித்தி
பறிந்துநீயண்டத்திற்பாயுமுறைகேளே (௬௭௩)

கேளேநீயண்டங்கெடியானவுற்பனந்
தேளேபிருதிவிதனில்மேல்சலமாச்சு
கேளேசேள்வன்னிக்கொடுங்காலத்தின்மேலே
வாளேவெளிவானம்வளர்ந்ததுவண்டமே (௬௭௪)

அண்டத்தின்மேலேயடர்ந்ததுபூமிதான்
பண்டுத்தபூமிமேல்படர்ந்ததுவப்புனல்
தண்டப்புவிமேல்சார்ந்ததுவன்னிதான்
கண்டத்தழல்மேல்கலந்ததுவாயுவே (௬௭௫)

பிண்டவுற்பத்தி.

வாயுவுமேலேமருவிற்றுவாகாசம்
காயுமோராண்டத்தில்கண்டகுறிப்பிது
பாயுமோராயிரத்தெட்டுக்குமிப்படி
பாயுமோர்பிண்டம்பரிந்துநீபார்த்திடே (௬௭௬)

பார்த்திடுமாங்கிஷிம்பரித்தபிருதிவி
வார்த்திடுரத்தம்வழலையினீராச்சு
தோற்றிடுவாய்வுசுழண்டேதிப்புக்கிற்று
சார்ந்தேறுதீயுங்கலந்தேவிரும்பிற்றே (௬௭௭)

கலந்தேசெவிக்குள்ளேகண்டுதுவாதச
மலந்தேயிடையின்ரண்டாச்சுவாரிதி
குலந்தேசுழிமுனைகூடிற்றமேருவாய்த்
தலந்தேபிண்டத்திற்சார்ந்தமுறையாச்சே (௪௭௮)

ஆச்சேயிப்பிண்டத்துக்காதாரம்பூமிதான்
வாச்சேபூமேலேவளர்ந்ததுவப்புனல்
காச்சேடனலுக்குள்கடுந்தீகாண்பானுவுந்
தேச்சேவீலாஞ்சுசுழல்வாய்வுமேல்விண்ணே (௪௭௯)

விண்ணுற்றவண்டம்விளைந்தபின்பிண்டத்திற்
கண்ணுற்றுருப்போலவே கண்டிடுசிற்றண்டம்
பண்ணுற்றபேரண்டம்பார்த்ததுமிப்படி
தண்ணுற்றமேருதலைவீற்றுருவனே (௪௮௰)

துருவன்றலைக்குள்சுழண்டவினங்களும்
பருவராவிபதிமற்றுள்ளகோள்ராசித்
தருவியிருபதுதானேழாம்ரோகணி
மருவிப்பரவும்பலபலமீன்களே (௪௮௧)

பலபலபேர்சொல்லிப்பகர்வார்பெரியோர்கள்
வலவியசெக்குப்போலாடிற்றுவவ்வாலை
நிலாவித்துருவனும்நின்றதமரோடும்
கல்விக்கவனங்கலந்தோடுமண்டமே (௪௮௨)

அண்டத்துப்பக்கமசையாதுவல்லோடு
வெண்டுற்றுப்பாய்ந்தாலும்வாகாயழியாது
உண்டுற்றுமேலோடுருகுமறிவாக
வெண்டுற்றசித்தரிதங்கண்டுபாருமே (௪௮௩)

கண்டுகண்டண்டங்கடந்தோடிநீபாரு
பண்டுவுணர்த்தபழக்கத்துடனேநீ
அண்டிடுமாத்திரையாருக்குங்காட்டாதே
ஒண்டிடுறவ்வென்றுமாத்திரையோடிடே (௪௮௪)

(மூலாதாரம்)

ஓடிடும்போதுவொருமித்துவாசியை
நாடிடுதிக்கைநலமாயிதத்தெண்ணி
கூடிடுமோர்க்கத்திற்கோடிகாண்சித்தர்கள்
ஆடிடுமார்க்கமறிந்துகொள்மூலமே (௪௮௫)

மூலமிருந்தமு றைசேளு மண்டம்போற்
கோலமதின்மேலேகுலாவியநாலிதழ்
சீலநடுவேசிறந்திடுமுக்கோணம்
மாலயன்மூன்றிலமர்ந்தசிகாரமே (௪௮௬)

சிகாரமேமுத்திற்சிறந்தமுனையொன்றில்
ஓராவடிவாகிபோமென்றுகுண்டலி
நகாரமுதலாறுநற்சக்கரணமயம்
மகாரக்குருதாளளாவியிரக்கிற்றே (௪௮௭)

இரக்கிப்புருவமிடைக்குள்ளேநின்றது
தரங்கித்தமாவாசல்தாளாகிநின்றது
மரங்கித்தமூலமருவுமிதழ்நாலில்
அரங்கத்தவர்முதலறிவானசார்விடே (௪௮௮)

இட்டதுநாலுமிருந்தசிகாரமும்
ஒட்டியேபாய்ந்துவருமுனைவல்லபை
கட்டிமுனையொன்றில்கணபதியேநிற்பார்
மட்டானகுண்டலிவாய்க்குள்ளேநந்தியே (௪௮௯)

(சுவாதிட்டானம்)

நந்திலையப்பார்த்திடுரோட்டுசிகாரத்தை
அந்திவசாரமடவாகவேபூரி
பந்தியவேதம்பலபலநூலெல்லாஞ்
சிந்திக்கத்தோன்றிடுஞ்சேருலவவாசிபே (௪௯௰)

சேருந்தினந்தான்றெளிவாகக்கண்டிடு
பாருவிடாமலேபாழிப்பானென்னந்தி
கூறுதுதாண்டக்குலாவியசக்கரம்
சேறிதழாறுஞ்சுவாதிட்டமென்பரே (௪௯௧)

என்பாரிதழாறிலிருக்கின்றவட்சரம்
வன்பாம்வகாரம்வகுத்தலவ்வோடாறுந்
தம்பால்நடுவேசதுராம்நகாரங்காண்
இன்பாகவாணியிருக்கும்பிரமனே (௪௯௨)

மணிபூரகம்

பிரமனைப்பார்த்துப்போயிற்றெளிந்துநீ
அரமனைக்குள்ளேயந்தித்துவாசிலை

உரமனைத்தாக்குவோடிலுமோடாது
திரமனையோடுஞ்சிவயோகியாருமே (௪௯௩)

ஆகின்றசக்கரமதின்மேல்மணிபூரம்
பாகின்றியேநிற்கும்பாய்ந்துவிதழ்பத்தாய்
வாகின்றபத்தினில்வரைந்தவெழுத்துக்கள்
போகின்றடாமுதல்புகழாம்பகாரமே (௪௯௪)

புகழாறுமைமையும்பொலிந்தபிறைபோலே
மகழாமசாரமருவியிருந்தது
திகழானமாலும்நிறையானலட்சுமி
அகலாதிருப்பார்களப்பனேபார்த்திடே (௪௯௫)

(அநாகதம்)

பார்த்திடுவமர்போகம்பாலிக்குமாபோகங்
கார்த்திடுநீதான்கருமேகவண்ணனை
கோத்திடுவாசிக்குமட்டியதிற்பாரு
ஆத்திடுமேப்பாலநாகதங்கண்டிடே (௪௯௬)

(சக்கரம்)

கண்டிடுசக்கரங்காணிதழ்பனிரண்டு
தண்டியெழுத்தின்சாற்றமுறைகேளு
அண்டிடுசக்கரமுதலாகவவ்வரா
ஒண்டிப்பனிரண்டுமுறுநியாய்நின்றதே (௪௯௭)

(முக்கோணம்)

நின்றநடுமைபம்நேராசமுக்கோண
மண்டிசிகாரமதுக்குள்ளேநின்றது
தண்டியருத்திரன்தாயானபார்வதி
அண்டித்தொழுதுநீயாட்டிடாய்வாசியே (௪௯௮)

(விசுத்தி)

வாசியையாட்டமகத்தாமனதுடன்
ஒசியேபானுவொருகோடிபோலொளி
தேசியின்தேசுசிறக்கவதிற்பாரு
ஆசியைத்தாண்டியதன்மேல்விசுத்தியே (௪௯௯)

விசுத்தியிதழ்தான்விளங்கிப்பதினாறு
வசுத்தியவட்சர பாமுதலீரொட்டும்

பசுத்தியிதழ்க்குள்பாவியேநின்றது
ஒசித்துநடுமையமோராறுகோணமே (௫௱)

கோணநடுவேகுவிந்தவகாரங்காண்
ஆனமயேசுரமாத்தாள்மயேல்பரி
பேணியிருந்ததுபோனகண்டங்காண்
பூணப்பாத்தின்புகழாமடியிதே (௫௱௧)

அடியிலேவாசியசையாமல்வைத்திட
முடியிலேகொண்டுபோய்முட்டுமதுபாரு
கொடியிலேவோடிடுங்கூப்பிடும்பூரண
மடியிற்கனிபோலேவாய்க்குங்காணுணமே (௫௱௨)

வாய்க்குந்தலமேல்வளமானவாக்கினை
காய்க்குமிதழ்ரண்டுகாணெழுதாஷ்ஷிகாண்
பாய்க்குநடுவேபகுந்தவைகாரங்காண்
வாய்குஞ்சதாசிவம்வட்டமணியெண்ணே (௫௱௩)

மணியாமனேன்மணிமாதாவைநேசித்து
அணியாயதற்குள்ளடவானவாசியைப்
பணியாகவேபூட்டிப்பார்த்திடுயோகிக்குத்
தணியாம்ரிஷிராசன்தானுகுந்தப்பாதே (௫௱௪)

வன்னம்

தானுகநின்றசடசசகர்வர்ணங்
கோனுகுமூலங்குமட்டியபொன்னிறந்
தானுளுமதுமேலேநாலங்குலந்தாண்டல்
வானுனகஞ்சந்தன்வர்னம்வெளுட்பெண்ணே (௫௱௫)

அங்குலம்

வெளுப்பானகஞ்சன்றன்மேலாறுவங்குலம்
விருப்பானமால்தான்விளைந்தகருநிறந்
தளுப்பாதிமேலேதாமெட்டுவங்குலம்
மளுப்பானருத்திரனகண்டசிவப்பெண்ணே (௫௱௬)

(குருபதம்)

சிவந்தமதிமேலேசேர்பத்துவங்குலம்
மவன்தான்மயேஸ்பரநாதனுமைபச்சை

அவந்தானங்கேயதின்மேற்பனிரண்டில்
தவந்தான் சதாசிவன்தானஞ்சுவர்ணமே (௫௱௭)

வன்னங்கள்சொன்னேன்வளர்ந்தகுலஞ்சொன்னேன்
தன்னங்கெழுத்தோடுசார்ந்தவிதஞ்சொன்னேன்
புன்னங்கள்வாழ்ந்தபதிதேவதைசொன்னேன்
உன்னங்கள்வாசியையூட்டிடுதப்பாதே (௫௱௮)

தப்பாதேதாண்டத்துதானுங்குருபதம்
ஒப்பாயிதழ்காணவோராயிரத்தெட்டு
கொப்பாநடுவேகுறிப்பதுவைங்கோணம்
அப்பாஅகாரஉகாரமகாரமே (௫௱௯)

மகாரத்துடனேமருவியநாதங்கள்
பகாரத்தைவித்துபரிவாயிதுவஞ்சு
ஒகாரத்துச்சோதியொளிபோல்வெளியாகி
நிகாரத்ததின்மலம்நின்றவடிவாமே (௫௱௰)

வடிவாமிடத்திலேவைத்திடுவாசியை
நெடிவாய்ப்போகாமல்நிறுத்தியதிற்பாரு
குடிவாம்பிலப்புறங்கொண்டிடும்பூரணம்
வடிவானவேதாந்தவாதிப்பொருளிதே (௫௱௰௧)

பொருளாமதில்நின்றுபோக்கோடேமேல்நோக்கச்
சுருளாந்துவாதசந்தோற்றமதினேறு
வருளாமுன்னேமூக்கடைந்தால்மகாஞான
மருளாய்ப்பிடரியில்வைத்திடுயோகமே (௫௱௰௨)

யோகமாங்குண்டலியோகத்தைநோக்கிட
பாகமாய்க்கீழேபதினொன்றுங்கண்டிடும்
நாகமாய்நின்றநடுமையம்நோக்கினால்
ஆகாமல்ருத்திரனழல்கோடியானுமே (௫௱௰௩)

பானுவுக்குள்ளேயுறுதிருமறையஞ்சும்
நானும்படியாகநாசியில்பாய்ந்திடில்
தேனுவுமீதனில்தெளியாதுஞானங்கள்
வானுவாம்வாசியைவைத்துநீபார்த்திடே (௫௱௰௪)

பார்த்திட்டேன்யானும்பழகியிம்மார்க்கத்தைக்
கோர்த்திட்டவண்டத்தில்கூசாமலோடினேன்

நாத்திட்டவண்டமடங்காப்புவனமும்
பேர்த்திட்டவத்தோடுபூரணங்கண்டேனே (௫௱௰௫)

கண்டேனே சாட்சியைக்காரணர்காட்ட
விண்டேனே சித்தர்க்குவெளியாய்த்தொழிலெல்லாம்
பண்டேகுளிகைப்பருவமெல்லாஞ்சொன்னேன்
கொண்டேமூன்றாயிரங்கூறினேனன்னாறே (௫௱௰௬)

அன்னாறுசொன்னேனடவானசித்தர்க்கு
அன்னாறுசொன்னேனகண்டமெய்ஞ்ஞானிக்கு
அன்னாறுசொன்னேனடியேன்சிவன்சொல்ல
அன்னாறும்பார்த்தோர்க்குஆதிமகாசித்தே (௫௱௰௭)

சித்தாகவேண்டினோர்சேர்ந்துண்ணுங்கற்பத்தை
வைத்தானவாசியைவைத்துவைத்தேபாரு
கொத்தானவாசையுங்கோபமும்விட்டிடு
உத்தாருனக்குவொருகோடிசித்தரே (௫௱௰௮)

சோடிதுறைசொன்னேன்குலாவியவாதத்தால்
ஆடியேபார்த்துவழியாதேபொன்னாலே
நாடியேநாவின்ருசியாலேவண்டுபோல்
ஊடிக்கமலத்தொடுங்காதேசித்தரே (௫௱௰௯)

ஒடுங்கிச்சகமெல்லாமொட்டியிறந்தார்கள்
அடுங்கியசாங்கத்தகண்டநாமெனன்பார்கள்
எடுங்கியவசம்பெறிந்தவலைசிக்கி
நடுங்கித்தளர்ந்துநவில்வார்களெய்யாதே (௫௱௨௰)

எய்யாதுசாங்கத்தெளிதாகமெய்ஞ்ஞானம்
மையாகமூலகத்தில்வாழ்ந்தேயிருக்கையில்
பொய்யாமோகண்டதுபுத்திதான்கெட்டுதோ
கையாறவாசிதான்கண்டபின்சாங்கமே (௫௱௨௰௧)

சாங்கமாயான்சொன்னசடாதாரமார்க்கமும்
ஓங்காக்குருபதமுயரோடுவெஞ்சிலும்
பாங்காகப்புத்தியாற்பகுந்தேமனமூன்றி
வாங்காமற்பார்த்துமகத்தானசித்தமே (௫௱௨௰௨)

சித்தம்சிவன்காண்சேர்வனஞ்சத்திகாண்
ஒத்ததர்புத்தியுறுதிமகாயோகம்

கொத்தாசமூன்றுக்குங்குடிலங்காணுங்காரம்
பத்திநல்லங்காரம்பாவத்துக்கேதும்வே (௫௨௩)

(சூதசுத்தி)

எதுவாய்நின்றவெழிலானசூதத்தில்
கோதுவாய்நின்றகுடிலமையமேலூ
கேதுவாய்ப்போகாட்டால்செவணமெடுக்காது
வாதுவாம்வாதத்துக்காகாதுவாகாதே (௫௨௪)

ஆகாதகன்மசமகற்றுமுறைகேளு
வாகானகல்லுப்புமாட்டுசமபாகந்
தாகாக்குமரிப்பூச்சாற்றணைமூன்றுநாள்
பாகாய்க்கழுவிட்பதனமாய்வாங்கிடே (௫௨௫)

(சூதகட்டு)

வாங்கிட்டசூதம்வளமாய்ப்பலம்ரண்டு
தாங்கிட்டசட்டியில்தானேயதைவார்த்து
ஓங்கிட்டவண்டோடுடன்சூடன்கண்டரும்
பாங்கிட்டசாரமும்பாரிருசாரமே (௫௨௬)

காரத்துடனேகடுகியரண்டுப்பு
வாரூற்றவப்பிரோகம்வாங்குநவநீதம்
நேரொத்திடவேநிறையாகவொன்பதும்
தாரொத்தமுரியால்தாக்கியரைத்திடே (௫௨௭)

அரைத்தேகலக்குவமரிப்படிநாலில்
விரைத்தேசூதத்தில்விளங்கச்சுருக்கிடு
தரத்தேயிறக்கிநீதான்வாங்குபிஷ்டியை
துரைத்தேபடிநாலுசூட்டாயமுரியே (௫௨௮)

சூட்டிக்கலக்கிச்சுகமாட்மறவிசை
ஆட்டிச்சுருக்கிடுவப்படிச்சூதத்தில்
நீட்டிப்படிதானில்லையாச்சுருக்கஞ்சி
மாட்டியேபூட்டிவளமாகவாங்கிடே (௫௨௯)

வாங்கியேகல்வத்தில்வைப்பாய்பணிட்பட
ஓங்கிரிதுவாயொழுகுஞ்செயநீர்ப்
போங்கிச்செயநீர்போட்டரைகர்ப்பூரம்
பாங்கியசூதத்திற்பாய்ச்சிச்சுருக்கிடே (௫௩௰)

சுருக்கிடச்சூதந்தான் றுள்ளாதுவாலேயாம்
மருக்கியெடுக்காதுமகத்தாங்கனலுக்கு
ஒருக்குந்தொழிலுக்குமோடுங்குளிகைக்குஞ்
செருக்குமிதைவிட்டால்திரட்டெல்லாம்பொய்யாமே (௫௱௧)

திரட்டுந்தொழிலுக்குஞ்சேர்ந்தகுளிகைக்கு
மருட்டியசூத்தத்தைவளமாகச்சுத்திசெய்
அருட்டியேசுத்திக்கசத்துநீபூட்டினல்
பிரட்டாகும்பாருபேரானசித்தரே (௫௱௨)

பேரான்சுத்தியிற்பிலப்படுமேசூதந்
தாரானதீபனந்தானுஞ்சாரணை
சாராணைபோலேக்கவனங்கொடுபோகும்
ஆரார்கள்பார்த்தாலுமப்பனேதப்பாது (௫௱௩)

தப்பாமலிப்படிசாரக்கானதெட்டெட்டும்
ஒப்பாய்சுறுக்கிடுவூறல்போய்சுத்தியாம்
கொப்பானவேதைகொடுக்கமிகநன்று
இப்பாலிதைவிட்டாலெய்யாதுவாதமே (௫௱௪)

(இரும்புருக்கு)

வாதம்பிறந்ததுமகத்தாமிரும்பிலே
போதவிரும்புண்டால்புகழ்காயசித்தியாம்
தாதாவிரும்புதனிலெண்பதாங்கற்ப
மாதாவிரும்பைவளமாயுருக்கிடே (௫௱௫)

உருக்கமுறைகேளுவுள்ளொளிவேதாந்தி
பருக்கியசாரம்பரிவாம்பொரிகாரஞ்
செருக்கியவீரஞ்சிறந்தொருலிங்கம்
மருக்கியதாளகமன்னுநற்சூதமே (௫௱௬)

சூதத்தோடாறையுந்தூக்சாறுகாசிலை
வேதத்தோடொத்தவெடியுப்புநீர்வார்
வாதத்தைப்பூசித்துப்பாங்காயரைத்திடு
நீதத்தோடாறும்நிலேயாகக்கட்டுமே (௫௱௭)

கட்டுஞ்சரக்கோடுகாசிலைபூநாக
மட்டுறுவாளம்வளருமுட்காவேளை
எட்டும்வெவியாலெழுவாம்பருப்பொடு
வெட்டுருவெப்பம்விளாயின்பருப்போடே (௫௱௮)

பருப்புடனஞ்சும்பகுந்தஞ்சுகாசிடை
அருப்பொடுமூன்றுமாகப்பதினென்றும்
விருப்போடனாநீவெடியுப்புநீர்வார்த்து
கருப்போடாப்பொடிதானும்பலம்ரண்டே (௫௱௩௰௯)

ரொண்டையுங்கூட்டிநிமிரப்பிசைந்திடு
ஒண்டையுருக்கியுறவாகத்தாக்கிலே
தண்டியுருக்கிர்தானேமணியாகும்
மண்டிமணியையடவாய்நுறுக்கிடே (௫௱௪௰)

அடவாய்மூன்போலேயுளவாய்ப்பதினென்றும்
படவாகக்கூட்டியேபாய்ச்சியுருக்கிடு
கடவாகவேழ்திரங்கபளித்துருக்கிடு
தடவானசோதனைதாக்கிநீசோதியே (௫௪௰௧)

சோதிக்கலோகந்தான்சொர்னம்போல்நின்றிடும்
மாதித்திலாயில்லைமற்றஞ்சவடியில்லை
ஆதித்தபாஷாணமறுபதுமுட்கொள்ளும்
பேதிக்குந்தேகம்பிறக்குமிதிற்பொன்னே (௫௪௨)

பொன்னாகவேண்டினால்பூட்டிநல்லிங்கத்தைப்
பொன்னாகவேண்டினால்பூட்டதில்நாகத்தை
பொன்னாகவேண்டினால்பூட்டுநிமிளையை
பொன்னாகவேண்டினால்பூட்டுநீதுத்தமே (௫௱௪௩)

பூட்டுரசத்தைப்புகழானலோகத்தில்
நீட்டுநீதங்கமுநேராமிடையொன்று
ஆட்டிமணக்குள்ளேயந்தயிடைகெந்தி
கூட்டிப்பொடிசெய்துருப்பிக்கெடுத்திடே (௫௱௪௪)

எடுத்தேயெரித்திடுயியல்பாயறுசாமம்
படுத்தேசெந்தூரம்பவளநிறமாகும்
அடுத்தேநீகுண்ணியமர்ந்துண்ணமண்டலங்
கடுத்தேயுன்றேகங்கல்லுஞ்சமனாமே (௫௱௪௫)

கல்லானமூன்றேகங்காத்தால்மலைகுத்து
சில்லாகுந்தாளாகுஞ்சித்துமதுபாரு
வெல்லாவிரும்பினைவேண்டும்போதுண்ணலாம்
வல்லானசித்தரோவச்சிரதேகமே (௫௪௬)

தேகமிருந்தல்லோசித்தெல்லாமாடலாம்
தேகமிருந்தாக்காற்சேரலாம்பூரணம்
தேகமிருந்தாக்கால்திரட்டெல்லாம்பார்க்சலாந்
தேகமிருந்தாக்கால்சேரவிழலாமே (௫௪௭)

சேரவேகற்பஞ்செலுத்தியகாலத்தில்
ஆரமதிமேலேயாத்தாளை நீபாரு
தாரவேமூலத்தணலைப்பிறக்கும்பார்
கோரவேகற்பங்குமட்டிச்செரிக்குமே (௫௪௮)

செரிக்கின்றகாலத்தில்சேருஞ்சமாதியைத்
திரிக்கின்றமாயையைச்சாராதேவிட்டிடு
மரிக்கின்றவார்த்தைதான்வாராதொருநாளுந்
துரிக்கின்றவேதத்துரியங்கைச்சிக்குமே (௫௪௯)

சிக்கவேயாத்தாளைச்சீராகவாமத்தில்
ஒக்கவேயண்டமுடன்மாங்கிடமது
பக்கம்புலகாரம்பரபஞ்சபாத்திரம்
திக்கெட்டிற்பூசையுஞ்செய்திடிற்சித்தரோ (௫௫௰)

சித்தாகவீசனுஞ்சேர்திருவாணிக்கு
கொத்தாய்வடியுக்குடத்தில்மதுவும்வை
பத்தானமாங்கிஷம்பரிமளம்பூச்சாத்து
முத்தானதீபத்தால்முன்னிட்டுப்பூசியே (௫௫௧)

பூசித்துவன்பாய்ப்புகழ்ந்தேற்றியர்ச்சித்து
மாசித்துதாவென்றுமாதாவைநீகேளு
காசித்தியாகுங்கவனங்கொடுபோகும்
வாசித்துவாதமலர்ந்துவணங்குமே (௫௫௨)

வணங்காமலர்த்தாளைவாதத்தைப்பார்ப்போர்கள்
பிணங்காவவர்கள்பேசாதேயின்னூலை
இணங்காதவளோடேயெய்யாதுசித்தெல்லாந்
தணங்காள்திருவாணிசண்ணுவாள்தப்பாதே (௫௫௩)

தப்பாமல்நாதாக்கள்சகலரிஷிகளு
மொப்பாமறையோருயர்ந்தமெய்ஞ்ஞானிகள்
எப்பானவேதாந்தமெவ்வகைசித்தரு
மப்பாயிவர்கள்தானர்ச்சிக்கும்பூசையே (௫௫௪)

பூசையறியாட்டால்பூட்டாதேசூதத்தை
பூசையறியாட்டால்போடாதேவேதையை
பூசையறியாட்டால்புருடமையம்பாராதே
பூசையறியாட்டால்பொய்யாகும்நூலெண்ணே (௫௫௫)

நூலேதுசெய்யும்நுழையாட்டால்வாமத்தில்
பாலோடுவன்னம்படைத்தாலும்பாங்கல்ல
கோலோடுகுலமுங்கோடிநிருவாணி
மேலோடுவண்டம்விரியவறைவானே (௫௫௬)

(நாகசுத்தி)

அறையாமலீசனகலாமல்வாதங்
குறையாமல்வாமத்தின்கூறோடுபூசைசெய்
நிறைபாகநில்லுநிமிஷத்திற்சித்தியாந்
துறையாமுறையெல்லாஞ்சொன்னேனான்சித்தரே (௫௫எ)

சித்தானநாகந்திறமாகக்கட்டுண்ண
மத்தானசித்தரேவகையாகக்கேளுங்கள்
கொத்தானநாகத்திற்குத்தூநுணலைநெய்
சத்தானசாரத்தில்தன்னுக்குள்சாய்த்திடே (௫௫அ)

சாய்த்திடுங்காலந்தணல்வைத்துருகையிற்
பாத்திடுநெய்யைப்பருவமாய்க்குத்திவா
காத்திடவாருகலருபதினொன்று
ஆத்திடும்வில்லைபோலாகுங்காண்சுத்தியே (௫௫௯)

(நாகக்கட்டு)

சுத்தித்தநாகத்தைச்சூட்டிக்குகைவைத்து
பத்தித்தக்கல்லுப்பும்பாங்காம்வெடியுப்பும்
ஒத்தித்தகாரமொருமூன்றுகட்டினம்
மத்தித்தநாகத்துகந்தவிடைமூன்றே (௫௬௰)

மூன்றும்பொடித்துமுழங்கவேதூவிவா
ஊன்றியேவாங்கியுறவாகக்கட்டுண்ணும்
நீன்றியநாகந்திலைத்தாடுங்கண்விட்டு
தான்றிப்புகைத்திட்டார்தாக்குமுறையொன்றே (௫௬௧)

முறையானநாகமுதற்றாக்கட்டிது
அறையானசூதத்தையமளியாய்க்கொன்றிடுந்

துறையானசாரமுஞ்சூழ்கட்டுங்காரமும்
நிறையாய்ப்பொடிசெய்துநீட்டிவார்சூதமே (௫௬௨)

(நாகக்களங்குசெந்தூரம்)

சூதமும்நாகமுஞ்சூழ்ந்தேயுருக்கையிற்
போதவுஞ்சாரப்பொடிதூவவசையாது
கோதவிரண்டுங்குமறியுருகையில்
மாதையதங்கத்தைமாட்டிப்பாதியே (௫௬௩)

பாதியையூன்றப்பருவத்தில்வாங்கிநீ
கோதிமணிடைக்குமுறப்பொடியாக்கி
நீதியாம்கெந்தகம்ரொட்டிப்பதில்கூட்டி
ஆதியாம்வீரமதுகெட்டுக்கொன்றிடே (௫௬௪)

ஒண்ணாகவஞ்சுமுறவாகக்குப்பியிற்
பண்ணாயடைத்துப்பதித்திடுவாலுகை
தெண்ணனதீமூட்டுசிவந்தபதம்பாரு
கண்ணனசெந்தூரங்காட்டிப்பசும்பொன்னே (௫௬௫)

பொன்னாகலோகத்திற்பூட்டிவாய்நூற்றொன்று
பண்ணனநாகம்பழுக்குஞ்சுகம்பாரு
எண்ணதுனாக்கெல்லாமேற்றமிதுவாகும்
வண்ணனிருவாணிவாசித்தபீடமே (௫௬௬)

பீடமாய்நின்றபிலத்தமகாநாதம்
நாடவேவேண்டில்நலமாகப்பூசைசெய்
தேடவேவேண்டாஞ்சித்தியாமெட்டெட்டு
மாடவேநாகத்திநுண்மையினங்கேளே (௫௬௭)

(சூதம் நாகம்-அயர்தங்கச்செந்தூரம்)

கேளேயிந்நாகங்கெடியாய்ப்பலமொன்று
வாளேயிருப்புவளமாய்ப்பலமொன்று
தாளேநல்தங்கந்தனையும்பலமொன்று
ஏளேநற்சூதமிருமூப்பலமிதே (௫௬௮)

பலமானவாறப்பருகியுருகையில்
தலமானகெந்தகசத்திணிலோர்பலம்
குலமாயுருக்கியேகொட்டிப்பொடியாக்கி
நலமாகரொட்டிப்புநாட்டதிற்கெந்தியே (௫௬௯)

கெந்தியுடன்கூடக்கேளிருபத்தொன்றும்
அந்தித்துக்குப்பியடைத்தேத்துவாலுகை
பந்தித்தெரித்திடுவயிரவர்பூசைசெய்
கொந்தித்தசெந்தூரங்கொடியவருணனே (௫௭௰)

அருணனுஞ்செந்தூரமாயிரத்தொன்றிட
வருணனைப்போலேவருஷிக்குஞ்சொர்ணந்தான்
தருணத்தினம்பார்த்துசரணிக்கக்குண்ணிதான்
கருணைபராசத்திசாந்தியாந்தேகமே (௫௭௧)

தேகத்தின்காந்திதான்சிற்பரத்தோடொக்கும்
வாசொத்தபூரணம்வாவாவென்றேகூவு
மாகத்திறமலமகண்டதிராகாரம்
பாகொத்தசித்தரோபாரிதிருண்மையே (௫௭௨)

ஆண்மைதான்சொல்லவடங்காதுநாகத்தை
வாண்மையாய்ப்பார்த்துமதிகுடிகண்டிலார்
நீண்மையாய்த்தாய்க்குநிலைத்தமண்காணுத
ஏண்மையேசித்தரோயிதற்கொன்றுமொவ்வாதே (௫௭௩)

(நாகச்செயநீர்)

ஒவ்வாதுநாகத்துதித்தவனைநகேளு
செவ்வாகச்சுத்தித்தநாகம்பலமொன்று
இவ்வானரூதத்தைச்செந்நிரபாதிகாண்
நவ்வாய்ப்பொடிசெய்துநாட்டிடாய்கல்வமே (௫௭௪)

கல்வப்பொடிமேலேகண்டயிடைவீரம்
வல்லொலாக்கதூவியேவைத்திடுமூலையில்
செல்வச்செயநீர்திரண்டோடுவெண்மையாய்ச்
சொல்லொலாத்தவேதைதுதிக்கநாவில்லையே (௫௭௫)

நாவில்லாநீரின்பேர்நாகச்செயநீர்காண்
காவில்லாக்காடிகாரத்தின்வேதைகேள்
தாவில்லாநீருக்குள்தானேதுவைத்ததை
மேவில்லாதங்கத்தகட்டுமேற்சுற்றிடே (௫௭௬)

சுற்றியேதோய்த்துச்சுகமாகவாட்டினால்
பற்றியேயுள்ளுக்கும்பாரீரிதனுண்மை
அற்றிப்பரிதானதற்குநாற்கொண்டேற்றி
மற்றிமயிர்சுற்றிமாட்டிடாய்தீபமே (௫௭௭)

(காடிகாரச்செந்தூரம்)

தீபத்தில்வாட்டசிவப்பாகுமட்டுக்கும்
கோபத்தைவிட்டிடுகொட்டுமதமச்சை
ஆபத்தைநீக்கிடவாத்தாளைப்பூசைசெய்
சோபத்தைநீக்கிடுஞ்சொர்னவருடமே (௫௭௮)

வருடம்பொருந்திடுமாதாவைப்பூசித்தால்
அருமிபாங்காரமருணநிறமாகும்
பருசியாலோகத்திற்பாய்ச்சிடுநூற்றொன்று
புருஷியக்காரம்போற்பொட்டிலைவாட்டிடே (௫௭௯)

(இணங்கன்செந்தூரம்)

வாட்டுமிணங்கன்வளமாய்ச்செந்தூரிக்கும்
ஓட்டுநவலோகத்தொருநூற்றில்வேதைதான்
காட்டுத்துரியமுங்கட்டினசாரமும்
நீட்டுமுன்தீபம்நிலையாய்ச்செந்தூரியே (௫௮௰)

(துரிசிசாரம் கல்லுப்புசெந்தூரம்)

செந்தூரமுன்போலேசெய்திடுங்கல்லுப்பை
பந்தூரமஞ்சுமேபாங்காகுஞ்செந்தூரம்
எந்தூரமோடுமெனக்கேழ்க்கில்நூறேடும்
மந்தூரும்வேதையைக்காணீர்பெரியோரே (௫௮௧)

(நாககுரு)

பெரியோரேநாகம்பிலக்ககுருபண்ண
பரியோமுன்னகத்திற்பாய்ச்சிடச்சமன்தங்கம்
சரியேநற்குதமுந்தாக்குவதுக்குள்ளே
வரியோடுகெல்வத்தில்வைத்துப்பொடிசெய்யே (௫௮௨)

பொடிக்குச்சமனகப்பூட்டுசெவ்வீரத்தை
பொடிக்குச்சமனகப்பூட்டிடுவெண்கண்டாய்
பொடிக்குச்சமனகப்பூட்டிடுயெருக்கம்பால்
பொடிக்குத்துவளப்பொலிவாயனாத்திடே (௫௮௩)

அனாத்தேயுருட்டியடவாகலேசுபோல்
தனாத்தேநல்வில்லையாய்ச்சாரவுலர்த்திடு
புரத்தேநல்லண்டப்பொடிபோடுகீழ்மேலுந்
துரத்தேபுடமொன்றருழக்குருவாமே (௫௮௪)

(தங்ககுரு)

குருவானநாகங்கொடுக்குமுறைகேளு
அருவானவொன்பதிலந்திப்பாய் நூற்றொன்று
திருவாகுமாற்றுசிறக்கப்பதினாறு
விருவாகுந்தங்கத்தின்மேற்பூசிப்போட்டிடே (௫௮௫)

போட்டிடிற்றங்கம்புடத்திற்குருவாகும்
மாட்டியவேலைதவளவில்லையானசொல்
தீட்டியபூரணம்நிர்மலசித்தரே
காட்டியநாகங்களைசொல்லக்கூடாதே (௫௮௬)

(சாரச்செயநீர்.)

கூடாதசாரச்செயநீர்குறிகேளு
தாடாங்கிளிஞ்சிசமனிடைசாரமும்
நீடாய்ப்பொடித்துநிறுத்திவைமூன்றுநாள்
வாடாய்க்குகைக்குள்ளேவைத்திடாய்காரமே (௫௮௭)

காரமுருகையிற்காட்டுவாயிப்பொடி
தாரவேதீயினிற்றண்ணீர்போல்நின்றோடும்
வேரவேகொட்டியுறவாய்ப்பொடிசெய்து
ஆரவேகல்வத்தமர்ந்தபனிலவயே (௫௮௮)

வைத்திடநீராகுமகத்தாஞ்செயநீராங்
கைத்திடநாகங்கருலோகஞ்சுத்தியாம்
பைத்திடப்பாஷாணம்பலமற்றுமூறல்போம்
மொய்த்திடவாட்டுமுதற்றரநீரிலே (௫௮௯)

(வெடியுப்புசெயநீர்குரு)

நீராகியுப்புநிலைக்குமுறைகேளு
ஆராங்கிளிஞ்சிச்சதையையுலர்த்திட்டு
பாராய்கரண்டியிற்பாங்காய்வெடியுப்பு
தாராயுருகையிற்றூக்காய்சதையிதே (௫௯௰)

சதையுண்டிணங்கன்றம்பித்துத்தின்றிடும்
மதையுண்டுவாங்கமகத்தாம்ஜயநீருங்
கெதையுண்டபாண்டம்பொற்கெடியாகவே
ததையுண்டநீர்தான்பகரமுடியாதே (௫௯௧)

முடியாதநீருமுன்சாரச்செயநீரு
பிடியாய்ச்சரிகூட்டிப்பேதித்தால்வெண்ணெயாம்

வடிவான வீரம்வழங்கியகற்பூரம்
சடிபாம்வெண்கண்டர்கலந்தங்குவைத்திடே (௫௬௨)

(சாக்குகட்டு)

வைத்தேயிதற்குள்ளேமாட்டிடுவெண்காரம்
கைத்தேசவர்க்காரங்கடுஞ்சுன்னத்தோடஞ்சும்
ஒத்தேபிடைதானுமஞ்சுமொருபலம்
லபத்தேயிருந்தரும்பாச்சாய்டலம்ரண்டே (௫௬௩)

ரண்டோடுவஞ்சும்நிலையவேமத்திக்க
தண்டோதயிர்போல்தயிர்வெண்ணெயேயாகுங்
கண்டேசரக்கெல்லாங்கட்டியேவாட்டிட
பண்டேகதையல்லபார்க்கையிற்கொல்லுமே (௫௬௪)

சொல்லுமேபாஷாணக்கூட்டயினமெல்லாங்
கொல்லுமேதான்சாரக்காரக்குலமெல்லாங்
கொல்லுமேயென்பான்கொடிதானலோகத்தை
கொல்லுமேசூதங்சேர்பத்திலானையே (௫௬௫)

(செயநீரில்கட்டுசரக்கு)

ஆனையைப்போலேயசைந்தாடுஞ்சூதன்தான்
பூனையைப்போலேபுலம்பித்தவித்திடுஞ்
சேனையைக்கட்டுந்தெளிவாம்நவநீதம்
வானைகடந்தோடிவாழ்கின்றசித்தரே (௫௬௬)

(துரிசிசுன்னம்)

சித்தானசாரச்செயநீரில்ரசவ்வீரங்
கொத்தாய்கனாத்துக்குழப்பியேகண்டர்மேல்
தித்தாரப்பூசிநிலையொருமண்டலம்
வித்தாரவெய்யில்விளங்கநீபோட்டிடடே (௫௬௭)

போட்டிடப்பச்சைப்பொருமிக்கழண்டோடி
நீட்டிடக்கண்டால்நிலைத்தாடும்வெண்ணெய்போல்
ஆட்டிடக்காணவேவகண்டநல்நீதபும்
கூட்டிடவேமார்க்கங்கொள்கின்றேன்சித்தியே (௫௬௮)

(சாரக்கட்டு)

சித்திவெடியுப்புச்சேர்ந்தசெயநீரில்
பத்தியசாரத்தைப்பாங்காய்த்துவைத்துநீ
அத்தியமண்டலமப்பாவெயிலில்வை
முத்தியசாரூமுதற்றரக்கட்டிடே (௫௬௯)

(சீனக்கட்டுவெண்காரக்கட்டு)

கட்டிடுமிப்படிகடியதோர்சீனத்தை
ஒட்டிடுமிப்படியுறவாகவெண்காரம்
மட்டிடுமிப்படிவளமானகல்லுப்பும்
பட்டிடுங்கண்டாய்ப்பச்சைக்கிளிகட்டே (௬௱)

(சல்லுப்புக்கட்டு)

கட்டுந்துரிசியுங்கடியதோர்காரமும்
வெட்டுநற்சாரமுடன்சேர்ந்தசீனமும்
மட்டுநற்பூரம்விளங்கியகல்லுப்புக்
கொட்டுமெமரிமலத்தினீர்கூர்மையே (௬௱௧)

கூர்மையேடேழுங்குறிப்பாய்ச்சமபாகம்
வார்மையாய்வாய்நீர்மத்தித்துவீரன்மேல்
தார்மையாய்க்கட்டித்தணல்வாட்டித்திபமேல்
ஓர்மைசெய்சீலையுயறவேவாட்டிடே (௬௱௨)

(வீரக்கட்டு)

வாட்டிடவாட்டிடவளமாகச்சவ்வீரம்
வாட்டிடவாட்டிடவகையுமணிபோலே
நீட்டிடத்தங்கம்நிமிஷத்தில்நீராகும்
பூட்டிடவேதையும்போகுங்காண்தூரமே (௬௱௩)

தூரமுமோடிடுஞ்சூதத்தைக்கொன்றிடும்
பாரமுமல்லபலகாரச்சாரங்காண்
நேரமுமில்லைநிமிஷத்திலுப்புநீர்
ஆரமும்பூண்டநம்மாத்தாளறைந்ததே (௬௱௪)

அறைந்தாளேயாத்தாளவளைநான்பூசிக்க
நிறைந்தாளேயுள்ளேநிலைத்தமதுவாலே
அறைந்தாளேமூலத்திலாமென்றுமேலோடி
குறைந்தவள்நாலுக்குள்கூட்டிநாள்பார்த்தேனே (௬௱௫)

பார்த்தேனேஞானத்தைப்பட்டம்பகலாக
சேர்த்தேனேவாசிக்குறிப்பாகவொன்பதில்
தோர்த்தேனேவாசனைசூதத்தைக்கூட்டிநான்
போர்த்தேனேசாரணைப்பூட்டினேன்கண்டிடே (௬௱௬)

(உபரசங்கள்சத்து)

கண்டிடுகெட்டியசாரமும்மோரிடை
தண்டிடுவெண்காரந்தன்னொடுவீரமும்
பண்டிதநாளகச்சத்தும்பரிந்திடு
மண்டிடுக்கண்டாவளமானரங்கியே (௲௱௭)

ரங்கொடுவாறும்நிறைதான்சரிகூட்டி
பங்கானவுப்புநீர்பாங்காயரைத்திட்டு
மங்காயுபரசம்வாங்கிடச்சத்ததில்
தங்காமல்நாளொன்றதாக்கியுருக்கிடே (௲௱௮)

உருக்கியசத்தாகுமுபரசமெல்லாந்தான்
பருக்கிடலோகம்பகுந்தாடுந்தண்ணீர்போல்
நெருக்கிடரத்தினம்நிமிஷத்தில்நீராகும்
சொருக்கிடுசாரணைசூதத்திற்சோதியே (௲௱௯)

சோதித்துச்சூதத்தைச்சூட்டடாசாரணை
ஆதிக்கெவனமடவாவெடுச்சாது
போதிக்கமாட்டாதுபிலமானகாயத்தை
வாதிக்கியாகும்வகுத்ததோர்ஞானமே (௲௱௰)

ஞானங்கொடுப்பாளேநாடினல்மாதானவ
பானங்கொடுக்கையில்பரத்துக்கென்றேகொடு
தானங்கொடுக்கையில்தாய்க்கென்றேயுன்னுவீர்
வானந்திறக்குமேவாதமுஞ்சித்தியே (௲௱௰௧)

சித்தியாம்பானத்தால்சேர்ந்திடுமெட்டெட்டு
முத்தியாம்பானத்தால்மூப்பாமுஞ்சூனியம்
பத்தியாம்பானம்பரத்திலேசேர்ந்திடுஞ்
சத்தியாம்வேதாந்தந்தாயவள்கண்டிடே (௲௱௰௨)

கண்டவர்சித்தர்கள்கவனிகள்ஞானிகள்
உண்டவர்யோகிகளொளிவாடமறையோர்கள்
ஒண்டவோருத்திரனுடனேந்துபேர்களு
மண்டியேபூசித்துமகத்துவமானோரே (௲௱௰௩)

மானோரேயிவர்கள்தான்மாதாவைப்பூசித்து
தேனாரவேயுண்டுசேர்த்தார்பதிதோறும்

வாணாரத்தாண்டலாமாயமும்போக்கலாந்
சோணனுங்கூடுக்குறிக்கெய்தும்பானமே (சூ௱௯௪)

பானத்தைவாங்கையிற்பாங்காய்வசாரத்தை
ஊனத்தைவிட்டுவுறிஞ்சியேபூசித்து
சீனத்துநின்றசிகாரத்தைபூநிட
வானத்துநின்றமனோன்மணிகாண்பனே (சூ௱௯௫)

காண்பாள்மனோன்மணிகண்டிடுபூரணம்
வீண்பாழாய்நாளைவிட்டுமறவாதே
ஏண்பாகநித்தமெய்துமோவெண்ணாதே
பூண்பாகச்சொல்லுமேறன்பொலிவாகச்சித்தியே (சூ௱௯௬)

(சமாதிலேகியம்)

சித்தியாமூலிகைசேருபலமொன்று
வெத்தியவண்டமுறப்பொடுமூன்றதில்
மத்தியபத்திரிவழங்கியசாதிக்காய்
அத்தியசீரகமதனில்கிராம்பிடே (சூ௱௯௭)

இட்டேகசகசாயியல்சாதிபத்திரி
மட்டானசாரப்பருப்புடனேழையும்
தட்டேயிடைதான்சரிநாக்குக்கால்பலம்
மட்டானவார்நெட்யுறவார்த்தனைத்திடே (சூ௱௯௮)

அனைத்ததோரேழுமதுமுன்னீரண்டையும்
வினைத்தாவிஃபாலிலிணங்கவனைத்திடு
தலைத்தேகொதிக்கையில்சர்க்கரையீர்பலம்
நினைத்தேகுழம்புக்குள்நீட்டிமதுவாரே (சூ௱௯௯)

வாரோயுருட்டிடுவைத்துவைவஸ்துவால்
வாரோயுதயத்தில்வாசமெல்லாந்தீர்த்து
பாரோசமாதியிற்பாக்களவேயுண்டு
யாரோனும்பிறகுவெல்லாம்பொசித்திடே (சூ௨௱)

பொசிக்குமுறையெல்லாம்பூரணிக்கேயென்னு
மெசிக்கிநற்தோடமுமிங்கிழைவாராது

மசிக்குமறவாதேமகத்தானசித்தரோ
தசிக்கவேமந்திரந்தாக்காயீசமாதியே (௬௱௨௧)

சமாதியையுன்னிடுதாயானப்பூசித்து
அமாதிக்கிரிகையாயாகாத்தைச்செய்யாதே
கமாதிபொறிவழிகண்டுதீடோடாதே
புமாதியப்பொன்னாசைபூட்டாதேபொல்லாதே (௬௱௨௨)

பொல்லாதவானந்தம்பூட்டிடுங்காலத்தில்
மல்லாடாதேநின்றுவார்த்தைகள்பேசாதே
கொல்லாதேபொன்றையுங்கூடாதேபெண்ணோடு
சொல்லாதேதீனியிற்சேர்வாயகண்டமே (௬௱௨௩)

அகண்டஞ்சிவமாச்சுவாத்தாள்விளக்காச்சு
தகண்டவிரண்டுஞ்சமாசாரப்பூரணம்
உகண்டவுன்மனியுமுசாரப்பதிதோன்றும்
சிகண்டியந்தாண்டிடிற்சின்மயங்காணுமே (௬௱௨௪)

காணுமேஞானங்கடுகப்பலித்திடுங்
காணுமேயோகங்கடுகப்பலித்திடுங்
காணுமேவாதங்கடுகப்பலித்திடுங்
காணுமேகாயங்கடுஞ்சித்திமுத்தியே (௬௱௨௫)

முத்திக்கிதைவிட்டாற்மூவுலகெய்யாது
சித்திக்கிதைவிட்டால்தேடியுங்கிட்டாது
பத்திக்கிதைவிட்டால்பரத்துக்குவாளல்ல
கத்தியேவேதங்கடசியிலுண்மையே (௬௱௨௬)

உண்மையிதைவிட்டுசாவுமொன்றில்லையே
வண்மையாய்ப்பார்த்துமகிழ்ந்தார்பெரியோர்கள்
தண்மையாய்நாயேனுந்தக்கபடிசொன்னேன்
நன்மையாய்நந்திநாடிமுறைப்பாடே (௬௱௨௭)

முறைப்பாடுகேளுமுதல்நூற்றுப்பனிரண்டு
மறைபாடலெகில்வயித்தியம்நான்சொன்னேன்

நிறைபாடத்தாய்விடுதின்மலஞ்சித்தர்க்கு
துறைபாடுவந்நூற்றில்சூட்டுமுறைமேகளே (௬௨௮)

கேளேமுன்சித்திக்கெடகடச்சோதனை
வாளேநற்கற்பமகத்தானமெய்ஞ்ஞானந்
தாளேகுளிகைசமைந்திடச்செந்தூரம்
நாளேபரிக்குருநற்கட்டுமார்க்கமே (௬௨௯)

மார்க்கங்கவனம்வழங்கும்புரியட்டம்
ஏர்க்கவேயண்டமெழிலாகவுற்பனம்
பார்க்கவேமேருவின்பட்டணந்தெய்வங்கள்
சேர்க்கமனோன்மணிசித்துள்ளுஞ்சொன்னேனே (௬௩௰)

சொன்னேனேசாரணைசொர்ணாவிக்குரு
சொன்னேனேசாரக்காரத்தின்சூட்சத்தை
சொன்னேனேயாத்தாளைசுகமாகப்பூசிக்க
சொன்னேனேயாத்தாள்சூழ்பூசைமார்க்கமே (௬௩௧)

மார்க்கமாய்ச்சக்கரம்வழங்கியவட்சரம்
மார்க்கமாய்வாசியைவைக்கமுறைப்பாடு
மார்க்கமாய்மூக்கில்மனோன்மணிமெய்ஞ்ஞானம்
மார்க்கம்பிடரிமகத்தானயோகமே (௬௩௨)

யோகமாய்மூலத்துதிக்கின்றவென்னந்தி
பாகமாய்நெஞ்சிற்பகிர்ந்தாவியோசமாம்
யாகமாய்நின்றவசபையவெண்ணுங்குந்
தாகமாய்முப்பாழுந்தப்பாமல்சொன்னேனே (௬௩௩)

சொன்னேனையந்நூறுசூட்டுமுன்னூயிரம்
பன்னப்பலந்தான்பகருறேன்வல்லேலோ
சின்னஞ்சிறுபிள்ளைசேர்ந்தநூறெஞ்ஞான்றும்
மன்னஞ்சிவஞானவாசிக்குள்வாழ்வரோ (௬௩௪)

வாழ்வார்மலைதோறும்வாதத்தோடெட்டெட்டுந்
தாழ்வாவதில்லைசகலமகாசித்தி
கேழ்வாமூன்றுயிரங்கெடிந்தவறுநூறுஞ்
சூழ்வாகதித்தஞ்சுகமாகப்பார்த்திடே (௬௱௫)

பார்த்திடுமாயிரம்பாட்டிலுமெத்தவே
கோர்த்திடுமறுநூறுகோட்டினேன்ஞானத்தை
சேர்த்திடுரண்டுந்திரட்டையுமொன்றாகக்
கார்த்திடுஞ்சித்தைகடைந்தெடும்வெண்ணெயே (௬௱௬)

வெண்ணெய்க்கடைந்தேன்விளைந்தேழுலட்சத்தில்
எண்ணெயைப்போலேயிதையுமுருக்கினேன்
கண்ணைத்திறந்தகடுஞானவேதாந்தி
எண்ணைக்கும்பார்க்கலாமிந்தநூல்முற்றுமே (௬௱௭)

திருமூலர்வயித்தியம்

அறநூறு.